Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 15/00
දිනමුරසු වාරමලර් ஜூலை 27–ஆக.02, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 521

## 20 கறுப்பு ஜூலையின் நினைவுகள்



## 'வெலிக்கடைப்' பதிவுகள்!

## பொறியில் சிக்கிய 'கர்வம்'

## ஆசை காட்டி மோசம் செய்த அபிராமி!

சூடு – சுவை – சுவாரசியம் அதுதான் தினமுரசு

## ஆன்மா

இயற்கையிலுள்ள உண்மை என்பது ஆன்மாவே. அந்த உண்மைப் பொருள் ஆன்ம ஒளி தமது உடல்களின் மூலமாகவும், மனங்களின் மூலமாகவும் இயங்குவது, பேசுவது ஆகிய எல்லாத் தொழில்களையும் செய்கிறது. அந்த ஆன்மாவின் ஆற்றலை, உணர்வை அடிப்படையாகக் கொண்டுதான் இயற்கை பல வகைகளில் செயல் புரிகிறது. ஆன்மாதான் தமது எண்ணங்கள் அனைத்திற்கும், உடலின் செயலிற்கும் மற்ற எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கின்றது. அது ஒவ்வொன்றிற்கும் தனது ஒளியைத் தந்தாலும் நன்மை, தீமைகளாலோ, இன்ப துன்பங்களாலோ, தட்ப வெப்பங்களாலோ, இயற்கையின் பிற தீமைகளாலோ பாதிக்கப் படாத அதி சக்தி மிக்கது.

ச.உமயா, வத்தளை.

# ஆன்மீகம்

## நேர்மையாளரோடு ஆண்டவர் என்றும் உள்ளார்



வன்முறையாளரைக் கண்டு பொறாமை கொள்ளாதே! நேர்மையற்றோரை ஆண்டவர் அருவருக்கின்றார். நேர்மையாளரோடு அவர் உறவுகொள்கின்றார். பொல்லாரது வீட்டின் மேல் ஆண்டவனது சாபம் விழும். அவருக்கு அஞ்சி நடப்போரின் உறைவிடங்களில் அவரது ஆசி தக்கும். (நீதிமொழிகள் 3-32-33)

நம்முடைய தினசரி வாழ்வில் பயங்கர வன்முறைச் சம்பவங்கள் புரிபவர்களைக் கண்கூடாகக் காண்கிறோம். தாங்கள் செய்வது தவறென்று தெரிந்தும் தங்களுடைய சுக போக வாழ்விற்காக இப்படியான காரியங்களைச் செய்கின்றனர்.

இப்படியானவர்கள் கடவுளின் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். கடவுளின் சாபம் இப்படியானவர்களின் பரம்பரையையே இல்லாதொழித்துவிடும். கடவுளின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கும் எந்தவொரு குடும்பமும் அவரது ஆசியை நிறைவாகப் பெற்று வெட்கப்பட்டுப் போகாது மகிழ்வுடன் வாழ்வது நிச்சயம். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் அவரின் கட்டளையை அனுசரித்து நடக்க வேண்டுமென்பதே அவரது விருப்பம்.

எனவே நாம் எந்த ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்போதும் அவரை நினைந்து அவர் பாதம் சமர்ப்பித்துத் தொடங்குவோமானால் நமது காரியம் வெற்றி பெறுவது மட்டுமல்ல நிறைவான அவரது ஆசி எம்மோடு என்றும் நிலைத்திருக்கும்.

ஜோசப் அருள்சாமி.

## அல்குர்ஆன் அருள் மொழிகள்

நீங்கள் யாருடனும் பேச விரும்பினால் எப்போதும் மெல்லினமான அறிவு நிறைந்த அழகான பேச்சுக்களையே பேசுங்கள். அது உங்கள் இம்மை, மறுமை வாழ்வில் வெற்றியைத் தரும்.

பொய்யுடன் மெய்யைக் கலந்துவிட வேண்டாம். அது உண்மை என்று தெரிந்திருந்தும் மெய்யை மறைக்க வேண்டாம்.

நேர்வழியில் செல்ல முயற்சி செய்யுங்கள். அது உங்களுக்கு நன்மையைத் தரும். அறிவில்லாதோரின் பாதையைப் பின்பற்றாதீர்கள். அது உங்களுக்குத் தீமையைத் தரும்.

நீங்கள் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் கவனத்துடன் இருங்கள். எப்பொழுதும் உண்மையாளருடன் இருங்கள். அருள் புரியப்படுவீர்கள்.

உங்கள் மனைவிகளாகிய அவர்கள் உங்களுக்கு ஆடையாய் இருப்பார்கள். கணவர்களாகிய நீங்கள் அவர்களுக்கு ஆடையாய் இருங்கள்.

எம்.சி.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல. 518

பரிசுக்குரிய கவிதை

### படுத்துகிற பாடு!

தெருப்பிச்சை எடுத்து
தேடித்தா என்று - என்னை
படிக்க விடாமல் - நீ
படுத்துகிற பாட்டை
பொலிஸுக்குச் சொல்லி
பிடிச்சுக் கொடுக்கப்போகிறேன்!

டாக்டர்.நகீம், அட்டாளைச்சேனை.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### நினைத்துப் பார்

அடி உதவுவது போல் அண்ணன் தம்பி
உதவ மாட்டார்கள் என்பார்கள், ஆனால்
அப்பா அடிப்பதை தப்பாக நினைத்து
தடுக்க முயன்றால் எப்போது நீ திருந்துவாய்?
நினைத்துப் பார்.

ந.ஜெகதீஸ், மஹாகுடுகல.

### தடி விடு....

ஏ மனிதனே...புரியவில்லையா?
கண்ணைக் காக்க
இமைபிடுங்கும்
வேலை ஏன்?
மனிதனை மனிதன்
கொன்று தின்று
விடுதலை வாங்கி
தருவது எப்படி?
தடி விடு....
பிடி அகிம்சையை....
நிச்சயம்
மலரும் உலகம்
விடுதலையாய்
எனக்கும் உனக்கும்....!

சண்முகம் சிவகுமார், கொட்டகலை.

### புத்தி புகட்ட....

அடி உதவாது!
அகிம்சா வழிதான் உதவும்
அன்றைய அண்ணல் காந்தியின்
வழியை இன்றைய
நாமும் பின்பற்றினால் தான்
அப்பா நம் நாடும்
செழிக்கும் - இனயுத்தமும்
மறையும் என்று பிள்ளை
தந்தைக்குப் புத்தி
புகட்டுதா!


ஸினத் எம். ஸாபிர், ஹேனமுல்லை.

### அநுபவ அடிகள்

அன்னை அடித்தாள்
அன்பைக் கொடுத்தாள்!
தந்தை அடித்தார்
தயவினைத் தந்தார்!
ஆசான் அடித்தார்
அறிவினைத் தந்தார்!
அத்தனை அடிகளும்
அப்போது வலித்தன
இத்தனை அநுபவங்கள்
அதனால் கிடைத்தன!

நா.ஜெயபாலன், பிபிலை.

## கவிதைப் போட்டி இல.521



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.08.2003

கவிதைப் போட்டி இல.521
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தான் பெற்ற மைந்தனால்?

பெற்றெடுத்த மாதாவோ
பூமா தேவியின் மடியினிலே!
பெயர் வைத்த தந்தையாரோ
மது அரக்கனின் அரவணைப்பிலே!
ஒன்றும் அறியா மைந்தனோ
வயிற்றுப் பசி போக்க கூலிக்காரனாக
பணக்கார எஜமான்
வீட்டினிலே - தெரியாமல்
சிறு தவறு செய்தாலும்
அடிப்பார்கள் பெரிய
தடியாலே!

இராமையா தமிழ்வாணன், அப்புகஸ்தனை.

### உணர்ந்து கொள்

நித்தம் நீர்
குடித்தடி(ழி)த்தால்
முத்தம் கொடுத்து வளர்த்த
குழந்தையும்
சத்தம் போட்டெதிர்க்கும்
வல்வை

நெற்கொழுதாசன், வெள்ளவத்தை.

### அன்பினால் புகட்டு

மனிதன் எழுதிய
மடமைப் பழமொழி
அடியாத மாடு படியாது
அடித்தால் வடுதான் ஏற்படும்
வளம் பெறமாட்டான்
அன்பினால் அறிவைப்
புகட்டுமையா.

எம்.சி.கலீல், கல்முனை–05.

### மிரட்டலுக்கு அடங்காதவன்

கண்ணைப் பிதுக்கி
நாக்கை உருட்டி
தடியை ஓங்கும் தந்தையே
கொஞ்சம் தள்ளிவை தடியை
நீ என்னைத் தண்டித்தால்
நானும் ஒரு உலகை மிரட்டும்
தாதாக்காரனாகி விடுவேன்
என்று சொல்லுகின்றானோ
இவன்

ஏ.புவனேந்திரன், வட்டகலை.

### கட்டழகுச் சிங்கம்

கள்ளு வாங்கி வரச் சொல்லி
கண்டிக்கும் தந்தைக்கு
கம்பீரமாகத் தன் கையால்
கம்பைத் தடுக்கும் - இச்
சிறுவன்
கட்டழகுச் சிங்கம்.

புஸ்பநாதன் நிர்மலா, ஹப்புத்தளை.

# உங்கள் பக்கம்

### படுத்துகிற பாடு!

திருகோணமலை மூதூர் வைத்தியசாலையில் நடக்கும் விரும்பத் தகாத விடயங்கள் பற்றியே எழுத விரும்புகிறேன். மூதூர் வைத்தியசாலையில் போதியளவு வைத்தியர்கள் இல்லை. இருந்தும் தற்சமயம் இங்கு கடமையாற்றி வரும் வைத்தியர் இளம் வயதுடையவர். அவரின் வயது வைத்திய சேவைக்குப் போதுமா என்பதல்ல எனது கேள்வி. அவரது விசமப்போக்குத் திருத்தப்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

இவரிடம் நோயாளியாக வருபவர்களிடம் குறிப்பாகப் பெண்களிடம் மிகவும் கீழ்த்தரமான நடைமுறைகளைக் கையாள்கின்றார். அதாவது காலில் வருத்தம் என்றால் இடுப்புக்கு கீழேதான் செக் பண்ண வேணும் என்பார். வயிற்றுவலி என்றால் கழுத்துக்கு கீழ்தான் செக் பண்ண வேணும் என்பார். இவ்வாறாக பெண்கள் தொடர்பாக இவரின் அணுகுமுறை பெரும் சங்கடமாக அமைவதாக எங்களூர்ப் பெண்கள் விசனப்படுகிறார்கள். உதாரணமாக ஒரு பெண் தனது கர்ப்ப காலத்தில் இவரின் கை வரிசைகளை அவதானித்ததால் பிரசவ காலத்தில் வைத்தியசாலைக்குச் செல்லாமலே வீட்டிலேயே குழந்தைப் பேறு நடைபெற்றதாக அறிந்தேன். சாதாரணமாக தெய்வத்துக்குச் சமமாக எண்ணக் கூடிய இந்த மருத்துவத் தொழிலை இச்சைக்கு அடிமையாக்கிச் செயலாற்றும் இவரும், இவர் போன்று இருக்கக் கூடியவர்களும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

திருத்திக்கொள்வதற்கு சம்மந்தப்பட்டவரிடமே சொல்ல பெரும் கூச்சமாக இருப்பதால் வாய் கூசும் படியாக உண்மையாக இங்கு நடக்கும் சம்பவங்களை வர்ணிக்காமல் நாகரிகமாக இங்கு எழுதியிருக்கிறேன். ஒரு சிலர் இவ்வாறு சிறுமைத்தனமாக நடந்து கொள்வதால் அர்ப்பணிப்போடு இத் தொழிலில் இருப்பவர்கள் கூட சரியாக இனங்காணப்பட மாட்டார்கள். எனவே இவ் விடயம், சம்பந்தப்பட்டவர்களின் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். மூதூர் மருத்துவமனைக்கு பெண் வைத்தியர் ஒருவர் உட்பட பெண் தாதிகளும் சேவையில் நியமிக்கப்பட வேண்டும். அதிகாரம் வாய்ந்தவர்களே! கொஞ்சம் கவனம் கொள்வீர்கள் என நம்புகிறோம்.

எம்.தயாபரன், மூதூர்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


## வாசக[ர்] சாலை

அன்பின் முரசே....
எழுது...எழுது...உன் ஊற்றுகள்
வற்றப் போவதில்லை. எத்தனையோ
எதிர்ப்புகள் உனக்கு. அத்தனையும்
கடந்து உன் வெற்றி நடை கண்டு
அசந்து போகச் செய்கிறது.
தூரத்தில் இருந்து
பார்த்தாலே நெஞ்சைத் தொடுவதாய்
அமைகிறது உன் முன் பக்க அமைப்பு.
புதுப் பொலிவுடன் வெற்றி வாகை
சூடித் தொடரட்டும் உன் பணி.
வாழ்க தினமுரசே!
வாழ்த்துக்கள் கோடி.

எம்.நிவேதா, கரவெட்டி.

தித்திக்கும் முரசே!
அரசியல் தொடர்கள் அற்புதம்.
மறைக்கப்படும், மறுக்கப்படும்
விஷயங்களை
முரசில் மட்டுமே காண முடிகிறது.
அதிலும்
இன்னொருவர் பார்வை எங்களுக்கு
வரப்பிரசாதம்தான். இத்தனை துணிவு
எப்படிச் சாத்தியம்? நினைக்கையில்
மெய் சிலிர்த்துப் போகிறேன். எனது
சார்பில் ஒரே ஒரு விடயத்தைச்
சொல்ல விருப்பம். அதாவது உங்கள்
பக்கம் போன்ற மறைமுகமாக
மக்களுக்கு மறுக்கப்படும் அல்லது
அத்துமீறல்கள் தொடர்பிலான
விடயங்களைக்
கொஞ்சம் விரிவாக்கம் செய்
தால் பிரயோசனமாக
இருக்கும்.
தொலைவிலிருந்து
வாழ்த்துகிறேன்
தொடரட்டும் உன் சேவை.

பி. அருண், அவுஸ்திரேலியா.

பாகுபாடின்றி - உரிமை வழங்கும்
முரசே!....
உன்னை முரசு என்பதை
விட மூச்சு என்பதுதான் சிறந்தது!...
உன்னை எப்படி எல்லாமோ!....
எழுத வேண்டும் எனத் தோன்றுகிறது!
எங்கே!...
நான் கற்றது கைளயவுதானே!....
சொர்க்கம் என்றால் அது
நீ தான் எனக்கு
சொர்க்கத்தைத் தேடுபவர்களுக்கு
நீதான் சொர்க்கம் எனச்
சொல்லித் தரத் தெரியவில்லை!
என்னைப் போன்ற ஜீவன்களுக்கு
நீ தரும் ஆறுதல்
சொல்லில் அடங்காது!
மேலும் நீ வளர - உன் பணி
தொடர என் இதயபூர்வமான
வாழ்த்துக்கள்!....


சு.சுபா, பெபாவெல்

கலைக்களஞ்சியமாக சுடச்சுடத்
தகவல்களை அள்ளித் தருவதில் முரசே
உனக்குத்தான் என்றும் முதலிடம்...
உனது செய்திகள் அனைத்துமே
அருமையிலும் அருமைதான். முரசின்
செய்தி போன்று மட்டக்களப்பு, கொழும்பு
ரயில் சேவையை சிலர் தங்களின் சுய
லாபம் கருதி தடை செய்து வருவது
உண்மையில் கவலை தரும்
விசயமேதான். இதனால் பாதிக்கப் போவது
ஏழை மக்கள்தான்.

சி.பேரின்பராசா, நிலாவெளி - 02.

அயராத பணியில் முரசு!
வர வர
நல்ல தரமாக
அசத்தி வரும் முரசு!
பரபரப்பாக
விற்பனையில்
ஜமாய்த்து வருவதை
காணக் கூடியதாகவுள்ளது!
24 பக்கங்களும்
சிறப்பாகவுள்ளன!
உறுப்பமைந்த எழுத்துக்களும்
விறுவிறுப்பான
அரசியல் ஆக்கங்களும்
அழகான முகப்புப் படமும்
அதற்கேற்ற தலைப்பும்
சூடும், சுவையும்
சுகமான இலக்கிய நயமும்
தகவல் பெட்டியின்
சுவாரசியத் தகவல்களும்
சுவையான கவிதைகளைத்
தொகுத்து வரும் கிண்ணத் தேனும்
தரமானவை!
மனமார்ந்த நன்றிகளை
தவறாமல் கூறவைக்கும்.
ஆன்மீகம் பரப்பும்
அயராத பணி
பாராட்டப்படக் கூடியது.
ஆனாலும் ஒன்று
ஆலயச் செய்திகளையும்
ஆலய வரலாற்றுக் கட்டுரையையும்
அச்சேற்றினால் நன்று!

கவிக்குயிலன், சேனையூர் - 06.




புதுப் புது
விஷயங்களை
புதுப் பொலிவுடன்
தரும்
புத்தம் புது மலரே
உன்னைப் பின்பற்றிக்
கால் பதிக்க எத்தனை
பேர்
படையெடுத்தும் - நின்
வளர்ச்சிக்கு ஈடாகுமோ?
நின் புகழுக்கு
ஒப்பாகுமோ?
மென்மேலும் நீ
வளர்ச்சியடையப்
பிரார்த்திக்கும்
இவள்.

ஸீனுத் ஸாபீர், ஹேனமுல்லை.

## முன்னதாக அனுப்பியது வரைபு நிராகரிக்கப்படலாம் என்ற நிலையில்

# அரசிடமிருந்து இரகசியமான முறையில் புலிகளுக்குப் புதிய யோசனை!

அரசாங்கம் புலிகளுக்குக் கடந்த வாரம் அனுப்பிய யோசனைகளும் புலிகளால் நிராகரிக்கப்படலாம் என்ற ஊகங்கள் வெளிவந்த நிலையில் அவசர அவசரமாக மற்றொரு புதிய யோசனையை புலிகளுக்கு இரகசியமாக அனுப்பியுள்ளது என்றும், அதில் முன்னைய யோசனையில் புலிகளுக்கு வழங்குவதற்கு உடன்படாத பல விடயங்கள் சேர்க்கப்பட்டிருந்ததாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது.

அரசாங்கம் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக கடந்த வாரம் அனுப்பிய இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் தொடர்பில் பல விடயங்களில் புலிகள் திருப்தியற்று இருப்பதால் அவற்றை அவர்கள் நிராகரிப்பார்கள் என்று முன்கூட்டியே அரசாங்கத்திற்கு அறியக்கிடைத்திருக்கிறது.

இதனால் முதல் யோசனையில் புலிகளுக்கு வழங்க மறுக்கப்பட்ட காணி, பாதுகாப்பு, பொலிஸ் மற்றும் இறைவரி தொடர்பான அதிகாரங்களையும் உள்ளடக்கி புதிய யோசனையொன்றை இரகசியமாக வன்னிக்கு அனுப்பி வைத்துள்ளது என மிக நம்பகமான வட்டாரமொன்றிலிருந்து அறியக் கிடைக்கிறது.

இந்த யோசனையில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. புலிகளை எவ்வகையிலேனும் இந்த யோசனைகளை ஏற்கச் செய்து அவர்களை பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டு வரும் விதத்தில் தாராள விட்டுக்கொடுப்புக்களுடன் அரசின் கடைசி யோசனை அமைந்துள்ளதாக தெரியவருகிறது.

எனினும் இந்த மிகப்பிந்திய யோசனையும் புலிகளால் நிராகரிக்கப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக அறிய முடிகிறது.

குறிப்பாக மாவட்டசபைகளை அமைக்கும் விடயத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சில மாவட்டங்களில் நிர்வாக அதிகாரம் புலிகளின் கைமீறிச் செல்லும் சாத்தியம் இருக்கிறது. இதனை புலிகள் விரும்பமாட்டார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க முன்னதாக அரசாங்கம் அனுப்பிய யோசனைகளுக்கு தனது அனுமதி பெறப்படவில்லையென ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

## "போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு எதிரான போர்"

## வாழைச்சேனையில் கல் வீச்சு. வாகனம் சேதம்

இறுதியில் அவர்களுக்கும் கல்லெறிந்துவிட்டார்கள். ஆம். இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கவென வந்தவர்கள் மீதான வசைமொழி, மட்டக்களப்பு வாழைச்சேனையில் திங்கட்கிழமை இரவு முதன்முறையாகத் தாக்குதல் வடிவம் பெற்றது.

ஆயுதங்களுடன் கடந்த வாரம் கல்லடியில் வைத்துப் பிடிபட்ட பெண் புலி உறுப்பினர்களை விடுதலை செய்யக் கோரி புலிகள் கடந்த திங்கள், செய்வாய் தினங்களில் கிழக்கில் ஹர்த்தால் நடத்தியது தெரிந்ததே.

திங்களன்று பிற்பகல் சுங்காங்கேணி என்ற இடத்தில் வீதியை மறித்து போக்குவரத்தைத் தடைசெய்த மூன்று புலிகள் இயக்க உறுப்பினர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார்கள். இவர்களுள் பத்தினியன் என்ற புலி உறுப்பினரின் தலையில் காயம் ஏற்பட்டது. இதனை அடுத்து அன்றைய தினம் இரவு வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தைச் சூழ்ந்துகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட புலி ஆதரவாளர்கள் பொலிஸ் நிலையத்தை அகற்றுமாறு கோசம் எழுப்பினர். இதனை அடுத்து நிலைமையைச் சமாளிக்க அங்கு வந்த இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மீது கல்வீச்சு நடத்தப்பட்டது. இதனால் அவர்களது டபல் கெப் வாகனத்தின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியதோடு வாகனத்திற்குப் பலத்த சேதமும் ஏற்பட்டது. கண்காணிப்பாளர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என அவர்களது மட்டக்களப்பு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கடந்த வாரம் திருகோணமலையில் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. ■

## மலையக முஸ்லிம் வாக்கு வங்கியில் ஆறுமுகனின் கண்! ரவூப் ஹக்கீம் அதிருப்தி!

அமைச்சர்களான ஆறுமுகன் தொண்டமானுக்கும் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் அரசியல் ரீதியிலான முறுகல் நிலை ஒன்று தோன்றியிருப்பதாகத் தெரிய வருகிறது.

சமீப காலமாக மலையக முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் நடத்த ஆறுமுகன் தொண்டமான் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இது குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

அண்மையில் கண்டி மாவட்டத்தின் மடவளை முஸ்லிம் தேசிய பாடசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் இ.தொ.கா. தலைவர் என்ற வகையில் ஆறுமுகன் தொண்டமான் கலந்துகொண்டார். அத்துடன் தனது கட்சியில் மலையக முஸ்லிம் இளைஞர்கள் சிலரையும் இணைத்துக்கொண்டிருக்கும் ஆறுமுகன் சில பொறுப்புக்களையும் வழங்கியுள்ளார்.

கடந்த ஞாயிறன்று நுவரெலியாவில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் இ.தொ.கா.வும் முஸ்லிம் காங்கிரஸ"ம் ஒரு தரப்பின் அரசியலை மற்றத் தரப்பு பலவீனப்படுத்தாமல் வேறுபட்ட இரண்டு சமூகங்களின் அரசியல் தலைமைகள் என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என கூறியிருந்தார்.

கண்டி மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகள் இ.தொ.கா.வினால் துண்டாடப்படுவதை ரவூப் ஹக்கீம் தனிப்பட்ட ரீதியிலும் விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது. கண்டியில் கடந்த பொதுத் தேர்தலின்போது ரவூப் ஹக்கீம் குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் சர்ச்சைக்குரிய விதத்திலேயே தனது ஆசனத்தை தக்கவைத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது. ■

## கிழக்கில் ஹர்த்தால் இயல்பு வாழ்வு பாதிப்பு!

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த திங்கள், செவ்வாய் தினங்களில் புலிகள் ஒழுங்கு செய்திருந்த ஹர்த்தால் காரணமாக இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

பிற மாவட்டங்களிலிருந்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை நகரங்களுக்கு வந்திருந்தவர்கள் திரும்பிச் செல்ல போக்குவரத்து வசதியின்றி வீதிகளில் காத்துக் கிடந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. திங்களன்று ஒரு சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு இருந்த போதிலும் செவ்வாய்க்கிழமை அநேகமாகன நகரங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. ■

## யாழ். வளாகத்தைச் சூழவுள்ள வீடுகளில் மாணவிகள் போல் பெண் புலிகள்!

யாழ். பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள வீடுகளில் மாணவிகள் என்ற போர்வையில் பெண் புலி உறுப்பினர் பலர் வாடகைக்குக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது தொழில் வசதிகள் கருதி அயலில் உள்ள வீடுகளில் வாடகைக்குத் தங்கியுள்ளனர். இத்தகைய மாணவர்கள் போன்று பெண் புலி உறுப்பினர்கள் தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக பல வீடுகளில் தங்கியிருக்கிறார்கள். இவர்களும் காலையில் பல்கலைக்கழக மாணவர்கள் போன்று புத்தகங்களுடன் வீட்டை விட்டு வெளியேறி பின்னர் மாலை நேரத்தில் வீடு திரும்புகிறார்கள். ஆனால் இவர்கள் பல்கலைக்கழகத்தின் எந்த ஒரு கல்வி சார் செயற்பாடுகளிலும் பங்குபற்றுவது இல்லை. இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இது குறித்துப் பலத்த சந்தேகம் தோன்றியிருக்கிறது.

பல்கலைக்கழகத்தில் நடக்கும் அரசியல் சார்பு செயற்பாடுகளில் மாணவிகள் மிகக் குறைந்தளவிலேயே பங்கேற்பது வழக்கம். இதனால் மாணவிகள் மத்தியில் தமது கருத்துக்களைப் புகுத்தும் ஒரு முயற்சியாகவே புலிகள் இவ்வாறு தமது பெண் உறுப்பினர்களைப் பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாகத் தங்க வைத்துள்ளனர் என கருதப்படுகிறது. ■

## மேலதிக சலுகைகள்

புலிகளின் வங்கிகள் மற்றும் வைப்பகங்களில் பணம் வைப்பிலிட்டுள்ளவர்களுக்கு ஏ-9 வீதி ஊடான வர்த்தக நடவடிக்கைகளின்போது பல சலுகைகள் கிடைக்கின்றன.

இத்தகையவர்கள் யாழ் குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிகளுக்குப் பொருட்களைப் கொண்டு செல்லும்போது நீண்ட வாகன சோதனை வரிசையில் காத்திருக்க வேண்டியதில்லை. உடனுக்குடன் சோதனையிடப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். அத்துடன் தமது வைப்பகக் கணக்கு இலக்கத்தைக் கொடுத்தால் குறிப்பிட்ட பொருட்களுக்கான வரிகளை அந்தக் கணக்கிலிருந்து பெற்றுக் கொள்ளவும் புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர். ■

## அமைச்சர் ஜயலத்திற்கு யாழ் வளாகத்தில் எதிர்ப்பு

ஐரோப்பிய ஆணைக்குழுவின் உதவியுடன் ஜி.ரி.இசட். நிறுவனம் யாழ் குடாநாட்டில் புனரமைத்த 55 பாடசாலைகளை, ஐரோப்பிய ஆணைக்குழு முன்பாக புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா தலைமையில் செவ்வாய்க்கிழமை யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் கல்வி அதிகாரிகளிடம் கையளிக்கும் வைபவம் புலிகளின் எதிர்ப்புக் காரணமாக இரத் துச்செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்குச் சென்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவை பல்கலைக்கழக வளாகத்திற்குள் வாகனத்தில் இருந்து இறங்க விடாது தடுத்த மாணவர்கள் சிலர் அவரை பலாத்காரமாக அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

பின்னர் பல்கலைக்கழக வாளகத்திற்கு வெளியில் நிகழ்ச்சியை நடத்த முயற்சித்தபோது அதற்கும் இந்த மாணவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே இறுதியில் ஜீ.ரி.இசட். நிறுவன யாழ்க் கிளையில் நடைபெற்ற மிகச் சிறிய நிகழ்வு ஒன்றில் அமைச்சர் ஜயலத் இந்த புனரமைக்கப்பட்ட பாடசாலைகளின் நிர்வாகத்தை அதிகாரிகளிடம் கையளித்தார். ■

## நவீன படகுகள் கடற் புலிகளிடம் ஒப்படைப்பு

புலிகளின் கப்பல் கட்டும் தளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய அதிவேகப் படகுகள் கடந்த வாரம் கடற்புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இந்த நவீன படகுகளைக் கையளிக்கும் வைபவம் கடந்த 17ந் திகதி கப்பல் கட்டும் தொழில்நுட்பப் பிரிவின் அதிகாரியான ரஞ்சன் என்பவர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கடற் புலிகள் சார்பில் சுதன் என்ற தளபதி இவற்றைப் பொறுப்பேற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படகுகள் இன்னும் சில வாரங்களில் கடற் புலிகளின் பாவனைக்கு வழங்கப்படும் என்று சுதன் இந்த நிகழ்வின்போது உரையாற்றுகையில் தெரிவித்திருக்கிறார். இந்த நிகழ்ச்சியில் சுமார் 150 கடற் புலிகளும் 30 தொழிலாளர்களும் கலந்துகொண்டனர். ■

## ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்களிடையே தலைதூக்கும் புலிகளுக்கெதிரான உணர்வலைகள்




கனடாவின் ரொறன்ரோ நகரில் சமீபத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்

இதுவரை காலமும் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சிங்களவர்கள் மட்டுமே ஆர்ப்பாட்டம் நடத்தி எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வந்தனர். ஆனால் அண்மைக் காலமாக இதே மாதிரியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை இலங்கைத் தமிழர்கள் ஒழுங்கு செய்து நடத்துவது அதிகரித்துள்ளது.

கனடாவில் அண்மையில் புலிகளின் செயற்பாடுகளைக் கண்டித்து புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். இதே போன்று லண்டனிலும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

புலிகளின் முக்கிய செயற்பாட்டுத் தளங்களாக உள்ள கனேடிய நகரங்களில் புலிகளுக்கு எதிரான கருத்துக்கள் அங்குள்ள பொதுமக்களிடையே வலுப்பெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இத்தகைய நிலைமைகளின் பின்னணியிலேயே புலிகள் தமது மனித உரிமை மீறல்களை நிறுத்தாவிட்டால் அவ்வியக்கத்தை தடை செய்ய கனடா முன்வந்துள்ளதாகத் தெரிய வருகிறது. சமீபத்தில் வன்னியில் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த இலங்கைக்கான கனேடியத் தூதுவர் இது குறித்து தமிழ்ச்செல்வனிடம் கூறியுள்ளார்.

இலங்கையில் புலிகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைகளைக் கண்டித்து மேலும் பல ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும் முயற்சிகளில் மனித உரிமை ஆர்வலர்கள் ஈடுபட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது.

# முரசம்

## கறுப்பு ஜூலை
## 20 வருடத்தின் பின் ஒரு மீள்பார்வை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

கறுப்பு ஜூலை என்றால் இலங்கைத் தமிழ் மகன் எவனுக்கும் என்ன என்று சொல்லாமலே புரியும். இருபது வருடங்களுக்கு முன், 1983ல் நிகழ்ந்த அந்தப் பாரிய இன ஒழிப்பு வன்முறைக் கலவரம் ஏற்படுத்திய அழிவுகள் இன்னும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆறா வடுக்களாகப் பதிந்துபோய் உள்ளன. அதே கலவரத்தில்தான் வெலிகடைச் சிறைப் படுகொலையும் நிகழ்த்தப்பட்டு 53 அரசியல் கைதிகள் ஒரு முறைக்கு இரு முறை கொலைசெய்யப்பட்டார்கள். அதில்தான் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட பின், தமிழர் விடுதலைக் கூட்டணியால் பாராளுமன்ற அங்கத்தவர் பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்ட குட்டிமணியும், நீதிமன்றத்தில் "நாம் ஆயுதம் தாங்கிய மனநோயாளிகளல்ல" என்று உரையாற்றி, தமிழ் மக்களின் போராட்டத்தின் அர்த்தப் பரிமாணத்தை எடுத்துரைத்த தங்கதுரையும் மற்றும் போராளிகளும் நிராயுதபாணிகளாகக் கொல்லப்பட்டார்கள். அன்றைய அரசு இக் கலவரத்தின் உச்சக்கட்ட நிலையில் போரென்றால் போர், சமாதானமென்றால் சமாதானமென அறைகூவல் விடுத்தது. ஆனால் அன்று மூட்டப்பட்ட பகைமைத் தீதான் இன்று வரை தீராத கடும் யுத்தமாக இந் நாட்டைப் பற்றிப் பிடித்து அழிவுகளுக்கு இரையாக்கி வருகிறது. அன்று நாட்டை விட்டு விலகிச் சென்ற தமிழர்கள் பலரது அடிமனதில் இன்னும் அன்றைய எண்ணப் பதிவுகளே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அவையே சமாதான சகவாழ்வு என்பது பற்றிய பெரும் நம்பிக்கையீனத்தை அவர்களின் கருத்தில் விதைத்து, தொடரும் யுத்தத்தை நியாயப்படுத்தவும் செய்கிறது.

ஆனாலும் இந்த 20 வருட காலத்தில் இதன் படிப்பினைகளை இந் நாட்டின் பல தரப்பு மக்களும் உணர்ந்துகொள்ளத் தாராளமான வாய்ப்பிருந்தது. இனவாதம் எதையுமே சாதிக்கவில்லை என்பதையும், அதை ஊட்டி வளர்த்த அரசியல்வாதிகள் வெறும் குறுகிய சுயநல அரசியல் நோக்கங்களுக்காக மக்களைப் பலி கொடுத்தனரென்பதையும் தற்போது உணர்ந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. இப்போது இனவாதத்தைப் பெரும்பான்மை மக்கள் நிராகரிக்கும் நிலையைக் காணக் கூடியதாக உள்ளது. இதற்கான பல உதாரணங்களையும் நாம் சுட்டிக் காட்ட முடியும்.

1958ல் வாகனங்களில் சிறீ இடப்பட வேண்டுமென்று கூறி மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பால் ஒரு கலவரமே நிகழ்ந்தது. ஆனால் 90களில் பிரேமதாஸா சிறீக்குப் பதிலாக கோடு ஒன்றை இட்டு மாற்றம் செய்தபோது எந்த எதிர்ப்புமே கிளம்பவில்லை. ஜனாதிபதி பிரேமதாஸாவே, பாரிய மேதின ஊர்வலத்தின் ஜனத்திரள் மத்தியில் படுகொலை செய்யப்பட்டபோதும் சிறு கலவரமும் வெடிக்கவில்லை.

கடந்த அரசாங்கமும் சரி, இன்றைய அரசாங்கமும் சரி, இனவாதத்தை நிராகரித்துப் பிரசாரம் செய்தே பெருமளவு ஆதரவு வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வர முடிந்தது. இத்தகைய மனமாற்றம் இந் நாட்டு மக்கள் மத்தியில் இன்று தழைத்தோங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

ஆனாலும் இத்தகைய நல்ல மாற்றங்களை அர்த்தமுள்ள வகையில் அறுவடையாக்கும் விதத்தில் காலத்தை விரயம் செய்யாமல் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதே பொறுப்புணர்வுள்ள செயலாகும். ஜூலைக் கலவரம் உட்பட, கடந்த கால அழிவுகளுக்கான பரிகாரமாக அமையக் கூடியதும் அது ஒன்றே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ரணிலின் எதிகாலத் திட்டம்
# ஏற்பார்களா புலிகள்?

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**நரன்**

இலங்கையில் இன்றைய சூடான அரசியல் விவகாரம் என்னவென்றால் அது இடைக்கால நிர்வாக சபை விடயமே என எவரும் உடனே சொல்லிவிடுவர்.

முன்னரும் இரு தடவைகள் புலிகளால் நிராகரிக்கப்பட்ட நிலையில், ரணில் அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பான மற்றொரு வரைபை-மாகாண நிர்வாக சபை என்ற பெயரில் அண்மையில் நோர்வே அனுசரணையாளர் ஊடாகப் புலிகளிடம் கையளித்துள்ளதைத் தொடர்ந்து இப் பரபரப்பு மீண்டும் கிளர்ந்துள்ளது.

இதில் என்ன உள்ளதென்பதை சிதம்பர இரகசியம் போல் அரசாங்கம் மறைத்து வைத்திருந்தது மட்டுமன்றி, மறைத்து வைக்கப்பட வேண்டிய ஒன்றுதான் அதுவெனத் தானே பிரஸ்தாபித்திருந்ததானது, அது வெளிவந்தவுடன் அதனை விழுந்தடித்து ஆராயும் ஆவலைத் தூண்டிவிட்டிருந்தது.

இவ் வரைபைத் தயார் செய்திருந்த வேளையில் இது பற்றி விளக்கமளிப்பதற்காகக் கூட்டப்பட்ட பாராளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அளிக்கப்பட்ட விளக்கமானது, அது குழப்பப்பட்டுவிடக் கூடாதென்பதற்காக அதைத் தாம் பகிரங்கப்படுத்த முடியாதென்பதுதான். - அதாவது விளக்கமளிக்க முடியாதென்பதைத் தெரிவிப்பதற்காக நடத்தப்பட்ட விளக்கமளிக்கும் கூட்டமாக முடிந்தது அது.

இதேவேளை, இத் திட்டத்தைப் புலிகளுக்குக் கையளிக்குமுன் தனக்குச் சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கோரியிருந்தார். - ஆனால் அதுவும் செய்யப்படவில்லை.

இவை யாவும் சேர்ந்தே இத் திட்டம் பற்றி அபரிமித ஆவலைத் தூண்டியிருந்தது.

அளவுக்கதிகமாகத் தூண்டப்பட்ட ஆவல், இரு புறத்திலும் பாதக நிலையை ஏற்படுத்திவிடும். அதில் அதிகம் இல்லை என்று கண்டால் அதனை உதாசீனம் செய்ய ஒருபுறம் புலிகள் தரப்பை இட்டுச் செல்லும். மறுபுறம், ஏதோ, எல்லாம் அள்ளிக் கொடுத்துவிட்டுப் பெரும் ஆபத்தில் சிக்கவைக்கப் போகிறதென்ற பீதியை சிங்களத் தரப்பில் கிளறிவிடும்.

இப்போது அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டத்தைப் புலிகள் ஏற்பார்களா என்பது முதலாவது கேள்வி.

அடுத்தது அவ்வாறு ஏற்றாலும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்குமா என்பது அடுத்த கேள்வி.

இந்த இடைக்கால சபைத் திட்டம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து புலிகள் கோணத்தில் நோக்குகின்ற தமிழ்ப் பத்திரிகைகள், இவை புலிகளைத் திருப்திப்படுத்துவது சந்தேகமே எனத் தலைப்புத் தீட்டியிருந்தன.

மறுபுறத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வடக்கு - கிழக்கைச் சார்ந்த மற்றைய தமிழ்க் கட்சிகளுக்கும், ஜே.வீ.பி. போன்ற கட்சிகளுக்கும் இச் சபையில் இடம் தரப்படவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. பிரதான எதிர்க் கட்சியான பொ.ஐ.மு., ஜனாதிபதியின் சம்மதம் பெறப்படாமல் அனுப்பப்பட்ட இத் திட்டத்தில் தாம் எப்படிப் பங்குபற்றுவதெனக் கேள்வியெழுப்பி, இதில் கூறப்பட்டுள்ளவாறு பெரும்பான்மையைப் புலிகள் வகிக்கையில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் ஆசனங்களுக்கான பிரதிநிதிகளாகத் தாங்கள் பங்குபற்றுவதென்பது நகைப்புக்கிடமான விடயமென்கிறது.

அதேவேளை முஸ்லிம் தரப்பினர் இத் திட்டத்துக்குப் புறம்பாகத் தாம் முஸ்லிம் கட்சிகள், பிரதிநிதிகள் யாவரும் இணைந்து மற்றொரு திட்டத்தை முன்வைக்கவுள்ளதாகக் கூறுகிறார்கள்.

புலிகள் சார்புத் தமிழ்க் கட்சிகள் புலிகளின் அபிப்பிராயம் தெரியாமல் தாம் நேரடியாகக் கருத்துக் கூறப் பின்னடித்து, புலிகளே முடிவெடுக்க வேண்டுமெனக் கூறுகிறார்கள். இவர்கள்தான் முன்னர் ஈ.பி.டி.பி. இடைக்கால நிர்வாக சபை கேட்டபோது எதிர்த்தவர்கள். அதேவேளை ஈ.பி.டி.பி. அமைச்சுக் காலத்தில் செய்த நிவாரண மற்றும் நலன்புரிப் பணிகளை, ''உரிமை தேவையேயன்றி சலுகைகளல்ல'' என்று கூறி எதிர்த்தவர்களும் இவர்களே. இப்போது அதே விடயத்தைப் புலிகள் கோரும்போது - அன்றாடத் தேவைகளைக் கவனித்துவிட்டுத்தான் அரசியல் தீர்வையிட்டு ஆராய முடியுமெனக் கூறும்போது - ஆமாசாமி போடுகிறார்கள்.

மறுபுறம் மாற்றுத் தமிழ்க் கட்சிகள் இவ் இடைக்கால நிர்வாக சபை குறித்த சந்தேகங்களைத் தெரிவிக்கிறார்கள். குறிப்பாக, அரசியல் பன்மைத்துவம், ஜனநாயகம், மனித உரிமைகள் பேணப்படுவதற்கான உத்தரவாதங்கள் எதுவும் இதில் காணப்படவில்லை என்பதுவும், இப் பகுதியில் புலிகளின் ஆயுத அச்சுறுத்தலை நீக்கும் எவ்வித ஏற்பாடுகளும் காணப்படவில்லையென்பதுவும் இவர்கள் சுட்டிக்காட்டும் பிரதான குறைபாடுகள்.

தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டத்தில் உள்ள பிரதான அம்சங்கள்:

(1) புலிகளின் பெரும்பான்மை

(2) மா.நி.சபை பற்றிய பேச்சுக்களில் முஸ்லிம்களின் தூதுக்குழுவும் பங்கு வகித்தல்

(3)கொள்கை வகுப்பு, அமுலாக்கம், கண்காணிப்பு அதிகாரங்களுட்பட, - புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் உள்ளடங்கலாக, - தற்போதைய பிராந்திய நிர்வாகத்திற்குரிய அதிகாரங்கள் வழங்கப்படல்.

ஆனால் - பொலிஸ், பாதுகாப்பு, காணி, வருமானம் ஆகிய துறைகள் வழங்கப்பட மாட்டாது.

(4) எந்தவொரு தீர்மானத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் கொண்ட, புலிகள் தரப்பாலும் அரசாங்கத் தரப்பாலும் நியமிக்கப்படும் இரு சபைத் தலைவர்கள் இடம்பெறல்.

அல்லது ஒரு சபைத் தலைவராக இருந்தால் முஸ்லிம், சிங்களவர்கள் தொடர்பான விடயங்களில் அச் சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் பெரும்பான்மை அங்கீகாரமில்லாது தீர்மானங்கள் செல்லுப்படியாகாது.

(5)அரச இயந்திரத்தின் மூலமான அமுலாக்கல்களுக்காக விசேட கமிஷனர் ஒருவரை அரசாங்கம் நியமிக்கும்.

> ***இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்களில் முஸ்லிம்களது தூதுக்குழுவும் பங்குபற்றுவதை புலிகள் கொள்கையடிப்படையில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை, இது இரு தரப்பு விவகாரமேயன்றி முத்தரப்பு விவகாரமல்ல.***

(6) இதன் கீழ் அமையும் 8 மாவட்டக் குழுக்களில் இன விகிதாசாரம் பேணப்படல்.

இவையே இத் திட்டத்தில் எடுத்து நோக்கக் கூடிய அக்கறைக்கோ, சர்ச்சைக்கோ உரிய அம்சங்கள். இவற்றில் சில புலிகளுக்கு ஏற்புடையவையாக இருக்கப் போவதில்லை என்பது ஒருபுறமும், அமுலாக்கலுக்குச் சாத்தியமானதாகுமா என்பது மறுபுறமும் உள்ள பிரதான கேள்விகளாகும்.


பொலிஸ், பாதுகாப்பு, காணி, வருமானம் ஆகிய துறைகள் திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ள நிலையில் புலிகளின் பிரதிபலிப்பு மறுதலையானதாகவே இருக்கும்.

அதேவேளை, இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுக்களில் முஸ்லிம்களது தூதுக்குழுவும் பங்குபற்றுவதை புலிகள் கொள்கையடிப்படையில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை, இது இரு தரப்பு விவகாரமேயன்றி முத்தரப்பு விவகாரமல்ல. தமது 25 வருடப் போராட்டத்தின் வாயிலாக, எதிர்த் தரப்பான அரசாங்கத்துடன் தாம் நடத்தும் இப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பாக மற்றெரு தரப்புக்கு இடமில்லை என்பதை அன்ரன் பாலசிங்கம் ரவூப் ஹக்கீமிடம் நேரடியாகவே தெரிவித்திருந்தது யாவரும் அறிந்ததே. அவர்களைப் பொறுத்தவரையில், தாமே முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பாளிகள், அவ்வாறு ஏதும் விஷேடமாக முஸ்லிம் விவகாரம் ஏதும் ஏற்பட்டால் அது விடயமாக அவ்வப்போது முஸ்லிம் பிரதிநிதிகளை அழைத்துப் பேசலாம் என்பதே இதன் அர்த்தம். நிரந்தரமாக ஒரு முஸ்லிம் தரப்பை அங்கீகரிப்பதல்ல.

இந் நிலைப்பாட்டின்படி, இங்கு அரசாங்கம் தனது சொந்த அரசியல் தளம்பல்களைச் சமாளிக்கும் பொருட்டு முஸ்லிம்களின் அழுத்தத்துக்குப் பரிந்துரை செய்துள்ள விடயங்களுக்கெல்லாம் புலிகள் தலையாட்டப் போவதில்லை.

அடுத்த ஒரு முட்டுக்கட்டை, தலைமையின் வீட்டோ அதிகாரம். அல்லது, முஸ்லிம், சிங்கள சமூகங்கள் தொடர்பான விடயங்களில் அச் சமூகங்களைச் சேர்ந்தவர்களின் பெரும்பான்மை இன்றி தீர்மானங்கள் செல்லுப்படியாகாதென்பது.

இது புலிகளின் அதிகாரத்தை இச் சபையில்



கேள்விக்குறியாக்கிவிடுவதாக அமையும். எத்தரப்பும் ஒன்றையொன்று நிராகரித்தபடியிருக்க வழி சமைத்துவிடும்.

மேலும், விசேட கமிஷனர் என்பதுவும் இங்கு தெளிவாக இல்லை. அரசாங்கம் அரசியலமைப்புக்கு இணக்கமாக இதை வரைந்துள்ளதாகவே சொல்கிறது. அப்படியல்லாவிட்டால் இதை புலிகள் அங்கீகரித்தாலும் ஒன்றும் காரியமாகப் போவதில்லை. ஆனால் அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயமா என்று தெளிவாக்கப்பட வேண்டிய அம்சங்களும் இதில் உள்ளன.

அவ்வாறான ஒரு பிரதான விடயம், அதிகாரங்களும் செயற்பாடுகளும் என்ற தலைப்பின் கீழ் முதலாவது அம்சமாகக் கூறப்பட்டிருக்கும் விடயமாகும். அதில், பிராந்திய நிர்வாகம் தொடர்பான விடயங்களில் தற்போது அரசாங்கம் செயற்படுத்தும் அதிகாரங்களும் செயற்பாடுகளும்-பொலிஸ், பாதுகாப்பு, காணி, வருமானம் நீங்கலாக, ஆனால் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் உள்ளடங்கலாக இச் சபைக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதிலுள்ள மயக்கம் என்னவென்றால் ஒன்று, பிராந்திய நிர்வாகம் என்று எதுவும் இப்போது இல்லை. மாகாண நிர்வாகம் என்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணம் நிர்வகிக்கப்படுகிறது. இங்கே மாகாண சபைக்கான அதிகாரங்கள், செயற்பாடுகள் இச் சபைக்கு மாற்றப்படுகின்றதென்பதை இது அர்த்தப்படுத்துகிறதா என்ற கேள்வி எழுகிறது. இவ் விடயம் உச்ச நீதிமன்றத்துக்குச் செல்லுமானால், நீதிமன்றம் இதைத் தெளிவாக வரையறுக்கும்படி கேட்கும். அந்த வரையறை மாகாண சபை அதிகாரங்களையும் உள்ளடக்கியதென வெளிப்படுமானால், இதை அரசியலமைப்புக்குப் புறம்பானதென நீதிமன்றம் நிராகரிக்க இடமுண்டு. ஏனெனில் மாகாண சபை அதிகாரங்கள் யாவும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்குக் கீழ் வருகின்ற விடயங்கள். அவை பாராளுமன்றத்துடனோ, பிரதமருடனோ எவ்வித சம்பந்தமுமற்றவை. அவை குறித்து எவ்வித தீர்மானமும் அமைச்சரவை, அல்லது பிரதமர் நிறைவேற்ற முடியாது. அவ்வாறானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையாலேயே இத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும்.

இப்படிப் பார்க்கையில் புலிகள் ஒருபுறம் ஏற்கிறார்களா, இல்லையா என்பதற்கு அப்பாலும் சிக்கல்கள் உள்ளன. புலிகள் அந்தப் படியே இதை ஏற்கப்போவதில்லை. ஏற்பதாயின் நிச்சயம் திருத்தங்கள் பலதைக் கோருவர். அவை அரசாங்கத்தின் இயலும் தன்மைக்குள் அடங்குமா என்பதும் கேள்விக்குரியது.

மொத்தத்தில் இந்தத் திட்டம்.... மீண்டும் ஒரு தொடர்கதைதான்!

## அலசுவது-இராஜதந்திரி

# உண்மைகள் உறங்குவதில்லை!

'உண்மைகள் உறங்குவதில்லை' என்ற கூற்றுக்குச் சான்று பகருவது போலவே 1983ம் ஆண்டு ஆடிக் கலவரம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை விளங்குகின்றது.

இளைப்பாறிய பிரதம நீதியரசர் எஸ்.சர்வானந்தா தலைமையிலான ஆணைக்குழுவே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு, இம் மாதத்துடன் கறுப்பு ஜூலை இனக் கலவரம் இடம்பெற்று இருபது வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இலங்கையில் தமிழ் மக்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழலாம் என்ற நம்பிக்கையை 83ம் ஆண்டின் ஆடிக் கலவரம் தகர்த்தெறிந்துவிட்டிருந்தது.

1983ம் ஆண்டின் இனக் கலவரம் ஏற்படுத்திய தாக்கமே இன்று வரை இன ஐக்கியத்தைப் பேணச் செய்யும் விடயத்தில் தொடர்ந்தும் அதிர்வலைகளைக் கொடுத்து வருவதாக இருக்கின்றது.

83ம் ஆண்டின் ஜூலைக் கலவரம் தமிழர்களுக்கெதிரான முதலாவது வன்முறையல்ல. இதற்கு முன்னர் 1958ம் ஆண்டிலேயே முதன் முறையாக இனக் கலவரம் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து 1977ம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும், பின்னர் 1983ம் ஆண்டு மிக மோசமான முறையில் மூன்றாவது தடவையாகவும் இனக் கலவரம் தமிழ் மக்களைப் பாதித்து விட்டிருந்தது.

இந்த இனக்குரோத வன்செயல்களுக்கு அரசியல் காரணங்களே அடிப்படையாக இருந்ததுடன், அரசியல்வாதிகளே மூல காரணமாக இருந்ததையும் கடந்த வாரம் வெளியான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

83 ஜூலை இனக் கலவரம் ஏற்பட்டு இருபது வருட காலம் பூர்த்தியாகியுள்ள நிலையில் அதனால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் தற்போது இவ்வுலகில் இல்லாது இருக்கலாம், அல்லது வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்திருக்கலாம்.

எது எப்படியிருப்பினும் தமிழர்களுக்கெதிராகத் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்டதே 1983ம் ஆண்டின் ஆடிக் கலவரம் என்பதை ஜனாதிபதி ஆணைக்குழு அழுத்தம் திருத்தமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

கூடவே ஜூலைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் அரசாங்கம் பகிரங்கமாகவே மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளதுடன், கலவரத்தினால் ஏற்பட்ட இழப்புகளுக்கு வட்டித் தொகையுடன் நட்டஈடு வழங்கும்படியும் சிபார்சு செய்துள்ளது.


கறுப்பு ஜூலை இனக் கலவரத்தின்போது ஏற்பட்ட அனர்த்தம் அற்ப, சொற்பமானதல்ல. உயிர்கள், உடைமைகள் என்று ஏகப்பட்ட விதத்தில் தென்னிலங்கைத் தமிழர்கள், குறிப்பாகக் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

மாடி வீடுகளில் சொத்து, சுகங்கள், அரசியல் செல்வாக்குகளுடன் வாழ்ந்த தமிழ் மக்கள் மட்டுமல்ல. வீதியோரத்தில் வியாபாரம் செய்து நாளாந்த வாழ்க்கை நடத்தி வந்த தமிழர்கள் கூட மிருகத்தனமான முறையில் வதைக்கப்பட்டிருந்தனர்.

வீதிகளில் வாகனங்களில் சென்றவர்களும், கால்நடையாகச் சென்றவர்களும் தமிழர்களாகப் பிறந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அடித்துக் கொல்லப்பட்டுத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர்.

சிறைக் கூடங்களில் கைதிகளாக இருந்த தமிழர்கள் கூட விட்டுவைக்கப்படவில்லை. மிக மூர்க்கமான முறையில் கறுப்பு ஜூலைக் கலவரத்தின்போது கொழும்பு வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ச் சிறைக் கைதிகளில் 53 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இளைப்பாறிய பிரதம நீதியரசர் சர்வானந்தா தலைமையிலான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, 83ம் ஆண்டு ஜூலைக் கலவரம் இடம்பெற்று 18 வருடங்களுக்குப் பின்னரே அமைக்கப்பட்டிருந்தது.



> **'83' கறுப்பு ஜூலை ஆணைக்குழு நிஜமாகவே தமிழர் நலன் சம்பந்தப்பட்டதானால் அதன் சிபாரிசுகள் உடனடியாகவே நிறைவேற்றப்பட வேண்டும்!!**

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு கொண்டுவரப்பட்டதன் உண்மையான நோக்கம் எதுவென்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவினால் 2001ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த விசேட ஆணைக்குழு, 1983ம் ஆண்டின் ஜூலைக் கலவரம் பற்றி ஆராய்ந்தறிவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

எது எப்படியிருப்பினும் கறுப்பு ஜூலை இனக் கலவர ஜனாதிபதி ஆணைக்குழு தனது கடமையைச் செவ்வனே செய்து, பல உண்மைத் தகவல்களையும் வெளியிட்டுள்ளதுடன். முக்கியமான சில சிபாரிசுகளையும் முன்வைத்துள்ளது.

இந் நிலையில் உண்மையிலேயே கறுப்பு ஜூலையின் கொடூரத்தைக் கருத்தில் எடுத்து தமிழ் மக்கள் நலன்களை முதன்மைப்படுத்திய நிலையில் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்குமேயானால், அதன் சிபாரிசுகளையும் காலந் தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

இலங்கையில் தற்போது ஓர் அதி முக்கிய அரசியல் சமாச்சாரமாக இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1983ம் ஆண்டு ஜூலை இனக் கலவரம் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை மழுங்கடித்து, அவர்களை அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக ஒடுக்கிவிடுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஆனால் தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் முற்றிலும் எதிர்பாராத விதத்திலேயே கடந்த இருபது வருட காலத்தில் வடக்கு-கிழக்கின் அரசியல் நிலைவரம் மாற்றமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

1983ம் ஆண்டு ஜூலை இனக் கலவரத்தின் பின்னரே தமிழ்த் தீவிரவாதம் முறுக்கேற ஆரம்பித்தது. மிதவாத அரசியல் வலுவிழந்து ஆயுதப் போராட்டம் பலமடையலாயிற்று.

இந் நிலையில் இலங்கையின் ஒட்டு மொத்தமான அரசியல், சமூக, பொருளாதார நிலைவரங்கள் ஆட்டங் காணத் தொடங்கின.

கடந்த இருபது வருட காலத்தில் பல தடவைகள் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1984ம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையுடன் பூட்டானின் தலைநகர் திம்புவிலும், பின்னர் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் அரசியல் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை தோல்வியைத் தழுவின.

இதன் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்திலும், பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவினாலும் அரசியல் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இம் முயற்சிகள் கூடத் தோல்வியையே தழுவியதுடன் சமாதானம் ஓர் எட்டாக் கனியாகவே இருந்து வந்தது.

ஒவ்வொரு தடவையும் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்தபோது இராணுவ ரீதியான மோதல்களே பலமடைந்திருந்தன.

அரசியல் தீர்வு முயற்சிகளில் செலவிடப்பட்ட காலப்பகுதியைவிட இராணுவ ரீதியான நடவடிக்கைகளில் விரயமான காலப்பகுதியே அதிகமானதாகும்.

தற்போது மற்றுமொரு அரசியல் தீர்வு முயற்சியாக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமரச நடவடிக்கைகள் விளங்குகின்றன.

சர்வதேச சமூகத்தின் விரிவான கவனத்தைப் பெற்ற நிலையில் நிறையவே எதிர்பார்ப்புகளுடன் தற்போதைய அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் 83 கறுப்பு ஜூலை குறித்து தற்சமயம் வெளியாகியுள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை காலமறிந்து வெளியானதொன்றாகவே கருத முடியும்.


ஏனெனில் இன்றைய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமரச நடவடிக்கைகள் சிக்கல் நிறைந்தவையாக இருக்கும் இத் தருணத்தில், கடந்த காலத்தை நினைவூட்டுவதாகவே கறுப்பு ஜூலை ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை விளங்குகின்றது.

தற்போதைய அரசியல் தீர்வு முயற்சிகள் சிக்கலானவையாகவும் ஒரு நிரந்தர சமாதானத்தைத் தேடுவதற்கான பயணம் மிக நீண்டதாகவும் இருப்பதற்கு அத்திவாரமிட்ட ஒரு கொடிய நிகழ்வாகவே 1983ம் ஆண்டின் ஜூலை இனக் கலவரம் அமைந்திருந்தது.

ஆகவே இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் ஒருபுறமிருக்க, கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகள் இனி வருங்காலங்களிலும் ஏற்படலாகாது என்பதையே கறுப்பு ஜூலை ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை இடித்துரைப்பதாக இருக்கின்றது.

---

## அதிரடி அய்யாத்துரை



**இலங்கை** அரசியலை ஒரு ஆட்டம் ஆட்டுவிச்ச ஆளுமை கொண்ட மனிஷன் தீக்சீத் தெண்டு எல்லாருக்கும் தெரியும். இந்திய விமானம் உணவு போடப்போற சங்கதிய ஜே.ஆருக்குப் பழைய என்வலப்பொண்டில எழுத்த வெட்டிப்போட்டுக் குறிப்பெழுதி அனுப்பிவைச்ச ஆளெல்லே. இப்ப ரணிலையும் இழுத்து விட்டிருக்கிறார் வம்பில. ரணில் இன்னும் ரெண்டு வருஷத்தை இழுத்து ஜனாதிபதிப் பதவியப் பிடிக்க நினைக்கிறாராம். பிறகு பேச்சுவார்த்தையில இருந்து விலகி, தமிழர் எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுப்பாராம். நம்பேலுமா? நம்பிறபடி இப்ப எதுவும் நடக்கிறதில்லைத் தான்... வெயிட் அன்ட் ஸீ!

**ஜூலை** 23 என்ன நாளெண்டு கேட்டால் ஜூலைக் கலவரமெண்டு உடன சொல்லுவியள். ஜூலை 13 என்ன நாள்? தடுமாற்றமாக் கிடக்குதெல்லே! எங்கட அமிரண்ணை கொல்லப்பட்ட நாள். அந்த நாளக் கொண்டாடக் கூட்டணிக்காறர் படுகிற திண்டாட்டத்தைப் பாத்து அழுறதா சிரிக்கிறதா எண்டு தெரியேல்லை. யாழ்ப்பாண ஓ.ஃப்பிஸில கமுக்கமா நடந்த கூட்டத்துக்கு 30 பேரும் வரேல்லையாம். ஒரு கூட்டணி எம்பி கூடத் தலை காட்டேல்லையாம்.

**தமிழில** செல்வத்தார் ஆங்கில நாட்டுக்குப் போகக் கேட்டதுக்கு வீசா மறுத்திருந்தது தெரிஞ்ச சங்கதி. ஆனால் சாதா செல்வத்தாருக்கும் மறுத்தாச்சுதாம். தடை செய்யப்பட்டவை எண்ட கோதாவிலதான் முன்னவருக்கு மறுப்பாம். பின்னவருக்கு ஆதரவாளரெண்டோ தெரியேல்லை. ஆங்கில நாட்டுத் தூதுவரே நேராக் காரெடுத்துக்கொண்டு வன்னிக்குப் போய் த. செல்வத்தாரைச் சந்திக்கிற கணக்கில நிலவரம் இருக்குதெண்டேக்க, வீசாவில மட்டும் என்ன வாழுதாமெண்டு கேட்டதுக்கு அவை சொன்னது-அது வேற... இது வேற...! வன்னிக்கும் விசா எடுத்துக் கொண்டுதான் போகவேணுமெண்டு ரெண்டெழுத்தார் மாறிப்பிடிச்சால்தான் இவை முழுசாடுவினம். நடக்காதெண்டும் சொல்ல ஏலாது. ட்டைம் அப்பிடி!

**அமெரிக்காவில** ஆயுதம் வாங்கிறதா ஏற்பாடு செய்து கொண்டிருக்கேக்க, கடற்படைத் தளபதியையும் ஆயுத வியாபாரிகளையும் பெண்சாதியையும் அள்ளிப் போட்டுக்கொண்டு எங்கட பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேலுக்கு ஓடினதுக்கு என்ன காரணமோ யாமறியோம். யுத்தம் அவசர அவசரமா வரப்போறதாச் சொல்லித் தான் உந்த ஓட்டமாம். அமெரிக்காவில குறைய விலைக்கு வாங்கிற இரும்புச் சாமான்களையும் கூடின விலை குடுத்து இஸ்ரேலில வாங்கிறதுக்கு காரணம் உடன கிடைக்க வேணுமெண்டு தானாம். ஆனால் பாருங்கோ, ஏதோ, யுத்தம் வராது, பேச்சு வார்த்தை திரும்ப ஆரம்பிக்கும் எண்டெல்லோ இங்க பத்திரிகைகளுக்கு உவை சொல்லிக்கொண்டு வருகினம். உள்ளொன்று நினைத்துப் புறமொன்று சொல்லல் எண்டது இதுதானோ?

**சங்கரியாரைச்** சபையில வைச்சுச் சரிக்க முடியேல்லை. இப்ப பின் கதவால இழுத்து விழுத்தப் பெருத்த பாடு நடக்குதாம். இந்தியா வீசாவுக்கு நப்பாசைப்பட்டுத்தான் தங்கட உத்தரவை உதாசீனம் செய்திட்டதா மேலிடத்தில கடுப்பாயிருக்கினமாம். அதாலதான் திருமலைக் கிளையைப் பிடிச்சு சங்கரியாருக்கு கண்டன அறிக்கை விடுப்பிச்சு மேலிடத்தைக் குளிர்விக்கப் பாத்தவையாம். விழுத்திப் பாக்கட்டும். தனிச்சு நிண்டும் தான் போராடுவனெண்டு நிக்கிறாராம் மனிஷர். சத்திய யுத்தம் போல! சரித்திரம் படைச்சால் வீரர். சரித்திரத்துக்குப் பலியாகிப் போனால்...?

**இடைக்கால** நிர்வாகமெண்டு அரசாங்கம் அனுப்பி வைச்சிருக்குது ஒரு புறொப்போசலை. சூப்பரான புறப்போசல், மறுக்கிறதுக்கு எதுவுமில்லை, ரெண்டெழுத்தார் கட்டாயம் ஏற்பார்களெண்டு அளந்துகொண்டு போகுது அரசாங்கம். ஆனால், அதை விரிச்சுப் பாத்தவை, ஒரு தரப்பார் சொல்லினம், "உதில மற்றத் தமிழ்க் கட்சிகளுக்கு இடமில்லை, ஜே.வீ.பி. போல பாராளுமன்றத்தில இருக்கிற சிங்களக் கட்சிகளுக்கும் இடமில்லை. வெரி வெரி பாட்" எண்டு. மற்றத் தரப்பால சொல்லினம், "உதில பொலிஸ், பாதுகாப்பு, காணி, வருமானம் எண்ட எதிலயும் அதிகாரமில்லை, நோ யூஸ்" எண்டு. எப்பிடிச் செல்லப் போகுது உந்தக் கடுதாசியெண்டதுதான் டவுட்டாக் கிடக்கு. பழையபடி இந்த முறையும் செல்லாக் காசுதானோ?

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India,*
Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**
**184-A, Havelock Road, Colombo-05.**
**Tel :01-507334**

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## சித்தர் மாந்திரீகம்

சர்வதேச ஸ்திரி புருஷ வசியம் மூலம் மனம் கவர்ந்த வாழ்க்கை அமைந்திடவும், திருமணத் தடை, புத்திர பாக்கியமின்மை, கணவர் மனைவி விவகாரம் ஜோதிடம் கைரேகை மூலம் நிவர்த்தி பெற்றிடலாம்.

**சித்தர் மாந்திரீகம்**

**328/A, Aluthmawatha Road, Colombo-15**
**Tel :- 0722-601108**



## விளம்பரப் பகுதி

உங்கள்
வியாபாரத்தின்
விருத்திக்கு
முரசில்
விளம்பரம் செய்யுங்கள்

## விளம்பரப் பகுதி


# கிண்ணியா சுகாதார சேவைத் தொழிலாளர்களை

## திரும்பிப் பார்ப்பார் எவருமில்லை

**தி**ருமலை கிண்ணியாவில் இருக்கும் சுகாதார சேவைத் தொழிலாளர்கள் எதுவித அடிப்படை வசதிகளுமற்று வாழ்கின்றனர்.

சுமார் 30 தொடக்கம் 40 ஆண்டுகள் ஒரே இடத்தில் ஒரே மாதிரியான வாழ்க்கை முறைக்குள் காலத்தைக் கழிக்கும் அவர்கள் பொருளாதார ரீதியாகவோ, கலாசார ரீதியாகவோ முன்னேற்றம் காணாமல் ஒரு வட்டத்துக்குள்ளேயே வாழ்க்கை நடத்துகின்றனர்.

இன்றைய சூழலில் திருமலை மாவட்டத்தில் மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினருமாக 4 பேர் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றபோதும் எவருடைய பார்வையும் இந்த ஏழைத் தொழிலாளர்கள் பக்கம் திரும்பவில்லை என்பது வருத்தத்திற்குரியதே. இதில் குறிப்பிடக் கூடிய வகையில் மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கிண்ணியாவிலிருந்தே தெரிவு செய்யப்பட்டவர்கள். இந்த மக்களின் துன்ப நிலை தொடர்பில் நீண்ட கால பரிச்சயத்துக்குரியவர்கள். இந்த மக்களில் சுமார் ஐம்பது பேர் மட்டுமே தற்போதைய வாக்குரிமை பெற்றவர்கள் என்பதால் தேர்தல் காலங்களில் மட்டும் இவர்களின் குடிசைகளின் பக்கம் வந்து புன்னகைப்பதும் பின்னர், மற்றுமொரு தேர்தல் காலம் வரும் வரை மறந்துவிடுவதும் வழக்கமாகிவிட்டது.

சுமார் 25க்கும் அதிகமான குடும்பங்கள் அவ்விடத்தில் ஒரு ஏக்கர் காணிக்குள் நெருக்கடி மிகுந்த வாழ்க்கை வாழ்கின்றார்கள். ஒரேயொரு பொதுக் கிணறு, ஒரு பொது மலசலகூடம், குடி தண்ணீருக்காக இரண்டு பைப்புகள் எனத் தொடர்கிறது அவலம்.

இம் மக்களின் பிள்ளைகள் படிப்பதற்குத் தமிழ்ப் பாடசாலை இல்லை. ஆனாலும் முஸ்லிம் மக்களோடு நெருக்கமான உறவு கொண்டிருப்பதால் முஸ்லிம் பாடசாலைகளிலேயே படிக்கிறார்கள். இது பிரச்சினைக்குரிய விடயமல்ல. பழகிப்போய்விட்டது. கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இவர்களின் பிள்ளைகளுக்கு இந்து சமயம் தொடர்பான அறிவு பூஜ்ஜியம்தான் என்பது. ஓரளவு வளர்ந்த பிள்ளைகள் சமய பாடம் படிக்க விரும்பினால் இருக்கும் இடத்திலிருந்து சுமார் 8 மைல் தொலைவிலுள்ள ஆலங்கேணி எனும் இடத்துக்குச் சென்று படிக்கின்றனர்.

இந்த ஏழை மக்களைக் காலத்துக்குக் காலம் விரட்டும் விஷயம் யாதெனில், இப்போது இருக்கும் காணி அரசுக்குச் சொந்தமானது என்பது பிரதான காரணம் என்பதால், எந்த நேரத்திலும் இந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தப்படலாம் என்ற பீதிதான்.


இந்தக் காணி கிண்ணியா வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ளது. தற்போது இவர்கள் அனைவரையும் ஆலங்கேணிக்கு அருகாமையில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

அங்கு சென்று குடியேற அனேகருக்கு விருப்பமில்லை. இருந்தபோதும் பிள்ளைகளின் எதிர்காலம் மட்டுமல்லாது சொந்தமாகக் காணி கிடைக்கும் என்பதால் சிலர் அங்கு போகவும் விரும்புகின்றனர்.

எது எப்படி இருந்தபோதும் நீண்ட காலம் அந்த இடத்திலேயே வாழ்ந்து வருபவர்கள் என்ற வகையில் இப்போது இருக்கும் காணியை, காணி வழங்கல் திட்டத்துக்கமைய பிரித்து அதில் குலுக்கல் முறையில் அதிர்ஷ்டப் பட்டியல் மூலம் சிலரையாவது குடியமர்த்துவதே மனிதாபிமான முடிவாக இருக்கும். இல்லாமல் அரசியல் காரணங்கள், தலையீடுகள் என்பவற்றை வைத்துக்கொண்டு ஏழைத் தொழிலாளர்களின் கூடுகளை உடைத்து, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த இடத்தைச் சூறையாடுவதானது விருப்பத்துக்குரிய விடயமில்லை. எனவே மதிப்புக்குரிய மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரம் வாய்ந்த அதிகாரிகளும் இவர்களுக்கு நியாயம் தரக்கூடிய சாதகமான முடிவுகளை எடுக்க வேண்டும் என அம் மக்கள் பெரிதும் அவாக் கொண்டுள்ளனர். எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.




## ஓம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீக உச்சாடணங்கள்



நான் செய்விக்கும் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகமே. இதனால் என் மூலம் நன்மை பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ? இனி என்ன உங்கள் பிரச்சினை, என்னிடம் கெடுதல் வேலைக்கு இடமில்லை. வெளிநாட்டவர்கள் மட்டுமே 24 மணித்தியாலமும் குறை நிறைகளைப் பேசித் தீர்க்க வாய்ப்புண்டு. பிரிந்தவர்கள் என் மூலமாக ஒன்று கூட, காதல் கைகூட, ஓடிப்போனவர் தேடி வர, குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்க கடன் சுமை குறைய, குபேர சாந்தி வாழ்வு பெற, மனப்போக்கு நிலை தடுமாற்றத்தை கட்டுப்படுத்த, தீராத நோய் தீர, திடீர்திருமணம் கைகூட, வெளிநாட்டில் தங்கி வாழ, குடிபோதையை நிறுத்தி சுகமான வாழ்வு பெற, தலை முடி உதிர்வதைத் தடுத்து நீண்டு வளரச் செய்ய, குபேர வாழ்வு பெற்றுச் சிறப்புடன் வாழ, அக்கு வேறு ஆணி வேறாக கைரேகை பார்த்துக்கொள்ள, காண்ட அடிப்படையில் ஜாதகம் கணித்து இதுதான் உங்கள் வாழ்வு எனத் தெரிந்துகொள்ள. என்னை காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை நேரில் சந்திக்கலாம். கடிதத்தில் பதில் பெற நேர அவகாசம் இல்லை. இன்னும் எனக்கு வந்த கடிதங்களில் சில.

(இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை)

**முறக்கொட்டாஞ்சேனை வாசகி : செய்தது பலித்துவிட்டது.**
ஐயா! எனது மகள் திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உண்டு. கணவர் 06 ஆண்டுகளாக பிரான்ஸில் உள்ளார். கணவன் ஜெனார்த்தனிடம் போக முடியாமல் ஆறு ஆண்டு காலமாக மிகுந்த மன வேதனையுடன் இருந்தபொழுது பத்திரிகையில் ஐயா அவர்களின் விளம்பரத்தைக் கண்டு அவரோடு தொடர்புகொண்டு கொழும்பு சென்று அவரின் ஆலயத்தில் பரிகார வேலைகளைச் செய்த பின் 2003ம் ஆண்டு 05ம் மாதம் 09ம் திகதி எனது மகள் தன் கணவன் இருக்கும் இடம் செல்லுவாள் என்று ஐயா கூறினார். ஆனால் குறிப்பிட்ட திகதிக்கு முன் 07ம் திகதியே பிரான்ஸ் போய்விட்டார் என்ற செய்தியை சந்தோசத்துடனும் பெருமையுடனும் அறியத் தருவதோடு ஐயா அவர்கள் ஆண்டாண்டு காலம் மக்களுக்கு நீண்ட நிலையான சேவையை செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**லண்டன் அன்பரின் மடல் : கடன் தொல்லை நீங்கி கையில் பணம் சேர்ந்து, மனைவியுடன் ஒன்று சேர்ந்தது.**
வணக்கத்துக்குரிய ஐயா அவர்களுக்கு!
துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கும் எனது குடும்பத்திற்கும் வாழ்க்கையில் வெளிச்சத்தைக் காட்டியமைக்கு எனது முதற்கண் நன்றி ஐயா! எனது வாழ் நாளில் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் உங்களை மறக்க மாட்டேன். தற்போது வெகு விரைவில் கனடாவிற்கு எனது மனைவியுடன் போகவுள்ளேன். நிம்மதியாகவும், சந்தோசமாகவும், கடன் தொல்லைகள் இல்லாமலும் கை நிறையச் சம்பாதித்து வாழ்க்கையில் சகல செல்வங்களும் (குழந்தைச் செல்வம் உட்பட) பெற்று எல்லோருக்கும் உதவி செய்து அவர்கள் சந்தோசத்தில் நான் சந்தோசத்தைக் காண எல்லாம் வல்ல துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கு வெற்றியளிக்கச் செய்து தந்த உங்களை மனித தெய்வமாகவே நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை உலகில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் சாமி....

**ஜேர்மன் அன்பரின் மடல் : மகளின் திக்குவாய் குணமாகியது.**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு பிறவியில் இருந்து திக்குவாயாக இருந்த எனது 09 வயது மகளை திக்குவாயில் இருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகின்றோம்.

**லண்டன் அன்பரின் மடல் : எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு! என்னை வெறுத்து என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்து என்னைச் சந்தோசத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் : 39 வயதில் அதிசயத் திருமணம்.**
பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்குப் பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத் தக்க வகையில் வெளியூரில் இருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்குக் கோடானு கோடி நன்றிகள்.

**பிரான்ஸ் அன்பரின் மடல்: குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி.**
அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஐயா! வெளிநாடு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத் தடை நீக்கிப் பரிகாரம் செய்து, குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்கு பிரான்ஸில் இருந்து இக் கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**ஹற்றன் அன்பரின் மடல் : தீராத தலைவலி தீர்ந்துவிட்டது.**
மதிப்புக்குரிய ஐயாவுக்கு! நெடு நாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**இத்தாலி அன்பரின் மடல் : சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி.**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா! வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோசமாகச் சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல்: போதை அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டவர்.**
அன்புக்குரிய ஐயாவுக்கு! எனது கணவரை நீண்ட நாள் போதைப் பொருள் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு எமது குடும்பத்துக்குப் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் : ஜாதகத்தில் கூறியது பலிதம்.**
மரியாதைக்குரிய ஐயா! உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றி அறியாமல் இருந்த எனக்கு இத்தனையாம் ஆண்டு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன். என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**நீர் கொழும்பு அன்பரின் மடல்: புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்.**
மாட்சிமை பொருந்திய ஐயா! சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்தி பேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னைப் பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்குக் கண்ணீரால் நன்றி கூறுகிறேன் ஐயா.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிசய குண்டல பூஜை.**
மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விஷேசமாக நடைபெறும் அக்கினி குண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மைத் துன்பத்தில் இருந்து காத்து வந்ததிற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா.

**சுவிஸ் அன்பரின் மடல்: குழந்தைப் பாக்கியம் கிடைத்தது.**
துர்க்கை சித்தர் அவர்களுக்கு! திருமணம் நடந்து நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்த எனக்கு தங்களின் பரிகாரத்தின் பின் குழந்தை கிடைக்கும் திகதியைக் கூறினீர்கள் ஐயா! நீங்கள் குறிப்பிட்டபடியே எனக்குத் தங்களின் ஞான சக்தியின் மூலம் குழந்தை கிடைத்தது. நானும் எனது குடும்பமும் மகிழ்ச்சியாய் உள்ளோம். எனது நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஸ்ரீ துர்க்கை அம்மனின் சக்தியால் பேசும் மழலை.**
மனித தெய்வமே! உங்கள் தெய்வ சக்தியால் பேசாத எம் 03 வயது மழலையைப் பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நன்மைகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: கணவன் – மனைவி பிணக்கு தீரல்.**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு! சின்னா பின்னமா இருந்த எமது குடும்பத்தை 7000 மைலுக்கு அப்பால் இருந்த வண்ணம், ஸ்ரீ துர்க்கை கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஔடத மூலிகையால் நீண்டு வளர்ந்த கூந்தல்.**
ஐயா அவர்களுக்கு! நீண்ட காலமாக எனது முடி உதிர்ந்து வெளியில் செல்வதற்கு வெட்கப்பட்டு வீட்டிற்குள்ளேயே இருந்தேன். ஐயா அவர்களின் ஔடத மூலிகையால் எனது கூந்தல் வளர்ந்து, கறுப்பாய், அடர்த்தியாய் உள்ளது. ஐயா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் : திருமணத் தடை நீங்கியது.**
கருணை உள்ளம்கொண்ட சுவாமிஜீக்கு! எனது அக்காவுக்கு இனிமேல் திருமணம் நடக்காது என்று முடிவு செய்திருந்தோம். ஆனால் ஐயா அவர்களிடம் வந்து சாந்திப் பரிகாரம் செய்த பின் அக்காவுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடந்து சந்தோசமாக உள்ளார். ஐயா அவர்களுக்கு எமது நன்றிகள்.

**மட்டக்களப்பு அன்பரின் மடல் : பிரிந்த காதலி ஒன்று சேர்ந்தது.**
என்னை வாழ வைத்த எனது தெய்வம் ஐயா அவர்களுக்கு!
எனது வாழ்க்கை திசைமாறி என்ன செய்வது என்று தடுமாறிய வேளையில் எனது நண்பனின் மூலமாக தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன். தங்களின் மாந்திரீக பூஜையின் பலனாக என்னைப் பிரிந்து சென்ற என் காதலி என்னிடம் மீண்டும் வந்தாள். எங்களுடைய இரு வீட்டாரின் முழுச் சம்மதத்தோடு எங்கள் இருவருக்கும் நல்லபடியாகத் திருமணம் நடைபெற்றது. ஐயா அவர்கள் கூறியது போல் எனது திருமணத்தின் பின்பு எனக்கு ஒரு நல்ல அந்தஸ்தோடு சந்தோசமாக நலமாக வாழ்கிறேன். எனது இந்த வாழ்க்கை ஐயா அவர்கள் எனக்களித்த அருள் காணிக்கையே! ஐயாவுக்கு எனது பல கோடி நன்றி கலந்த வணக்கம்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிர்ஷ்ட வீடு அமையப் பெற்று நோய் நொடி இன்றி வாழ்கின்றோம்.**
எனது வாழ்வுக்கு ஒளி ஏந்திய எங்கள் குல தெய்வமாகிய ஐயா அவர்களுக்கு!
தங்களின் அருள் ஞான சக்தியால் தங்களிடம் எனது ஜாதகத்தைக் கணித்து பரிகாரங்கள், பூஜைகள் செய்த பின் எனது வீட்டை முழுமையாக கட்டி முடித்தேன். வீட்டில் உள்ளவர்கள் நோய் நொடியின்றிச் சந்தோசமாக இருக்கின்றார்கள். கையில் பணம் தங்குகிறது, பொருளாதார நிலையில் ஐயாவின் அருளால் திருப்தியாக உள்ளோம். எனது குடும்பத்தாருக்கு மதிப்பும், மரியாதையும் எமது சமூகத்தில் கிடைப்பதற்கு வழியமைத்துக் கொடுத்த ஐயா அவர்களுக்கு நாம் விசுவாசத்துடனும், நன்றிக்கடன் பட்டவர்களாகவும் இருப்போம்.

**மன்னார் அன்பரின் மடல் :**
ஐயா! உங்களிடம் தெய்வீக ஞான ஒளிச் சக்தி இருப்பதை மனதார உணர்கிறேன், நன்றி. மன்னார் கனகசபை.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி**
**பேராசிரியர் டாக்டர். பி.கே.சாமி (J.D.G.AN) J.P.**

HOT LINE:
**01- 344832,**
**01- 470615**

PRO. **DR. P.K. SAMY** (J.D.G.AN) J.P.
SRI. DURGADEVI. MANTHARIKA UTCHADA PEEDAM, 162. KOTAHENA STREET. COLOMBO-13.
T.P. : 342464, 342463, 431137. FAX: 0094-1-344831. E.MAIL: *drpksamy@sttnet.lk.*


## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் : 29.12.1972
ஆண்டவன் அடியில் : 19.07.1997

ஆறுதல் சொல்ல
யாரிருந்தென்ன - உன்
ஆருயிர் அன்பிற்கு
ஈடாகுமோ - தேறுதல்
சொல்ல தெய்வம் வந்தென்ன
குமரா - உன் திருமுகம்
பார்த்தால் போதாதோ - எம்
உள்ளங்கள் துடித்திட நீ எங்கு
சென்றாய், எந்நாளும் உன்
நினைவால் கண்ணீரால் கரைகின்றோம்.

ஆறு ஆண்டுகளென்ன அறுபது
ஆண்டுகள் சென்றிடினும் எம் நெஞ்சமதில்
உன் நினைவுகள் என்றும் நீங்காது.

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.



**விநாயகமூர்த்தி ஆனந்தராசா**

தகவல்: விநாயகமூர்த்தி குடும்பத்தினர்.

இன்னொருவர் பார்வையில்

# அமைதிச் செயற்பாட்டின் மீதான மக்களின் நம்பிக்கையை வலுவூட்டல்

**அமைதி ஆதரவுக் குழு (The Peace Support Group) சார்பாக தென்னிலங்கையின் முக்கிய பிரமுகர்களான சுனிலா அபயசேகர, சுனில் பஸ்ரியன், சுனந்த தேசப்பிரிய, ரொகான் எதிரிசிங்க, ஜெகான் பெரேரா, ஜோ.வில்லியம், ஜாவிட் யூசுப் ஆகியோருடன் கேதீஸ் லோகநாதன், பாக்கியசோதி சரவணமுத்து, ஜீவன் தியாகராசா ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கம்.**

அமைதி முயற்சிகள் தொடர்பாக அமைதி ஆதரவுக் குழு தற்போதைய சூழ்நிலைகள் குறித்து தனது கவலைகளை வலியுறுத்த விரும்புகின்றது. ஜூன் மாதத்தில் நடைபெற்ற டோக்கியோ மாநாடு இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் ஆதரவினை மீள உறுதிப்படுத்த இருக்கின்றது. எனினும் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை முதல் அரசியல் படுகொலைகள் வரை விரிந்து செல்கின்றன. பல விடயங்கள் மற்றும் கடலில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் என்பனவற்றைக் குறைத்து மதிப்பிட முடியாது. இதனால் நேரடிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதையும், சமாதான முயற்சிகளில் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதையும் முக்கியமாக வலியுறுத்த வேண்டியுள்ளது.

டோக்கியோவில் நடந்த உதவி வழங்கும் மாநாடு மற்றும் அபிவிருத்தியின் ஊடாக சமாதானம் என்பதற்காக வழங்கப்பட்ட நிதியில் பெரும்பங்கு கடன்களாகவே உள்ளது. இதனால் இலங்கையின் மொத்தக் கடன் பளு அதிகரித்துள்ளமை கவலைக்குரிய ஒரு விடயமாகும். அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி ஆகிய நடவடிக்கைகளுக்குரிய திட்டங்களைத் தீட்டுகின்ற போதும், முன்னுரிமைப்படுத்துகின்றபோதும் மிக முக்கியமாக பாதிக்கப்பட்ட சமூகங்களின் போதிய ஆலோசனைகள், பங்குபற்றல்கள் பெறப்பட வேண்டுமென விரும்புகிறோம். மிகவும் சர்ச்சைக்குரிய முக்கியத்துவம் பெறும் இதே இரண்டாவது விடயத்தில் யுத்தத்தின் விளைவாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வேறுபட்ட தன்மைகளும், பரிமாணங்களும் கொண்ட அவசர தேவைகள் இருக்கின்றன. இது இப் பிராந்தியத்திற்கு வெளியேயுள்ள இடங்களுக்கு இதுவரை காலமும் பெருந் தொகை உதவி நிதி (Donor Funds) பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ள விடயத்துடன் சேர்த்து தெளிவாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

சமாதான நடவடிக்கையில் முக்கியமானதும், ஒருங்கிணைந்ததுமான ஒரு கூறாக மனித உரிமைகளை வலுவாகப் பாதுகாப்பது என்பதை ஆரம்பத்திலிருந்து எப்போதும் சமாதான ஆதரவுக் குழு வலியுறுத்தி வந்துள்ளது. அடிப்படை மனித உரிமைகளைப் புறந்தள்ளி பயமும், பாதுகாப்பின்மையும் நிலவும் ஒரு சூழலிலிருந்து சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது. சமாதான செயற்பாட்டின் வெற்றிக்கும், சட்டபூர்வமான நிலை நிறுத்தலுக்கும் மனித உரிமைகள் மீது சம்பந்தப்பட்ட சகலரினதும் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடு தவிர்க்க முடியாதது. அண்மைக் காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரசியல் படுகொலைகள் தொடர்ச்சியாக இடம் பெறுவது கவலைக்குரியதாகும். புலிகளுக்கு எதிரான அரசியற் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள், தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள், அரசியல் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிச் சென்ற முன்னாள் உறுப்பினர்கள், எனப் பலர் புலிகளின் படுகொலைக்கு இலக்காகி உள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியைச் சேர்ந்த த.சுபத்திரனின் படுகொலையானது கொல்லப்படும் இலக்குகளாக உள்ளூர் கட்சித் தலைவர்களை உள்ளடக்குவதில் ஒரு பண்பு ரீதியான மாற்றத்தைக் குறிக்கிறது. அத்துடன் புலிகள், உச்சக்கட்ட பொறுமையின்மை மற்றும் மாற்றுக் கருத்துக்களை நசுக்குவது, அடங்கிப் போகச் செய்வது, என்பவற்றுக்கு வன்முறைகளைப் பயன்படுத்துவதில் நம்பிக்கையையும், விடாப்பிடியையும் கொண்டிருப்பதை எதிரொலிப்பதாக இருக்கிறது.

சமாதான ஆதரவுக் குழு இக் கொலைகளை திட்டவட்டமாகவும் பகிரங்கமாகவும் கண்டிக்கிறது. அத்துடன்,

1. இலங்கை மக்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இலங்கை அரசாங்கத்திற்கே உண்டு. அதனால் எங்கு வாழ்ந்தாலும் இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனவும்,

2. பன்முகத்தன்மை, ஜனநாயகம் ஆகியவற்றின் மீது தமது அர்ப்பணிப்பை புலிகள் சொல்லிலும் செயலிலும் காட்ட வேண்டும் எனவும்,

3. இவ் விடயங்கள் மிகவும் முக்கியமானவை என்பதனால் புலிகள் மீதும், அரசாங்கத்தின் மீதும் சர்வதேச சமூகம் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் எனவும், கேட்டுக்கொள்கிறது.

## பாரிய உள்ளடக்கங்கள்

சமாதானத்தையும், அபிவிருத்தியையும் உருவாக்குவதில் புலிகளும், ஐ.தே.மு.அரசாங்கமும் தெளிவான பிரதான செயற்பாட்டாளர்களாக இருக்கின்றனர். எனினும் இவர்கள் மட்டும் தான் செயற்பாட்டாளர்கள் என்னும் எடுகோள் ஏனையவர்களை ஓரம்கட்டி விடுவதாக இருக்கிறது. இது சமாதான நடவடிக்கைகளில் பரந்ததும், உள்ளடங்கலுமான பங்குபற்றலை வளர்த்து எடுக்கும் பிரதான நோக்கத்தைக் கீழ் நிலைப்படுத்துகிறது. மேலும் ஏனைய கட்சிகளை ஓரங்கட்டுதல் மற்றும் வெளியேற்றுதல் (சமாதான முயற்சிகளில் இருந்து) ஆகியன இலங்கை முழுவதும் ஜனநாயகத்தையும், பன்முகத் தன்மையையும் வளர்க்கும் பிரதான நோக்கத்தினையும் கீழ்நிலைப்படுத்துகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்த நிறுத்தத்தை மேலும் வலுவுள்ளதாக்கவும், சமாதான நடவடிக்கை சரியான திசையில் சரியான இலக்கை அடைவதற்கும் பொதுசன முன்னணிக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையே மிக முக்கியமான இணைந்த முயற்சியை (Bi Partisan Ship) மிகவும் உறுதியாக நாங்கள் வலியுறுத்துகிறோம். இந்த இரு பிரதான கட்சிகளும் இணைந்து முக்கிய விடயங்களில் கருத்தொற்றுமையை உருவாக்க முடியாத சந்தர்ப்பம் அல்லது கருத்து ஒற்றுமையை உருவாக்க விரும்பாத நிலைமை சமாதான நடவடிக்கையை மோசமாகப் பாதிப்படையச் செய்கிறது. அத்துடன் அரசியல் உறுதிப்பாடற்ற நிலைமையை உருவாக்கி அதனை நீடிக்கச் செய்கிறது.

புலிகளின் கப்பல் மீது கடற்படையினர் நடாத்திய தாக்குதல் குறித்து பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பிரதம மந்திரியோ எதுவும் அறியாது இருந்தார்கள் என்னும் ஊடக அறிக்கைகளும், பாதுகாப்பு அமைச்சும் ஜனாதிபதி செயலகமும் வெளியிட்ட ஒன்றுக்கொன்று முரணான அறிக்கைகளும், இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். நாட்டின் ஆயுதப் படைகளின் பிரச்சினை, வடக்கு - கிழக்கில் குறிப்பாக மிகச் செறிவாக ஆயுதப் படையினர் நிலைகொண்டுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் கசப்பான பிரச்சினையாகத் தொடர்கின்றது. பிரச்சினைகளை கசப்பான நிலைக்கு அனுமதிக்கின்றபோதும் அதற்குரிய தீர்வு நோக்கிய எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருக்கின்றபோதும் சமாதான முயற்சிகள் ஆபத்திற்கு உள்ளாகக் கூடும். எதிர்த் தரப்பினர் அதி

தமது கட்டளைகளை இரு வேறு அதிகார மூலங்களிலிருந்து பெறுகின்ற சூழ்நிலையானது தேசிய பாதுகாப்புக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் ஆபத்தை உருவாக்குகின்றது. ஆயுதப் படையினரைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதன் மூலம் விரைவான தீர்வைக் காண வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

பேச்சுவார்த்தைகளில் வெற்றிகரமான முடிவுகளை அடைவதற்கும், எந்தக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதாக இருப்பினும் இறுதியான அரசியலமைப்பு இணக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு பொதுசன ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான கூட்டிணைவு அத்தியாவசியமானது. எனவே இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாக இருப்பதால் இதனை நோக்கி உறுதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது இந்த இரு கட்சிகளினது கடமையும், பொறுப்புணர்வும் ஆகும்.

> தற்போது இருந்து வருகின்ற முட்டுக்கட்டையை உடைப்பதற்கு பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது மிக முக்கியமானது. அர்ப்பணிப்பும், திட்டமிடலும் சமாதான நடவடிக்கையை முன் நோக்கி நகர்த்த அவசியமானவையாகும்.

> அடிப்படை மனித உரிமைகளைப் புறந்தள்ளி பயமும், பாதுகாப்பின்மையும் நிலவும் ஒரு சூழலிலிருந்து சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது

## இடைக்கால ஏற்பாடுகள்

நேரடிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்குத் தற்போதுள்ள முட்டுக்கட்டை புலிகள் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக் கோரிக்கையை வலியுறுத்துவதாகும். ஊடகங்கள் குறிப்பிடுவது போல அரசாங்கம் தனது பதில்களை புலிகளுக்குத் தெரியப்படுத்தி வருகின்றது. டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்பாக மே மாதம் 27ந் திகதி சமாதான ஆதரவுக் குழு வெளியிட்ட அறிக்கையில் தெரியப்படுத்திய நிலைப்பாட்டை இங்கு மீள வலியுறுத்துவது பொருத்தமானது. அதில் குறிப்பிடத் தக்க முக்கிய அம்சம் பின்வருமாறு :

சகல இடைக்கால ஏற்பாடுகளும், நடைமுறையில் இருந்து வரும் பேச்சுவார்த்தை செயற்பாட்டின் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், சரிவரக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும், ஜனநாயகத்தன்மை கொண்டவையாகவும் இலங்கையின் அரசியலமைப்பிலிருந்து விலகாததாகவும் இருப்பதை மிகவும் முக்கியமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இடைக்காலப் பகுதியில் உருவாகின்ற அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவு செய்வதற்குப் பொருத்தமான இலட்சியப் பொறிமுறையை உருவாக்கும்போது எழக்கூடிய அரசியலமைப்பு விடயங்கள், சிக்கல்கள் என்பவற்றை எதிர்கொள்வதில் இணங்கிப் போதல், விட்டுக் கொடுத்தல் மற்றும் கூட்டுறவு ஆகியன பேணப்பட வேண்டும்.

சமாதான முயற்சிகளுக்கு தம்மை அர்ப்பணித்துள்ள சகல கட்சிகளுக்கும் இந்த விடயங்களை நிறைவுபடுத்துவது முக்கியமானதாகும். அதாவது இந்தப் பொறிமுறையானது தனியே இடைக்கால ஏற்பாட்டின் ஒரு பகுதியே. அத்துடன் முழுமையானதும், திறந்ததுமான பேச்சுக்கள் சமாதான செயற்பாடு முழுவதிலும் தொடரப்பட வேண்டும். இதன் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமஷ்டி மற்றும் உள்ளக சுய நிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையில் நாம் இறுதி அரசியல் இணக்கப்பாட்டை அடையலாம்.

தற்போது இருந்து வருகின்ற முட்டுக்கட்டையை உடைப்பதற்கு பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது மிக முக்கியமானது. அர்ப்பணிப்பும், திட்டமிடலும் சமாதான நடவடிக்கையை முன்நோக்கி நகர்த்த அவசியமானவையாகும்.

## கடற் சம்பவங்கள்

ஆயுதங்களை எடுத்து வருவதாகக் கூறப்படும் புலிகளின் கப்பல் மூழ்கியது மற்றும் பன்னிரண்டு பேர் உயிரிழந்தமை குறித்த கடற் சம்பவத்திற்கு தனது ஆழ்ந்த கவலையை சமாதான ஆதரவுக் குழு தெரிவிக்கின்றது.

கடலில் அடிக்கடி இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் காரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையினையும் அதில் அமைந்துள்ள செயற்பாட்டு நடைமுறை ஒழுங்குகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மை அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையை எடுக்க யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும். இதில் நோர்வே ஏற்பாட்டாளர்கள் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியோரையும் உள்ளடக்கி இலங்கை அரசாங்கமும், புலிகளும் முனைப்புடன் ஈடுபட வேண்டும். மேலும் கிண்ணியாவில் புதிதாக உருவாகிய புலிகளின் முகாம் பற்றிய விடயம் குறித்தும் நாம் இங்கு குறிப்பிடுகின்றோம். இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கட்டுப்பாடுகளை இரு தரப்பினதும் ஒத்தழைப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாது. குரங்குபாஞ்சான் முகாம் அமைப்பு விடயத்தில் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு ஒத்துழைக்க முன் வருமாறு புலிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

## மீள் குடியேறுவோர் உரிமைகள்

அதி உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாது இடம் பெயர்ந்த மக்

கரித்ததும், தீவிரமானதுமான செயற்பாடுகளுக்கு ஆதரவு அதிகரிக்கிறது என்பது குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். இவ் விடயத்தில் அரசும், புலிகளும், தத்தம் தரப்புத் தகவல்களை மீளாய்வு செய்து வடக்கு-கிழக்கு மாகாணத்தை இராணுவ மயமாக்கத்திலிருந்து விடுவிக்க வழி காண வேண்டும். இவ் வகையில் சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்ப விருப்பம் கொண்டுள்ள மக்கள் அவ்வாறு செய்ய வழி காணப்படல் வேண்டும்.

உள்ளூரில் இடம் பெயர்ந்து வாழும் மீள் குடியேற விரும்புவோரின் துயரங்கள் குறித்தும் சமாதான ஆதவுக் குழு சுட்டிக்காட்ட விரும்புகிறது. அவர்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதி உதவித் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஒரு பகுதி நிதிக் கொடுப்பனவு கூட அவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. சாதாரண மக்களின் வாழ்க்கையில் அவர்களது அன்றாட துயரங்களைக் களைவதிலும், அவர்களது எதிர்கால எண்ணங்களில் திடப்பாடுகளை உருவாக்குவதிலும் மாற்றங்களை ஏற்படுத்தாத ஒரு அமைதி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடும் தொடர்ந்து நிலைபெற முடியாது.

அரசினதும், புலிகளினதும் அரசியல் தலைமைப் பீடங்கள் மிகவும் முக்கிய விடயமாக இதனை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களுக்கான வழிகாட்டல் தத்துவங்களை அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டும். அமுல்படுத்துவதில் ஏற்படும் தவறுகள் அவர்களது அர்ப்பணிப்பில் உள்ள இடைவெளியைப் புலப்படுத்தும்.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் நடவடிக்கை எடுக்கத் தவறுகையில் ஏற்படும் ஒட்டுமொத்த தாக்கங்கள் சமாதான நடவடிக்கையின் தொடர்ச்சியில் மக்களின் நடவடிக்கையைச் சிதறச் செய்யும். இந்த அபாயம் தவிர்க்கப்பட வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் நன்மை குறித்த பார்வைகள் என்பன சந்தேகம், ஆவல் மற்றும் பயம் என்பவற்றினால் மீள நிரப்பப்பட்டு விடும். இதே நிலைமையை மறுதலையாக மாற்றியமைப்பதை மிக உயர்ந்த முன்னுரிமைச் செயற்பாடாக கொள்ள வேண்டும். இதனை நிலை நிறுத்துவதில் அனைத்து அரசியல் தலைவர்களும் முதன்மையான பொறுப்பைக் கொண்டிருப்பதாக இலங்கை மக்கள் கருதுகிறார்கள். ■

# வெலிக்கடைச் சிறைப் படுகொலை

ஜூலை என்றாலே 83 இனக் கலவரம்தான் தமிழ் பேசும் மக்களுக்கு ஞாபகம் வரும்!

ஜூலைக் கலவரம் நடந்து இருபது வருடங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை அந்த வடுக்கள் மாறவில்லை.

83 ஜூலை 15 ஆம் திகதி மீசாலையில் வைத்து சீலன் என்று அழைக்கப்படும் சாள்ஸ் அன்ரனி என்ற புலிகள் இயக்கப் போராளி இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். இவர் பிரபாகரனின் உற்ற நன்பனும் நம்பிக்கைக்குரிய தளபதியுமாவார். இந்த இழப்பு பிரபாகரனை ஆத்திரமடையச் செய்தது. பழிக்குப் பழி என்று பதிலடி நடவடிக்கைக்குத் தயாரானார் பிரபாகரன்.

***கண்ணி வெடி தாக்குதல்***

யாழ் திருநெல்வேலி வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் கண்ணி வெடிகளைப் புதைத்தனர் புலிகள். பலாலி இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டு புலிகளின் மறைவிடம் ஒன்று திருநெல்வேலியில் இருப்பதாகத் தகவல் கொடுத்துவிட்டுக் காத்திருந்தானர். தகவலை நம்பிய இராணுவத்தினர் குறிப்பிட்ட வீதி வழியாக ட்றக் வண்டியில் வந்து கொண்டிருந்தனர். கண்ணிவெடியில் சிக்கி பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதல் 23 ஜூலை 1983ல் நடைபெற்றது. இராணுவத்தினரின் உடல்கள் தென்னிலங்கைக்குச் செல்ல பெரும் காட்டுத் தீ போல் இனக் கலவரம் பரவியது. இக் கலவரத்தின்போது நிகழ்ந்த மிகக் கொடூரமான மனித வேள்விதான் வெலிக்கடைச் சிறைப் படுகொலை. அதன்போது உயிர் தப்பிய இரு தமிழ் அரசியல் கைதிகள் கூறும் பயங்கர அநுபவம் இது.

***வெலிக்கடைச் சிறையில் 1983 ஜூலை 25, 27ம் திகதிகளில் 53 தமிழ்க் கைதிகள் கொலையுண்டபோது உயிர் தப்பி வந்தவர்களில் ஒருவர் இவர். பெயரை வெளியிட வேண்டாமென்று கூறிக்கொண்டு, தான் கண்டவற்றை இங்கே தருகிறார்.***

உங்களுக்கு முதலில் வெலிக்கடைச் சிறையின் (அன்றைய) அமைப்பைக் கூறினால்தான் புரிய வைப்பது சுலபமாக இருக்கும். பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்ட சிறை அது. இலங்கையின் இரண்டாவது பெரிய சிறை. சிறை வளவினுள் பல பகுதிகள் இருந்தாலும் சம்பவம் நடந்த பகுதியை மட்டும் தருகிறேன்.

பிரதானமான இடம் சிலுவை வடிவில் அமைந்த-பரேட் என்று அழைக்கப்படும் சிறைக்கூடம். இது A,B,C,D என நான்கு கட்டடத் தொகுதிகளைக் கொண்ட 2 மாடிக் கட்டடம். ஒவ்வொன்றிலும் மேல் மாடி 1 எனவும், 1ம் மாடி 2 எனவும், தரைப் பகுதி 3 எனவும் குறிக்கப்படும். அதன்படி தொகுதியில் **A1,A2,A3,** என்ற தட்டுகளும் இவ்வாறே **B,C,D**யிலும் இருக்கும். ஒவ்வொரு தட்டின் இரு மருங்குகளிலும் நீளப் பக்கத்திற்கு பல சிறைக் கூடுகள் உண்டு.

**A-3,B-3,C-3,D-3**ஆகிய தரைப் பகுதிகள் யாவும் **Special Wards** என்று விசேட கைதிகளுக்காக அதாவது பெரும் குற்றவாளிகளுக்காக ஒதுக்கப்பட்டவை. அவற்றில் **C-3**,யானது மரண தண்டனைக் கைதிகளுக்காக ஒதுக்கப்பட்டது. அங்கு தூக்கு மேடை ஒன்றும் உண்டு.

மேலேயிருக்கும் இரண்டு தட்டுகளும் (2,1) சாதாரண கைதிகளுக்கானவை.

இந்தச் சிலுவை வடிவ பரேட்டின் மத்தியில் எல்லாத் தொகுதிகளின் தட்டுகளுக்கும் போய் வரும் படிகள் கொண்ட அகன்ற சந்திப்பிடம் உண்டு. **B,C** தொகுதிகளின் சந்திப்பில் பிரதான கதவு அமைந்திருக்கும். அதனூடாக மைதானத்துக்கு வரலாம். மைதானத்தில் சற்றுத் தொலைவில் ஒரு அரச மரமும் புத்த விகாரையும் உண்டு.

சம்பவத்துடன் ஒட்டி மீதி அமைப்பைப் பின்னர் கூறுகின்றேன். இச் சிறையில் சிங்களக் கைதிகளே இருந்தனர். குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டதும் அவர்கள் தூக்குத் தண்டனைக் கைதிகளுக்குரிய **C-3** சிறைக்கு கொண்டுவரப்பட்டனர். பின்னர் **B-3**க்கு மாற்றப்பட்டனர். இவர்களுடன் வழக்கில் சம்பந்தப்பட்ட ஆயுள் தண்டனை மற்றும் தண்டனைகள் விதிக்கப்பட்ட தங்கத்துரை, தேவன், நடேசுதாசன், சிவபாதம் மாஸ்டர் ஆகியோரும் கொண்டுவரப்பட்டு **B-3** இல் வைக்கப்பட்டனர்.

பனாகொடை இராணுவ முகாமில் தமிழ்க் கைதிகள் நடத்திய உண்ணா விரதமொன்றைத் தொடர்ந்து 83 மே மாதமளவில் அவர்கள் வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டனர்.

அப்போது இங்கு **C-3** இலிருந்த தூக்குத் தண்டனைக் கைதிகளை வேறு சிறைக்கும் **D-3** லிருந்த சிங்களக் கைதிகளை வெலிக்கடைச் சிறையின் வேறு பக்கத்திலுள்ள **H** வார்ட் எனும் பகுதிக்கும் மாற்றிவிட்டு அவ்விடத்தில் (அதாவது **C-3** இலும் **D-3** இலும்) புதிய தமிழ்க் கைதிகளை அடைத்தனர்.

இதே வேளை **A-3, B-3** ஆகியவற்றில் இருந்த சிங்கள ஸ்பெஷல் கைதிகளும் மேல் தட்டுக்களிலிருந்த சிங்கள சாதாரண கைதிகளும் மாற்றப்படவில்லை. **B-3** இலேயே குட்டிமணி, தங்கத்துரை உட்பட முன்னைய 6 தண்டனைக் கைதிகளும் இருந்தனர்.

**25ம் திகதி....**

வெளியே கலவரத்தின் கூக்குரல்கள் கேட்கின்றன. புகை மூட்டங்கள் தெரிகிறது. உள்ளே பதற்றமான சூழ்நிலை. யாழ்ப்பாணத்தில் சிறை அதிகாரிகளையும் சிங்களக் கைதிகளையும் தமிழ்க் கைதிகள் கொன்றுவிட்டதாக ஒரு வதந்தி சிறைக்குள் பரவுகிறது. சிங்களக் கைதிகள் மத்தியில் ஒரு வெறிகொண்ட மனோபாவம் மூள்கிறது.

**பகல் 2 மணி.....**

இந்நேரம் பார்த்து சிறை உயர் அதிகாரிகள் யாவரும் மதிய உணவைச் சாட்டிக்கொண்டு சிறையை விட்டுச் செல்கிறார்கள். அது கூடாத ஏதோ ஒன்று நடக்கப் போவதற்கான அறிகுறி போல் எமக்குத் தோன்றுகிறது.

திடீரென பெரும் சத்தத்துடன் கத்தி, விறகுக் கட்டை, அலவாங்கு, உளி, குத்தூசி, கோடரி போன்ற ஆயுதங்களை ஏந்தியபடி சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகளிருந்த வார்டுகளை நோக்கிப் பாய்கிறார்கள். குசினி, தச்சப் பட்டறைகளிலிருந்து தாக்குதலுக்கான ஆயுதங்கள் பெறப்பட்டன.

வழமையாக இந்த ஆயுதங்கள் அறையில் பூட்டியே வைக்கப்பட்டிருக்கும். அதன் திறப்பு சிறை அதிகாரிகள் வசமே இருக்கும். எந்தக் கைதியும் ஆயுதம் வைத்திருக்க அனுமதியில்லை. ஒரு கைதி இன்னொரு கைதியை வெறுங் கையால் தாக்கினால் கூட கடுமையான தண்டனை.

ஆனால் அன்று அவையொன்றும் அமுலில்லை. ஆயுத அறையைத் திறந்து கொடுத்தது யார் என்று அறியும் நிலைமையும் இல்லை.

வெளியில் இறங்கிய சிங்களக் கைதிகள் **B-3** வார்டினுள்ளும் **D-3** வார்ட்டினுள்ளும் புகுந்து தாக்கினர். அந்த வார்டுகளின் மூடப்பட்ட சிறைக் கதவுகளின் சாவிகள் கூட சிறைப் பாதுகாவலர்களிடமே இருக்கும். அவை உடைக்க கூடிய சாதாரண பூட்டுகளல்ல. எப்படித் திறக்கப்பட்டன என்பது மர்மமாகவே இருக்கிறது.

எப்படியோ அக் கதவுகள் திறந்து **B-3** இல் இருந்த குட்டிமணி, தங்கத் துரை, ஜெகன் உட்பட 6 பேரும் **D-3** ல் இருந்த 29 பேருமாக மொத்தம் 35 பேர் அன்றைய தினத்தில் கொல்லப்பட்டார்கள்.

அவர்களது உடல்கள் இழுத்து வரப்பட்டு மைதானத்தில் புத்தர் கோயிலுக்கருகில் போடப்பட்டன. குட்டிமணி, ஜெகன் ஆகியோரின் கண்கள் தோண்டப்பட்டிருந்தன. மரண தண்டனை விதிக்கப்பட்டபோது குட்டிமணியும் ஜெகனும் தங்கள் கண்களை கண்ணில்லாத தமிழ் மகன் ஒருவனுக்கு வழங்கும்படியும் மலரும் தமிழீழத்தை தாம் அவ் விழி மூலம் பார்ப்பார்கள் எனவும் நீதிமன்றத்தில் கூறிய வாக்கியத்திற்குப் பழிவாங்கலாக இது நடந்தது.


**26ம் திகதி....**

அடுத்த நாள் நீதிபதி, எஸ்.பி. ஆகியோர் வந்து ஒரு சிறிய விசாரணை நடத்தினர். பின்னர் **C-3** இல் இருந்த தமிழ்க் கைதிகளை சற்றுத் தள்ளியுள்ள **YO (Youth Offendence)** எனப்படும் இளம் குற்றவாளிகளின் சிறைக் கூடத்திற்கு மாற்றினர்.

அதன் மேல் மாடியில் ஏற்கனவே ஃபாதர் சிங்கராஜா, நித்தியானந்தன், கோவைமகேசன், டொக்டர் ராஜசுந்தரம், ஜெயகுலராஜா, போதகர் ஜெயதிலகராஜா, ஃபாதர் சின்னராஜா, டொக்டர் தர்மலிங்கம், டேவிட் ஐயா ஆகியோர் இருந்தனர்.

மாற்றப்பட்ட கைதிகள் கீழ் தளத்தில் உள்ள சிறைக் கூண்டுகளில் மூவர் அல்லது அதற்கு மேலும் அடைக்கப்பட்டனர்.


வெலிக்கடை சிறைச்சாலை




**27ம் திகதி.....**

25ம் திகதி இப்படியொரு சம்பவம் நடந்தும் மீண்டும் பழையபடி சிங்களக் கைதிகள் வழமை போல வேலைக்குச் செல்லத் திறந்துவிடப்பட்டிருந்தனர்.

மதியம் இரண்டரை மணிக்கு ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது. உயர் அதிகாரிகள் அன்றும் வீடு சென்றுவிட்டனர்.

அடுத்த தடவையும் வார்டினுள் நுழைந்த சிங்களக் கைதிகள் தாக்கத் தொடங்கினர். இம் முறை சாதாரண கைதிகளுடன் **A-3** இல் இருந்த விசேட கைதிகளும் தாக்குதலில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. அவர்களோடுதான் இத்தாலிய விமானத்தைக் கடத்திய சேபால ஏக்கநாயக்கவும் இருந்தான்.

**A-3** வார்டிலிருக்கும் விசேட கைதிகள் இவ்வேளை வெளியே வர வேண்டுமாயின் நிச்சயமாக யாராவது அவர்களின் சிறைக் கூண்டுகளைத் திறந்துவிட்டாக வேண்டும். உள்ளிருந்து எவ்வகையிலும் அவர்கள் வெளியே வர முடியாது.

**YO** வார்டை தாக்கியவர்கள் அங்கு மேல் மாடியிலிருந்த டாக்டர் ராஜசுந்தரம் உட்பட மொத்தம் 18 பேரை அன்று கொன்றார்கள். இவ்வேளையில் எஸ்.பி., பிரதம ஜெயிலர், ஏ.எஸ்.பி.ஆகியோர் சகிதம் வந்த இராணுவ அணியொன்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், வானத்தை நோக்கி வெடிவைத்தும் தாக்குதல்காரர்களைக் கலைத்தார்கள். இறந்தவர்கள் போக மீதமிருந்த தமிழ்க் கைதிகள் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்கள்.

இச் சம்பவங்கள் நிகழ்ந்தபோது சிறைக் கமிஷனர் தெல்கொட வெளிநாடு சென்றிருந்தார். பதில் கமிஷனராக ஜான்ஸ் இருந்தார்.

## அநுபவம் – 02

***வெலிக்கடைச் சிறைப் படுகொலைச் சம்பவத்தின்போது தாக்கப்பட்டு குற்றுயிராய் மரணத் தறுவாயிலிருந்து உயிர் தப்பியவர் யோகராஜா. அவர் தன் பயங்கர அநுபவத்தைத் தருகிறார்...***


யோகராஜா

குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருடன் இயங்கி வந்த நான் 1981 ஏப்ரல் 18ம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டேன். ஆனையிறவு முகாமிலிருந்து பனாகொடை இராணுவ முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு 1983 மே மாதமளவில் நிகழ்ந்த உண்ணாவிரதத்தை அடுத்து ஏனைய தமிழ்க் கைதிகளுடன் வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டேன்.

நான் இருந்தது பரேட்டின் **C-3** பகுதியில். அங்குதான் டக்ளஸ் தேவானந்தா, மாணிக்கதாசன், ஞான சேகரன் (பரந்தன் ராஜன்) பனாகொடை மகேஸ்வரன் ஆகியோரும் வைக்கப்பட்டிருந்தார்கள். குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை - தேவன், நடேசதாசன், சிவபாதம் மாஸ்டர் ஆகியோர் **A-3**ல் இருந்தனர்.

23ம் திகதி யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடந்து 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவம் எமக்குத் தெரியாது. எமக்கு ரேடியோ, பேப்பர் தரப்படுவதில்லை.

24ம் திகதி வெளியே கலவரச் சத்தம், சூட்டுச் சத்தம் கேட்க ஏதோ பிரச்சினை என்று ஊகித்தோம். 25ம் திகதி காலை 8 மணிக்கு எம்மை மைதானத்துக்கு விட்டபோது **B-3**ல் இருந்த குட்டிமணி கைகளால் சைகை காண்பித்து யாழ்ப்பாணத்தில் 13 ஆமியைச் சுட்டாச்சு என்றும் வெளியே கலவரமென்றும் சொன்னார். அவர்கள் தண்டனை பெற்ற கைதிகளாகையால் பேப்பர் பார்ப்பதற்குக் கிடைக்கும்.

சிறைக்குள்ளே ஒரு டென்ஷன். 10 மணிக்கு எம் எல்லோரையும் திரும்ப செல்களுக்குள் அடைத்துப் பூட்டிவிட்டார்கள்.

எம்மைத் தனித்தனி செல்களுக்குள்தான் வைத்திருந்தார்கள்.

மத்தியானச் சாப்பாடு முடிந்து சிறிது நேரம் கழிந்திருக்கும். குட்டிமணியின் செல் இருந்த பகுதியில் ஏதோ பெரிய சத்தங்கள். உடைத்து நொருக்கும் சத்தங்களும், பலர் ஓடியாடித் திரியும் ஓசையும்....ஏதோ ஆபத்து என்று மட்டும் தெரிந்தது எமக்கு.

சென்றிக்கு நின்ற காவற்காரனிடம் கேட்டோம். அவன் எதுவுமே சொல்லவில்லை. மாணிக்கதாசன்தான் சுவர் வழியாக ஏறிப் பார்த்துவிட்டுச் சொன்னார். "தமிழ்க் கைதிகளைக் கொன்று மைதானத்துக்கு இழுத்துப் போகிறார்கள்" என்று.

எமக்குக் காவலாய் நின்ற ஜெயிலர் நல்லவன். எம்மை முன்னுக்கு வந்து நிற்க வேண்டாம் என்றான். அவன் ஒரு வேலை செய்தான். அதனால் நாங்கள் காப்பாற்றப்பட்டோம்.

தன்னிடமிருந்த எமது செல்களின் சாவிக் கொத்தை டொய்லட்டுக்குள் கொண்டுபோய் மறைத்து வைத்துவிட்டான். "எனது சவத்தைத் தாண்டித்தான் அவர்கள் உங்களிடம் வரமுடியும்" என்று சொன்னான் அவன்.

மாலை ஐந்தரை மணி போல் தாக்குதல்கள் ஓய்ந்தன. அவ்வேளையில் மேல் மாடியிலிருந்து 'இருவர் பலகையை உடைத்துக்கொண்டு எமது கொரிடோருக்குள் குதித்துவிட்டனர். அவர்களில் ஒருவன் பூட்டிய செல்

களுக்குள் இருந்த எம்மைப் பார்த்து "குட்டிமணி ஆட்களைக் கொன்றுவிட்டோம். உங்களை உயிரோடு விடுகிறோம். யாழ்ப்பாணத்தில் போய் சொல்லுங்கோ" என்றான். காவல்காரன் அவர்களை வெளியே அனுப்பிவிட்டான்.

இரவு எவரும் சாப்பிடவில்லை. டக்ளஸ், மாணிக்கதாசன், பனாகொடை மகேஸ்வரன், ராஜன் ஆகியோர் நாம் என்ன செய்ய வேண்டுமென எம்முடன் ஆராய்ந்தார்கள். எஸ்.பி.ஐக் கூப்பிட்டுக் கதைக்கவும் முடிவெடுத்தனர். எம்மை வேறு இடத்திற்கு மாற்றும்படி கேட்கவும், அது வரை செல்களிலிருந்து திறந்துவிட்டு கொரிடோரில் ஒன்றாக இருக்க விடும்படியும் அவரிடம் கேட்பதாகத் தீர்மானித்தனர். இரவு சிங்களச் செய்தி எமக்குக் கேட்கும்படி போட்டு விட்டார்கள். அதில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் 35 பேர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

26ம் திகதி காலை எஸ்.பி.யைப் பார்க்க டக்ளஸ் தேவானந்தா, பரந்தன் ராஜன், பனாகொடை மகேஸ்வரன் ஆகியோரை எமது பிரதிநிதிகளாக அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டது.

மத்தியானம் 3 மணி போல் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். திரும்பி வந்தபோது நீதிபதி ஒருவர் விசாரணை மேற்கொண்டதாகவும் தாம் நடந்தவற்றைத் தெரிவித்ததாகவும் சொன்னார்கள். அவர்கள் B-3 இலும் D-3 இலும் இருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்பட 35 பேரும் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தினார்கள்.

இரவு 1 மணி போல் ஒரு அதிகாரி எம்மை எழுப்பி இடம் மாற வரும்படி கூறினார். நாமும் வேறு சிறைக்குத்தான் கொண்டு செல்லப் போவதாக நினைத்தோம். ஆனால் அதே சிறைக்குள் சற்றுத் தள்ளியுள்ள வார்டுக்கே எம்மை மாற்றினார்கள்.


Y.O. வார்டில் கீழே செல்களும் மேலே ஹோலும் உண்டு. ஹோலில் ஃபாதர் சிங்கராஜா, நித்தியானந்தன், கோவை மகேசன், டொக்டர் ராஜசுந்தரம், ஜெய குலராஜா, ஜெயதிலகராஜா, சின்ன ராஜா ஃபாதர், டொக்டர் தர்மலிங்கம், டேவிட் ஐயா ஆகியோர் இருந்தனர். கீழேயுள்ள செல்கள் போதாமையால் ஒவ்வொன்றுக்குள்ளும் 3,4 பேராக நாம் பூட்டப்பட்டோம். எனது செல்லில் நான், பாஸ்கரன், துரைராஜா ஆகி யோர் இருந்தோம்.

27ம் திகதி எம்மைக் கொரிடோருக்குள் திறந்துவிடும்படி கேட்டோம். அனுமதி தரவில்லை. நாம் எச்சரிக்கையாக மத்தியான உணவுக்கு வந்த குழம்பு, சொதி ஆகியவற்றை வாளிகளில் சேர்த்து வைத்தோம். நாம் பயந்தது போல் சற்று நேரத்தில் முந்திய ஓசைகளுடன் பலர் தடபுட என நுழைந்தார்கள். நான் சிறைக் கம்பியில் கன்னம் வைத்து எட்டிப் பார்த்தபோது எனக்கு அக் கூட்டத்தில் முதலில் தெரிந்தவன் சேபால ஏக்கநாயக்கா, இத்தாலி விமானத்தைக் கடத்தியவன்.

அவனுடன் முன்னால் வந்த இன்னொருவன் கையில் சாவிக் கோர்வை இருந்தது. Y.O. செல்களுக்கு பரேட்டில் இருந்ததைப் போல் மாஸ்டர் லொக் இருக்கவில்லை. பட்லொக்தான்.

வந்தவர்கள் எமது கூண்டுகளின் பட்லொக்கைத் திறக்க முனைந்தார்கள். அவர்களின் கையில் காட்டுக் கத்தி, பொல்லு, சோறு கிளறும் பெரிய அகப்பை, உளி, கம்பி, கோடரி போன்ற ஆயுதங்கள் இருந்தன.

எனது செல்லில் இருந்த துரைராஜா பதற்றத்தில், சேர்த்து வைத்திருந்த குழம்பு முழுவதையும் ஒரேயடியாக அவர்கள் மீது ஊற்றிவிட்டான். அதனால் அவர்கள் பூட்டை உடைக்காமல் நீண்ட நேரம் தடுக்க முடியவில்லை.


தங்கதுரை

பூட்டை அடித்து உடைத்தார்கள். நாம் பெட்ஷீட்டுக்களை கம்பியில் சுற்றி கதவு திறக்காமல் இழுத்துப் பிடித்தோம். அதுவும் வெட்டுப்பட்டு அறுந்துவிட்டது. கையால் கம்பிகளைப் பிடித்தோம். கைகளில் அடி, வெட்டு விழுந்தது. எம்மால் முடியாது போக.... கதவு திறந்துவிட்டது.


உள்ளே வந்த வேகத்தில் பாஸ்கரனையும், துரைராஜாவையும் வெட்டிக் கொன்றுவிட்டார்கள். அவர்கள் செத்து விழுவதைக் கண்டேன். நான் என் முன்னால் தெரிந்த இருவரையும் தாக்கினேன்.

அப்போது ஒருவன் கோடரியால் கொத்தினான். அதை ஒரு கையால் தடுத்தேன். தடுத்தபோதும் கோடரியின் நுனி என் தலையில் வெட்டிவிட்டது. அதைத் தாங்கிக் கொண்டு முன்னால் நின்ற ஒருவனை ஒற்றைக் கையால் மடக்கிப் பிடித்து என் உடம்புக்கு குறுக்கே மறைத்தபடி அறையின் மூலையோடு சாய்ந்தேன். அதனால் நேராக என்னைத் தாக்குவதற்கு அவர்களுக்கு வசதி குறைவாக இருந்தது. மற்றக் கையாலும் காலாலும் நெருங்கி வந்தவர்களைத் தாக்கினேன். காலால் எட்டி உதைத்தபோது பலத்த அடியொன்று என் காலில் விழுந்தது. காலை நிலத்தில் ஊன்ற முடியவில்லை. அடுத்த அடி தலையில் விழுந்தது. பிடித்திருந்தவனைக் கைவிட்டுவிட்டுக் கீழே விழுந்தேன்.

விழுந்தவுடன் சடசடவென தலையிலும் உடம்பிலும் பலமான அடிகள் விழுந்தன. என் தாடை கழன்றதும் நான் எதிர்ப்புக் காட்டாமல் செத்தவன் போல் கிடந்தேன். ஆனால் திடீரென அடிகள் நின்றன. தாக்கிய யாவரும் கலைந்து ஓடுவது தெரிந்தது. ஓடியவர்களுக்குப் பின்னால் பார்த்தால் கண்ணீர்ப் புகை. முகமூடியணிந்தபடி இராணுவத்தினர் தெரிந்தனர். நான் மயங்கக் கூடாதென்று பிடிவாதமாய் நினைத்துக்கொண்டேன்.

அப்போது சில தமிழ்க் குரல்கள் கேட்டன. அவர்களின் நடமாட்டமும் தெரிந்தது.

"நான் சாகேல்ல என்னைக் காப்பாத்துங்கோ" எனக் குரல் கொடுத்தேன். அது கேட்டு டக்ளஸ் தேவானந்தா என்னிடம் வந்தார். அவரின் பின்னால் மாணிக்கதாசன், அழகிரி, சுப்பிரமணியம், ஃபாருக் ஆகியோரும் வந்தனர். அவர்கள் என்னைத் தூக்கி வெளியே எடுத்து ஸ்டெச்சர் ஒன்றில் படுக்க வைத்தனர்.


மாணிக்கதாசன்

அதன் பின் வேறு சிலர் என்னை எடுத்துக்கொண்டு போய் விசிட்டர்ஸ் பார்க்கும் இடத்தில் கிடத்தினர். போகும் போது சிறைவாசலில் கொல்லப்பட்டவர்களின் உடல்களைப் பார்த்தேன். டொக்டர் ராஜசுந்தரம் இறந்து கிடந்தார். மரியாம்பிள்ளை என்பவருடைய தலை சப்பையாகிக் கிடந்தது.

என்னைக் கிடத்திய இடத்தில் தேவகுமாரையும் நினைவில்லாத நிலையில் கிடத்தியிருந்தார்கள். தொடர்ந்து எம் அருகே இறந்தவர்களின் உடல்களைக் கொண்டு வந்து போட்டார்கள்.

அங்கு வந்த எஸ்.பி.யிடம் நான் "இரத்தம் போகிறது என்னைக் கொண்டு போங்கோ" என்றேன். "உன்னால் நடக்க முடியுமா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார். நான் ஏதோ தைரியத்தில் "ஓம்" என்றேன்.


உடல்களைக் கொணர்ந்து போடும் வேலையில் அலுவலக வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சில கைதிகள் ஈடுபட்டிருந்தனர். நான் கதைப்பதைக் கண்டதும் என்னை அருகிலிருந்த அறையொன்றில் கொண்டு போய் வைத்துவிட்டு எனது சத்தத்தை அடித்து அடக்குவோமா எனப் பேசிக் கொண்டார்கள். எனக்கு சிங்களம் விளங்கும். உடனே நான் "சேர் சேர்" என்று சத்தம் போட இராணுவ அதிகாரி ஒருவர் வந்தார். அவரிடம் "என்னை இங்கே கொன்றுவிடுவார்கள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ" என்று மன்றாடினேன்.

என்னையும் தேவகுமாரையும் ட்ரக் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். தேவகுமார் மயங்கிக் கிடந்தார்.

ஆஸ்பத்திரியில் டொக்டர் எனக்கு எக்ஸ்ரே எடுக்கச் சொன்னார். கலவர வேளையாகையால் அங்கு வேலை செய்ய எவரும் இருக்கவில்லை. நான் அப்படியே போடப்பட்டுக் கிடந்தேன்.

"கொட்டியா வந்திருக்குது" என்று சொல்லி என்னைச் சனங்கள் வந்து பார்த்தார்கள். சிலர் என் முகத்தில் துப்பினார்கள்.

ஒரு நேர்ஸ் அருகே வந்தா. நான் அவளின் கையைப் பிடித்து "நீ எனக்குத் தங்கச்சி போல, எனக்கு உயிர்ப் பிச்சை தா" என்று சிங்களத்தில் மன்றாடினேன். எனக்கு ஓரளவு சிங்களம் பேச வரும்.


டக்ளஸ் தேவானந்தா

அந்த நேர்ஸ் சேலைன் எடுத்து வந்தா. அதைக் கொழுவும் ஸ்ராண்ட் இருக்கவில்லை. "சேலைனைக் கையில் பிடித்து வைத்திருப்பியா" என்று கேட்டா. ஓமென்றேன். ஒற்றைக் கையால் நான் சேலைன் போத்தலை உயர்த்திப் பிடித்தபடியிருக்க எனக்கு சேலைன் ஏற்றிவிட்டா.

அப்படியே இருக்க இன்னொரு நேர்ஸ் வந்து என்னிடமிருந்த சேலைனைப் பிடுங்கினாள். அங்கு வந்த முன்னைய நேர்ஸ் அவளை ஏசிவிட்டு மீண்டும் ஏற்றிவிட்டா. பின்னர் பெண்களின் பிரசவ வார்ட் ஒன்றுக்குகொண்டு போனார்கள். அங்கு ஒரு பெண் டொக்டர் தையல் போட்டார். அதன் பின் ஆண் வார்ட்டுக்கு மாற்றினார்கள். அங்கு தேவகுமாரையும் மயக்கமாகக் கிடத்தியிருந்தார்கள். அவரின் வாயால் ஏதோ ஒரு சத்தம் வந்துகொண்டிருந்தது. அப்போதும் எம்மை ஒரு காலில் சங்கிலி போட்டுக் கட்டில் காலுடன் கட்டியிருந்தார்கள்.

அங்கு புலி பார்க்க சனம் மொய்க்கத் தொடங்கிவிட்டார்கள். மறு நாள் வாக்குமூலம் எடுத்தார்கள். அதன் பின் மட்டக்களப்புச் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். இனி உயிராபத்து இல்லை என நினைத்தேன் மயங்கிக் கிடந்த தேவகுமார் இறந்துவிட்டதாகப் பின்னர் அறிந்தேன்.

குறிப்பு:- **புளொட் இயக்கத்தின் இராணுவத் தளபதியான இருந்த மாணிக்கதாசன் புலிகளால் கொல்லப்பட்டுவிட்டார். ஏனையவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இன்றும் வெலிக்கடை வேள்வியில் அநுபவப்பட்டு இன்னும் இலங்கையில் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வரும் ஒரேயொருவர் ஈபிடிபி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆவார்.**

**நன்றி: அமுது மற்றும்**
**கனடா வாழ் புலம்பெயர்ந்த**
**இலங்கைத் தமிழ் நெஞ்சங்கள்**


குட்டிமணி ஜெகன்

**குட்டிமணி, தங்கத்துரை, பிரபாகரன் போன்றோர் ஏற்கனவே ஒன்றாக இணைந்து செயற்பட்டவர்கள். குரும்பசிட்டி வன்னியசிங்கம் நகைக்கடை கொள்ளை, நீர்வேலி வங்கிக் கொள்ளை போன்ற நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்டவர்கள். பின்பு அவர்களுக்கிடையில் முரண்பாடு வெடித்து அவர்கள் ரெலோ என்ற பெயரில் தனித்து இயங்கியவர்கள். 1981 ஏப்ரல் 5 ஆம் திகதி பருத்தித்துறை மணல்காடு கடற்கரையில் வைத்து வள்ளம் மூலம் இந்தியா செல்ல முயன்றபோது யாரோ கொடுத்த தகவலின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்டனர்.**

**தமது அரசியல் எதிரிகள்தான் தகவல் கொடுத்தார்கள் என்று ரெலோ இயக்கத்தவர்கள் அப்போது சொல்லித் திரிந்தனர். கைதுசெய்யப்பட்டபோது குட்டிமணி தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்ய முயற்சித்திருந்தார். கைது செய்யப்பட்ட பின்னர் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகிய மூவருக்கும் நீதிமன்றில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.**

**தீர்ப்பு வழங்கிய அன்று குட்டிமணி தனது நீதிமன்ற உரையில் உருக்கமான வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருந்தார்.**

**"எனது கண்களை பார்வையற்ற தமிழ்மகன் ஒருவருக்குக் கொடுங்கள். மலரப்போகும் தமிழீழத்தை அந்தக் கண்கள் மூலம் நான் காண்பேன்!"**

**குட்டிமணியின் அந்த வாக்குமூலம் தாக்குதலில் ஈடுபட்டிருந்த கிரிமினல் கைதிகளுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே தான் குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்துத் தமது வெறியாட்டத்தை அங்கு அரங்கேற்றினர்.**

## 25 ஜீலை – 1983ம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்டவர்கள்

**1ம் நாள் (35 பேர்)**

1. நடராசா தங்கவேல் (தங்கத்துரை)
2. செல்வராஜா யோகச்சந்திரன் (குட்டிமணி)
3. கணேஷானந்தன் ஜெகநாதன் (ஜெகன்)
4. செல்லத்துரை சிசுப்பிரமணியம் (தேவன்)
5. நவரத்தினம் சிவபாதம் (சிவபாதம் மாஸ்டர்)
6. வைத்திலிங்கம் நடேசுதாசன்
7. செல்லத்துரை ஜெயரத்தினம்
8. சிவநாயகம் அன்பழகன் (அன்ரன்)
9. அரியபுத்திரன் (ராசன்)
10. காசிப்பிள்ளை சுரேஸ்குமார் (சுரேஸ் மாஸ்டர்)
11. சின்னத்துரை அருந்தவராசா
12. தனபாலசிங்கம் தேவகுமார் (தேவன், அரபாத்)
13. மயில்வாகனம் சின்னையா
14. சித்திரவேல் சிவானந்தராசா
15. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
16. தம்பு கந்தையா
17. சின்னப்பு உதயசீலன்
18. கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன்
19. கிருஷ்ணபிள்ளை நாகராஜா
20. இராமலிங்கம் பாலச்சந்திரன்
21. அம்பலம் சுதாகரன்
22. கணபதி கணேசலிங்கம்
23. பசுபதி மகேந்திரன்
24. காசிநாதன் தில்லைநாதன் (கண்ணன்,)
25. செல்லப்பா குலராஜசேகரம் (குலம்)
26. குமாரசுவாமி உதயகுமார் (மோகன்)
27. சுப்பிரமணியம் சிவகுமார் (ராஜன்)
28. கோதண்டபிள்ளை தவராஜலிங்கம்
29. கருப்பையா கிருஷ்ணகுமார் (கொழும்பான்)
30. ராஜயோகநாதன் (யோகன்)
31. ஞானசேகரம் அமிர்தலிங்கம் (அவுடா)
32. அந்தோனிப்பிள்ளை உதயகுமார்
33. அழகராசா ராஜன்
34. வேலுப்பிள்ளை சந்திரகுமார்
35. சிற்றம்பலம் சாந்தகுமார் (சாந்தன்)

**இரண்டாவது நாள் கொல்லப்பட்டவர்கள். (27–ஆடி–1983)**

36. தெய்வநாயகம் பாஸ்கரன்
37. பொன்னம்பலம் தேவகுமார்
38. பொன்னையா துரைராசா
39. முத்துக்குமார் ஸ்ரீக்குமார்
40. அமிர்தநாயகம் பிலிப் குமாரகுலசிங்கம்
41. செல்லச்சாமி குமார்
42. கந்தசாமி சர்வேஸ்வரன்
43. அரியம்பிள்ளை மரியாம்பிள்ளை
44. சிவபாலன் நீதிராஜா
45. ஞானமுத்து நவரத்தினசிங்கம்
46 கந்தையா ராஜேந்திரம்
47. டாக்டர் ராஜசுந்தரம்
48. சோமசுந்தரம் மனோரஞ்சன்
49. ஆறுமுகம் செயோன்
50. தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன்
51. சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்
52. செல்லப்பா இராஜரட்ணம்
53. குமாரசாமி கணேசலிங்கம்

***ஆகியோர் 27 ஜூலை 1983 சிறையில் கொல்லப் பட்டவர்கள் (18 போராளிகள் கொல்லப்பட்டனர்)***



அன்பென்று கொட்டு முரசே! அதில்
ஆக்கமுண்டா மென்று கொட்டு
துன்பங்கள் யாவுமே போகும் வெறுஞ்
சூதப் பிரிவுகள் போனால்
சுப்பிரமணிய பாரதியார்-



# புத்திசாலி விவசாயி!

### பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் சங்கமபுரி என்ற நாட்டை வம்சவர்தன் என்பவன் ஆண்டு வந்தான். இவனுக்கு மாறுவேடம் பூண்டு மக்களைச் சந்திப்பதில் கொள்ளை பிரியம்.

ஒரு நாள் வயல்வெளிப் பக்கம் நடந்து சென்றான். அங்கு ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தான். அவனைக் கண்ட அரசன், "உழைப்பாளியே! இத்தனை வெயில் கொடுமையிலும் சளைக்காமல் உழைக்கிறாயே, இதில் சம்பாதிக்கும் பணத்தை எப்படிச் செலவு செய்கிறாய்?" என்றான்.

"எனக்கு வரும் வருமானத்தில் ஒரு பங்கை அரசருக்கு வரியாகக் கொடுக்கிறேன். இன்னொரு பங்கை நான் பட்ட கடனுக்கு அடைக்கிறேன். இன்னொரு பங்கைக் கடனாகக் கொடுக்கிறேன். மற்றொன்றை வீசி எறிகிறேன். கடைசிப் பங்கை எனக்காகச் செலவழிக்கிறேன்," என்றான்.

அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை.



"என்ன புதிராகவே பேசுகிறாய்" எனக்குப் புரியவில்லையே! என்றார்.

"ஐயா! என்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு செலவு செய்கிறேன். இது நான் பட்ட கடன். அடுத்து என்னை நாளைக்கு வைத்துக் காப்பாற்றப் போகிற மகளுக்காகச் செலவழிக்கிறேன். இதுதான் கடன் கொடுக்கிறேன் என்று நான் சொன்னது. அடுத்து வீசி எறிகிறேன் என்றது, வயலில் பயிர்களை விதைப்பதற்காக வாங்க வேண்டிய பொருட்களுக்காக செலவழிப்பதைச் சொன்னேன். மற்ற இரண்டும் உங்களுக்கு புரிந்திருக்குமே ஐயா," என்றான்.

விவிசாயியின் அறிவான பதிலைக் கண்டு மகிழ்ந்து போன அரசன், தன் வேடத்தைக் கலைத்தான். "இந்தப் பரிசைப் பெற்றுக் கொள். என்னிடம் சொன்ன விளக்கத்தை வேறு யாரிடமும் நீ சொல்லக் கூடாது" என்று சொல்லி அனுப்பினான்.

மறுநாள் அரசவைக்கு வந்த மன்னன், அறிஞர் பெருமக்களைப் பார்த்து இந்தப் பதிலைச் சொல்லி விளக்கம் தருபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு தருவதாகக் கூறினான்.

ஒருவருக்குமே இதற்கான பதில் தெரியவில்லை. தந்திரசாலியான அமைச்சர், அரசன் மாறுவேடத்தில் நகர்வலம் வந்த இடத்தைக் கண்டு ஒருவழியாக யூகித்து விவசாயியைக் கண்டுபிடித்தான். அவனுக்கு நிறைய பொற்காசுகள் பரிசாகக் கொடுத்து அரசனிடம் சொன்ன விளக்கத்தைத் தன்னிடம் கூறும்படி சொன்னான்.

பொற்காசுகளைக் கண்ட விவசாயி ஒரு நிமிடம் யோசித்தான். மறுநிமிடம் எப்படியும் சமாளித்துக்கொள்ளலாம் என்ற நினைப்பில் பதிலைச் சொல்லிவிட்டான். மந்திரி நேராக மன்னனிடம் சென்று பதிலைச் சொன்னான்.

ஆத்திரமடைந்த மன்னன், "அந்த மதிகெட்ட விவசாயியை இப்போதே கொண்டு வாருங்கள்." என ஆணையிட்டான்.

தன் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட விவசாயியைப் பார்த்து, "உனக்கு என்ன தைரியம் இருந்தால் என்னைத் தவிர யாரிடமும் சொல்லக் கூடாது என்று சொன்ன புதிர்களை சொல்லியிருப்பாய். என் கட்டளையை மீறிய உனக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்றான் கோபமாக.

விவிசாயி சிறிதும் கலங்காமல், "அரசே! இப்போதும் நான் தங்களிடம் தான் சொன்னேன். இதோ பாருங்கள் அரசே! அமைச்சர் கொடுத்த பொற்காசுகள். இதில் இரண்டு பக்கமும் தங்களது திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதைக் கொடுத்து இரகசியத்தை கேட்ட உங்களது பிரதிநிதியிடம்தான் இரகசியத்தைச் சொன்னேன். அதாவது தங்களது திருவுருவத்திடம்தான் சொன்னேன். நான் எப்போதும் தங்கள் வாக்கை மீறவில்லை," என்றான்.

விவசாயியின் அறிவுக் கூர்மையை எண்ணிப் பிரமித்துப்போன மன்னன், அவனைப் பாராட்டி மேலும் பரிசுகள் வழங்கினான். தன் அறிவினால் தனக்கு கிடைத்த பரிசு பொருட்களைக் கொண்டு நிலங்களை வாங்கிப் பணக்காரனானான் விவசாயி. பொன், வெள்ளியைப் பார்க்கிலும் ஞானமே சிறந்தது என்பது புரியுதா குட்டீஸ்!

# விடுகதைகளும் விடைகளும்

1. அழகான வெள்ளை மாளிகை ஆனால் உள்ளே செல்லத்தான் வாசல் இல்லை அது என்ன?

2. தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர் பச்சையாக இருக்கிறது. பாக்கு வெற்றிலை போடாமலே வாய் சிவப்பாக இருக்கிறது அது என்ன?

3. கால் உண்டு நடக்க மாட்டேன் முதுகு உண்டு வளைய மாட்டேன். கை உண்டு உண்ண மாட்டேன் நான் யார்?

4. இலையுண்டு கிளையில்லை பூ உண்டு மணமில்லை கன்று உண்டு பசி இல்லை அது என்ன?

5. குளிக்காவிட்டால் சிவப்பு குளித்துவிட்டால் கறுப்பு அவன் யார்?

6. உணவு உண்ணாமல் பருப்பான் நோய் இல்லாமல் இளைப்பான் அவன் யார்?

7. செங்கல் கட்டிடம் அதற்குள் பொன் கட்டிடம் அதற்குள் வெள்ளி வெள்ளிக்குள் குளம் அது என்ன?

8. அண்டா பெரிய அண்டா பாதி அண்டாவில் தண்ணீர் இருந்தும் அடைப்பு இல்லை அண்டாவுக்கு அது என்ன?

9. பாலாற்றில் மேயுது கறுப்பு மீன் அது என்ன?

10. வைரத்தோடுகள் வயலில் கிடந்தன. சந்திரன் பார்த்தான். எடுக்காமல் போய்விட்டான். சூரியன் பார்த்தான் தூக்கிச் சென்றுவிட்டான். அது என்ன?

### விடைகள்

1. முட்டை 2. கிளி
3. நாற்காலி 4. வாழை மரம்
5. நெருப்பு 6. சந்திரன்
7. தேங்காய் 8. கிணறு
9. கண் விழி 10. பனித்துளி

# அதிசய உலகம்!

### பழக்கங்கள் பலவிதம்


கங்காருகளும் சரி, கலைமான்களும் சரி தாங்கள் பெண் விலங்குகளுடன் நெருக்கமாகப் பழகும் காலத்தில் மனிதர்கள் யாரையும் அருகே வரவிடாது. தங்களுக்கு இடைஞ்சலாக மனிதர்கள் இருப்பார்கள் என்று நினைத்து மனிதர்களை, குறிப்பாக ஆண்களைக் கண்டாலே விரட்டியடிக்க முயற்சி செய்யும்.



ஹெரான் இன பறவைகளில் பெண் பறவை, ஆண் பறவையைத் தன் அருகில் நெருங்கவிடாது விரட்டியடித்துக்கொண்டே இருக்கும். பல முறை இந்த துரத்தல் நடந்த பின்புதான் பெண் பறவை ஆண் பறவையுடன் நட்பாகப் பழக ஆரம்பிக்கும்.



நாரைகள் வடக்கு ஐரோப்பாவில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவிற்கு இடப்பெயர்ச்சி செய்கின்றன. கூட்டம் கூட்டமாக பல ஆயிரம் மைல்கள் இவை பறந்து சென்றாலும் கடைசி வரை தங்களது ஜோடிப் பறவையுடன் மட்டுமே வாழ்கின்றன.



# உங்கள் பொது அறிவு எப்படி?

| | |
|---|---|
| 1. முதன் முதலில் பூனையை செல்லப்பிராணியாக வளர்த்தவர் யார்? | எகிப்தியர் |
| 2. பாரமானியைக் கண்டுபிடித்தவர் யார்? | பாரி செல்லி |
| 3. பூமியிலிருந்து சூரியனின் தூரத்தை அளக்கப் பயன்படும் கருவி எது? | செக்ஸ்டன்ட் |
| 4. என்செபாலோகிராப் (Encephalograph) என்னும் கருவி எதற்குப் பயன்படுகிறது? | மூளையின் அசைவுகளைப் பரிசோதிக்க |
| 5. டிப்தீரியா என்னும் நோய் உடலின் எந்தப் பாகத்தைத் தாக்குகிறது? | தொண்டை |
| 6. உலக சாம்பியனுக்கான செஸ் போட்டியில் ஒரு ஆட்டத்திலும் விளையாடாமல் உலக செஸ் சம்பியன் பட்டத்தை வென்ற முதல் வீரர் யார்? | அனடோலி கார்போவ் |
| 7. பூமியைப் போல் சூரியன் எத்தனை மடங்கு பெரியது? | 109 மடங்கு |
| 8. அமெரிக்க பாராளுமன்றத்தின் பெயர் என்ன? | காங்கிரஸ் |
| 9. சிவப்பு இரத்த அணுக்களின் ஆயுட்காலம் எவ்வளவு? | 120 நாட்கள் |
| 10. தனது ஆயுட்காலத்தில் ஒரே ஒரு தடவை மட்டும் பூப்பூத்து காய்க்கும் தாவரம் எது? | வாழை. |

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு, பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.08.2003.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 506
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 503

பரிசுக்குரியவர்:
என்.எம்.நிம்பான்,
இல - 53, அன்னல் வீதி, கிண்ணியா - 03.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ச.சிவமைந்தன், 16, சுதுமலை வடக்கு, மானிப்பாய். | ஏ.சியானா, அல் அக்ஸா வீதி, கிண்ணியா - 02. |
| செல்வி.அவிநயா வாலசிங்கம், 20/08, பெபிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு. | ஐ.சசிகலாதேவி, 13, மிஹிந்துகம, மஹவல, இரத்தினபுரி. |
| என்.யோகேஸ்வரன், 218, கனுப்பெலல்ல, பதுளை. | வீ.துஷ்யந்தி, 70/2 புதிய செட்டித் தெரு, கொழும்பு - 13. |
| உ.சசிசுதாஜினி, பு. பிரான்சிஸ் சவேரியார் ம.வி., திருகோணமலை. | ச.கௌரிபாலன், 16, சுதுமலை வடக்கு, மானிப்பாய். |
| எஸ்.சுவிசாலினி, இந்து தேசிய கல்லூரி, புஸ்சல்லாவ. | ஸ்ரீஜீவா சொரூபிகா, யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை. |

### இந்த வாரப் புதிர்





இந்த செவ்வகத்தை இரண்டு நேர்கோடுகளால் நான்கு பாகங்களாகப் பிரிக்க வேண்டும். பிரித்த ஒவ்வொரு பாகத்திற்குள்ளும் ஒரு வட்டம், ஒரு சதுரம், ஒரு முக்கோணம் இருக்க வேண்டும். உங்கள் உதவிக்கு, செவ்வகத்தைச் சுற்றி 16 எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு எண்களை இரண்டு கோடுகளால் இணைத்தால் போதும். செவ்வகம் நான்கு பாகங்களாகப் பிரியும்.

### அறிவுத் தேடல்




சென்ற வாரப் புதிரின் விடை

# தகவல் பெட்டி




## அசத்தல் விற்பனை

பைபிளுக்கும் குர்- ஆனுக்கும் பதிப்புரிமை இல்லாதது போல கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்துக்கும் பதிப்புரிமை இல்லை. உலகத்திலேயே எல்லாக் காலங்களிலும் அதிகம் விற்பனையாவதும் இந்த கின்னஸ் உலக சாதனைப் பதிவுகள் புத்தகம்தான். இப் புத்தகம் முதன் முதலில் ஒகரோபர் மாதம் 1955ம் ஆண்டு வெளியிடப்பட்டது. 2001ம் ஆண்டில் மட்டும் 37 மொழிகளில் 91,941,000 பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. ஒன்றின் விலை 27.95 டாலர்கள் மட்டும்தான்.



## சாதாரணம்


சீனாவில் மக்கள் விடுதலை இராணுவம் மே 2000ம் ஆண்டளவில் 2.2 மில்லியன் துருப்புகளைக் கொண்டதாக இருந்தது. இப்பொழுது சீனா தன் ஆட்பலத்தைக் குறைத்துக்கொண்டு வந்தாலும் தேவைப்பட்டால் தன் இராணுவ பலத்தையும் ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையையும் அதிகரிக்கக் கூடிய நிலையில் உள்ளது. அதற்காக வயதுக்கு வராதவர்களை எல்லாம் வளைத்துப் போடுவதில்லை. சீனர்கள் உலகத்திலேயே அதிக சனத்தொகையைக் கொண்டவர்கள் என்பதால் அவர்களுக்கு இது சாதாரண விடயம்தான்.



## குற்றவாளிகள் ஜாக்கிரதை

பொலிஸ் சேவையில் நாய்கள் சிறந்த சேவையை ஆற்றி உள்ளன. இந்தத் துறையில் ட்ரெப் எனப்படும் இந்த நாய் 1979ம் ஆண்டு வரையில் 100 கைதுகளையும் 64 மில்லியன் டொலர் (28.6 மில்லியன் பவுன்) பெறுமதியான போதைப் பொருட்களையும் கண்டுபிடித்துள்ளது. பொலிஸ் நாய்களைப் பொறுத்தவரை இந்த நாயின் சேவை சிறந்த பதிவாகக் கணிக்கப்படுகிறது. சபாஷ்! குற்றவாளிகள் ஜாக்கிரதை.....

## சாதனை



அமெரிக்காவைச் சேர்ந்த Dan runte என்பவர் 14.12.1999ம் ஆண்டு பிக் பூட் என்ற இந்த வாகனத்தில் 7.3 மீட்டர் (24 அடி) அசுரப் பாய்ச்சல் பாய்ந்துள்ளார். இந்த அசுரப் பாய்ச்சலின்போது வாகனத்தின் முன் அச்சு உடைந்து முன் சக்கரத்தில் ஒன்று வேறாக மற்றையது கீழ்ப் பக்கமாகக் குத்திக் கொண்டது. ஆனாலும் வாகனத்தைச் செலுத்தியவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. இவ்வாறான ஆபத்தான பாய்சல்களில் இது வரை நான்கு தடவைகள் உலக சாதனை செய்த இவருக்கு உயிர்ப் பயம் கொஞ்சமும் கிடையாதாம். பார்ப்பவர்களுக்குத்தான் வியர்த்துப்போகிறது.

# இன்னும் காலம் கடத்தும் கமலின் 'சண்டியர்'

கமலின் பொல்லாத காலம் இன்னும் முடியவில்லை போலிருக்கிறது.

ஜெயலலிதாவை சந்தித்ததன் மூலம் தனது 'சண்டியர்' பட பிரச்சினையை ஓரளவு தீர்த்துக்கொண்டவருக்கு, இப்போது படப்பிடிப்பு இரண்டு மாதங்கள் தள்ளிப்போனதால் கால்ஷீட் பிரச்சினை எழுந்துள்ளது.

பட நாயகி அபிராமிக்கு இதைவிட்டால் வேறு படமில்லை. ஆனால் நாசர் படத்தின் மற்றொரு வில்லனான பசுபதி ஆகியோர் பல்வேறு படங்களில் கமிட் ஆகியுள்ளனர்.

இதை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்த கமல், படப்பிடிப்பை தேனி, கம்பம் பகுதிகளில் நடத்தும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு போகாமல் சென்னையிலேயே செட் போட ஆரம்பித்துவிட்டார்.

சென்னை என்றால், எப்போது கிடைக்கிறார்களோ அப்போது ஷூட் பண்ணிக்கொள்ளும் சௌகரியம் இருக்கிறது என்பதுதான் கமலின் இந்த முடிவுக்குக் காரணம்.

# சார்மிக்கும் இயக்குநர் கண்மணிக்கும் கசமுசா

நடிகை சார்மிக்கும் 'ஆஹா எத்தனை அழகு' படத்தின் இயக்குநர் கண்மணிக்கும் காதல் கசமுசா என்ற கிசுகிசு இன்னும் ஓய்ந்தபாடில்லை.

ஷூட்டிங் ஸ்பாட்களில் இவர்கள் அடித்த லூட்டி, படம் முடிந்த பிறகும் இன்னும் தொடர்கிறதாம்.

'அடுத்த படத்துக்குக் கதை டிஸ்கஸ் செய்கிறோம்' என்ற பெயரில் ஹோட்டல் ரூம் போட்டு கும்மாளம் அடிக்கும் இந்த ஜோடி, 'ஆஹா எத்தனை அழகு' ரிலீஸான வுடன் திருமணம் செய்துகொள்ளப் போவதாகவும் ஒரு பேச்சு அடிபடுகிறது.

டைரக்டர் கண்மணி, தேவயானியை மணந்துகொண்ட ராஜகுமாரனிடம் இதற்கான டிரெயினிங் எடுத்தவர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.



மாதவன் — ஜோதிகா
படம்: பிரியமான தோழி

# சிம்ரனின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா...?

கோவில்பட்டி வீரலட்சுமி ரிலீஸானால் தனக்குத் தேசிய விருது கிடைக்கும் என்று கனவு கண்டு கொண்டிருந்த சிம்ரன், இப்போது சரியான மூட் அவுட்டில் இருக்கிறார். படம் நீளமாக இருக்கிறது என்று சொல்லி, சிம்ரன் சிறப்பாக நடித்திருந்த பல காட்சிகளை வெட்டி எறிந்துவிட்டாராம், டைரக்டர் ராஜேஷ்வர். இது போக சென்சார் வெட்டி எறிந்த காட்சிகள் வேறு.

"சென்சார் வெட்டியதையாவது பொறுத்துக்கொள்வேன். ஆனால் இந்த ராஜேஷ்வர், நான் கடைசி கட்டத்தில் சம்பள பாக்கிக்காக சண்டை போட்டதை மனதில் வைத்துக்கொண்டு நான் சிறப்பாக நடித்திருந்த பல காட்சிகளை வெட்டிவிட்டார். அதனால்தான் படம் கமர்சியலாகவும் படுத்துவிட்டது" என்று புலம்புகிறார் சிம்ரன்.

கமர்சியலா ஓடலைன்னாதான் அவார்டு கிடைக்கும். இது கூடவா உங்களுக்குத் தெரியாது சிம்ரன்?



அர்ஜுன் — சிம்ரன்
படம்: ஒற்றன்

# மினி சினி

✪ 'தென்னவன்' படப் பிடிப்பின் இடைவேளைகளில் பட நாயகி கிரணுக்கு தமிழ் எழுதப் படிக்கக் கற்றுத் தருகிறாராம் விஜய்காந்த். இதை வேடிக்கை பார்க்க படப்பிடிப்புக் குழுவினர் யாருக்கும் அனுமதி இல்லையாம்.

✪ 'காதல் வைரஸ்' ஹீரோ ரிச்சர்ட்டுக்கு கைவசம் இருப்பது 'கிச்சாவோட காதல்' என்ற ஒரே ஒரு படம்தான். தனது அக்கா ஷாலினியோ, மாமா அஜித்தோ நல்ல படங்களுக்குச் சிபாரிசு செய்ய மாட்டார்களா என்று காத்துக் கிடக்கிறாராம்.

✪ ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டு இத்துடன் நான்காவது தடவையாகத் தள்ளிப் போயிருக்கிறதாம், பாரதிராஜாவின் 'ஈரநிலம்' ஏரியாவை வாங்க யாருமே முன்வராததுதான் இந்தத் தாமதத்துக்குக் காரணம்.

✪ ஜேடி–ஜெர்ரி இயக்கத்தில் அண்மையில் வெளிவந்துள்ள 'விசில்' I KNOW WHAT YOU DID LAST SUMMER என்கிற ஆங்கிலப் படத்தின் அப்பட்டமான காப்பி. இந்தப் படம் வெற்றி பெற்றால் 'விசில்' பார்ட் II வையும் எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

# 'வில்லன்' கூட்டணி தொடருமா? முடிவு அஜித் கையில்


சினி விசிட்

'பாறை' ரிலீஸுக்கு முன்பு சுமார் ஒரு கோடி ரூபாய் வரை சம்பளம் கேட்டுக்கொண்டிருந்தார் டைரக்டர் கே.எஸ். ரவிக்குமார்.

"நேத்து வந்த டைரக்டர்களெல்லாம் ஒரு கோடி, ரெண்டு கோடின்னு வாங்கும்போது, தயாரிப்பாளர்களுக்கு சிக்கனமா படம் எடுத்துத் தர்ற நான் வாங்கக் கூடாதா" என்பது ரவிக்குமாரின் ஸ்டேட்மெண்ட்.

இப்போது 'பாறை' ரிலீஸாகி படம் படு ஃபிளாப் என்று ஆனவுடன் பெரிய சம்பளமெல்லாம் கேட்க முடியாது. அட்லீஸ்ட் கைவசம் நல்ல கமிட்மென்டையாவது வாங்கி வைப்போம் என்ற எண்ணத்தில் அஜித்தை நோக்கி படையெடுக்க ஆரம்பித்திருக்கிறார்.

'வில்லன்' கூட்டணி தொடர அஜித் ஓ.கே. சொல்கிறாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



முகப்பில் விக்ரம் திரி

## அடுத்தடுத்து படப் பூஜைகள் பிரகாஷ்ராஜின் புதிய டெக்னிக்

'புன்னகைப்பூவே' படத்தின் இயக்குநர் சபா கைலாஷை வைத்து 'நாம்' என்ற பெயரில் ஒரு படத்துக்கு பூஜை போட்டார் பிரகாஷ் ராஜ். இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜே முக்கிய கேரக்டரில் நடிக்க மூன்று புதுமுகங்களும் அறிமுகமாகிறார்கள்.

இது போதாதென்று, ஆகஸ்ட் முதல் வாரத்தில் மேலும் இரண்டு புதிய படங்களுக்கு பூஜை போடப்போவதாக அறிவித்திருக்கிறார் பிரகாஷ்ராஜ்.

இதற்கு முன் ஏற்கனவே இரண்டு படங்களுக்குப் பூஜை போட்டு, அதை கிடப்பில் போட்டு வைத்திருக்கும் பிரகாஷ்ராஜ், மறுபடியும் மூன்று படங்களுக்கு பூஜைபோடும் மர்மம் என்ன என்று விசாரித்தபோதுதான் அவரது டெக்னிக் புரிந்தது.

சமீபகாலமாக தெலுங்குப் படங்களில் நடிக்கப் போயிருந்த பிரகாஷ்ராஜுக்கு தமிழில் சுத்தமாக வாய்ப்புகள் இல்லை. இப்போது அங்கே மார்க்கெட் போன நிலையில், தமிழில் நடிக்க ரெடி என்று அறிவிக்கவே இப்படி சொந்தப்பட பூஜைகள் போட்டிருக்கிறாராம்.

## மணிரத்னத்தின் கதை கேட்க தமிழில் ஆள் இல்லை

தேசிய அளவில் பெரிய பெயர் இருந்தாலும், அவரது கடைசிச் சில படங்கள் கமர்சியலாக வெற்றி பெறாததால் மணிரத்னத்துக்கு தமிழ் நடிகர்களிடம் பழைய மதிப்பு இல்லை. விக்ரமுக்கு அவர் கதை சொல்ல விரும்பியபோது, "அடடே ரெண்டு வருஷத்துக்கு கால்ஷீட் நெருக்கடியா இருக்கே" என்று நழுவிவிட்டார். ஸ்ரீகாந்த்தும் கூட மணிரத்னத்துக்கு இதே பதிலைச் சொன்னார்.


அடுத்த கட்டமாக சூர்யா, ஷாம் ஆகியோர் எப்படியோ ஒருங்கிணைந்து 'உயிரெழுத்து' என்ற படத்தைத் துவக்கும் முயற்சியிலிருந்த மணிரத்னத்துக்கு சோதனை மேல் சோதனை. சூர்யாவும், மாதவனும் ஆகஸ்ட் இறுதி வரை பிஸி.

சரி, இனியும் காத்திருந்து பயனில்லை என்று முடிவெடுத்து இந்தி நடிகர்களான அஜய்தேவ்கன், விவேக் ஓபராய், அபிஷேக் பச்சன் ஆகியோரை வைத்து இதே 'உயிரெழுத்து' இந்தியில் துவக்கிவிட்டார். படம்தான் இந்திப் படமே தவிர, படப்பிடிப்பு நடப்பது சென்னையில்தான்.

## தயாரிப்பாளருக்கும்-இயக்குநருக்கும் லடாய் தவிக்கிறது 'காக்க காக்க'

சூர்யா–ஜோதிகா நடித்துவரும் 'காக்க காக்க' படத்தை 75 நாட்களில் சுமார் 2 கோடி பட்ஜெட்டுக்குள் முடித்துத் தருவதாக ஒத்துக்கொண்ட கௌதம், படப்பிடிப்பை நூறு நாட்களுக்கு மேல் இழுத்து செலவை மூன்று கோடியாக்கிவிட்டாராம்.

இதனால் டைரக்டரின் சம்பளத்தை நிறுத்தி வைத்த தாணு, இப் படத்தின் மாற்றுமொழி உரிமை மொத்தத்தையும் தன் பெயருக்கு எழுதித்தர வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாராம். பல்வேறு முனைகளில் பஞ்சாயத்து நடந்து வருகிறது.


ஷெரீன் (படம்: விசில்)


சேரன் — கோபிகா படம்: ஆட்டோகிராஃப்

ஷா படம்: சாமி

## தேறாத கேஸ்

நடிக்கக் கற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ மற்ற சமாச்சாரங்களில் சீக்கிரம் தேர்ந்துவிடுகிறார்கள் நடிகைகள்.

'துள்ளுவதோ இளமை'க்குப் பிறகு ஒன்றிரண்டு படங்களே நடித்து முடித்திருக்கும் ஷெரீன் பெரிய வெற்றிப் படங்கள் எதுவும் கொடுக்காத நிலையில் அதற்குள் பத்து இலட்சம் சம்பளம் கேட்கிறார்.

"தெலுங்குல மூணு படம் புக் ஆகியிருக்கேன். கன்னடத்துல ரெண்டு படம் கமிட் ஆகியிருக்கேன். இந்தச் சம்பளத்துக்கு நடிக்கிறதா இருந்தா நான் அங்கேயே செட்டில் ஆகிக்கிறேன். ஆளை விடுங்க" என்கிறாராம் ஷெரீன்.

"ஆறு மணிக்கு மேல ஷூட்டிங் ஸ்பொட்டில தங்குறதில்லை. தினமும் பாய்ஃபிரண்ட்ஸ்களோட பார்ட்டிகளுக்குப் போறது. இதுல காட்டுற ஆர்வத்தை சினிமாவுல காட்டினா கொஞ்சக் காலமாவது தாக்குப் பிடிக்கலாம். போற போக்கைப் பார்த்தா இது தேறாத கேஸ்" என்கிறார் கமிட் பண்ணப் போய்க் கவலையோடு திரும்பிய ஒரு தயாரிப்பாளர்.

## நெளிவு சுழிவுகளை கையாளுகிறார் திரிஷா

'சாமி' படம் ஓடுவதற்கு முன்பு இராசியில்லாத நடிகையாக இருந்த திரிஷா இப்போது பிஸி நடிகையாகிவிட்டார்.

முன்னணி நடிகர்களுடன் சதா செல்ஃபோனில் சிணுங்குவது, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பார்ட்டிகள் தருவது, யார் எந்தப் பார்ட்டிக்கு அழைத்தாலும் செல்வது என்று அத்தனை டெக்னிக்குகளையும் கையாண்டு வரும் திரிஷாவின் கைவசம் இப்போது அரை டசின் படங்கள்.

அதிலும் லேட்டஸ்டாக தரணி இயக்கும் விஜய் படத்தில் கமிட் ஆனவுடன் தனது சம்பளத்தை எட்டு இலட்சத்திலிருந்து இருபத்தைந்து இலட்சங்களாக உயர்த்திவிட்டார் திரிஷா.

"விவரம் தெரியாத பொண்ணா இருந்துச்சி. இவ்வளவு சீக்கிரம் பிக்கப் ஆயிடுச்சே." என்று ஆச்சரியப் படுபவர்கள் சக நடிகைகள்தான்.

## விந்தியாவுக்குப் போட்டியாக ராதிகா சௌத்ரி

அத்தி பூத்தாற் போல் தமிழில் அவ்வப்போது தலை காட்டும் ராதிகா சௌத்ரி இடையில் கொஞ்சக் காலம் காணாமல் போயிருந்தார்.

தற்செயலாகச் சந்திக்க நேர்ந்து கேட்டவர்களிடமெல்லாம் "தெலுங்குல பிஸி, கன்னடத்தில பிஸி" என்ற வழக்கமான பதில் சொல்லுகிறார்.

இப்போது அந்த ரெண்டு பிஸியும் என்ன ஆச்சோ தெரியவில்லை, மீண்டும் தமிழ் சினிமாவில் வந்து குதித்திருக்கிறார் ராதிகா சௌத்ரி. வந்த கையோடு வாய்ப்புத் தேடி, தனக்குத் தெரிந்த நாலைந்து கம்பெனிகளை அப்ரோச் செய்தபோது "இனி உன்னை ஹீரோயினா வச்சி படம் எடுக்க முடியாது. ஒரு பாட்டுக்கு ஆடுறதுன்னா சொல்லு. விந்தியாவை ஓரங்கட்டிட்டு ஒனக்கு சான்ஸ் தரலாம்" என்று சொல்லிவைத்தாற் போல் அனைத்து இடங்களிலிருந்தும் ஒரே பதில் வந்திருந்தது.

சரி... என்ன செய்வது? கலைச் சேவை என்று வந்த பிறகு கதாநாயகி ஆனால் என்ன, கச்சை கட்டி ஆடினால் என்ன எல்லாம் ஒன்றுதான் என்ற முடிவுக்கு வந்து நாலைந்து படங்களில் கவர்ச்சி நடனத்துக்கு கமிட் ஆகிவிட்டார் ராதிகா சௌத்ரி...இரசிகர்களுக்கு குஷிதான்.

## நன்றிக்காக பெயரைக் கெடுக்கும் ஸ்ரீகாந்த்

இவ்வளவு காலமும் கால்ஷீட் சொதப்பாத நல்லபிள்ளை என்ற பேரெடுத்த ஸ்ரீகாந்த் இப்போது மற்ற சராசரி நடிகர்களின் பட்டியல்களில் சேர்ந்துவிட்டார்.

காரணம், நடுவில் திடீரென்று வந்த லிங்குசாமி படம். ஆகஸ்ட் மாதத்திலிருந்து இந்தப் படத்துக்கு கால்ஷீட் தந்திருக்கும் ஸ்ரீகாந்த் ஏற்கனவே ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் தன்னை அறிமுகப்படுத்திய நிறுவனமான ஆஸ்கார் பிலிம்ஸுக்குத் தந்திருந்தார். அதை அடுத்து காத்திருக்கும் 'கீதை' படம் தயாரித்த விஸ்வாஸ் பிக்சர்ஸ் நிறுவனத்துக்கும் விசுவாசம் காட்ட வேண்டிய கடமைப் பட்டவர். இந்த விஸ்வாஸ் தயாரிப்பாளர் வி.என்.சுந்தர் ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரனின் சகோதரர். இப்போது புரிகிறதா ஏன் ஸ்ரீகாந்த் சொதப்புறார் என்பது.




## பெண்மை வாழ்க

விதவைக்கு மறுவாழ்வு வேண்டும்
மலடிக்கு மகப் பேறு வேண்டும்
வாழா வெட்டிக்கு வாழ்க்கை
வேண்டும்.

முதிர் கன்னிகளுக்கு மண
மகன் வேண்டும்.

அதற்கு காணிக்கை என்ன
வேண்டும்

கேள் இறைவா என்னையே
தருகிறேன் சம்மதமா?

சி.யசிதரன், வவுனியா.

## நித்தமும் கனவுடன்...

கண்களில்
காலனை கொண்டு
பார்வைகளினால் பரிதவிக்கவிட்டு
புன்னகை மூலம்
புதைகுழி தோண்டும் பெண்களில்
நீ.....நீ மட்டும்
புரியாத புதிர்

படபடக்கும் உன் விழிகளும்
கோபம் கலந்து வரும் வார்த்தைகளும்"
கோபத்தால் சிவக்கும் கன்னமும்
தேய்ந்த நிலவின் பாதியை
நெறி செய்த உன் நெற்றியும்
கொஞ்சம் கொஞ்சமாய் என்னை
கொள்ளையிட்டுப் போகின்றன......

இரவு வருவதை எதிர்பார்த்து
நிலவு காத்திருக்கும்
பகல் வருவதை பனித்துளிகள்
காத்திருக்கும்
நானே!
இரவு பகலாய் உன் உருவத்தை
என் மனத்திரையிலே
நிறுத்தி நித்தமும் கனவுடன்
உறவாடிக் கொண்டிருக்கிறேன்
கனவில் மட்டுமே
ராகங்களை இசைக்கும்
தேவ கானமே எப்போது
என் மன வீணைக்குள் அடங்குவாய்
என்பதை எதிர்பார்க்கிறேன்.

எஸ்.கிஸ்ணா, அப்புத்தளை.

## காத்திருப்பு

என் உள்ளத்தில்
ஊஞ்சலாய் ஆடிய
உத்தமியே - நலமா....

இப்படி எத்தனை கவி...
நீ காணாமலே....
வடித்திருக்கிறேன் - வஞ்சி
உனை எண்ணி

நீயும் எனக்கோர்...
கவிதை வரைவாய் என்று...
எண்ணி பல காலமானது....
நீ வரைந்ததெல்லாம் ஓர்....
புன்னகைதான்.... அதோ
உன் உதட்டின் கீழே.....
கைக்கூ கவிதை போல்.....
மச்சம் உள்ளதே - அது போதும்.

உனக்காக நான்.....
மௌனத்தால் கட்டிய காதல் கோட்டை
கண்ணீரில் கரைகிறது - அதில்
உனை நனைய விடமாட்டேன்....

சோகத்தால் என் நெஞ்சம்
சோர்ந்து போகிறது.....
சுகம் காண ஒரு மடல்
வரைவாயா....
காத்துக்கிடக்கிறேன்....
தபால்காரனை....

நடராஜா பாலுமகேந்திரா,
பாண்டிருப்பு–01.



## உனக்காக என் மௌன பாஷை

உன் வார்த்தைகளுக்காக
என்றுமே நான்
காத்திருப்பதில்லை.....
அவை.....
உன்னால் ஏற்பட்ட
சோகத்தினால் ஊற்றெடுக்கும்
கண்ணீராக என்றுமே
எனை நாடி வருவதால்.....
ஆனாலும்....
நீ பேசாவிடினும்
உன் மௌன பாஷையை
உன் இரு விழிகளால்
எதிர்பாராமல் தந்தாயே
ஓர் உறவு.....
அதில் தெரிந்தது - உன்
வார்த்தைகளின் துடிப்பு....
இது மட்டுமா?
என்றுமே நம் நட்பு
என் ஊமை மனதில்
ஒட்டிக்கொண்டுதான்
இருக்கிறது.... காரணம்
நீ என்னைப் பார்க்கையில்
நிலத்தைப் பார்க்கும் என் விழிகள்
ஒரு ஓரமாய் உன் இதயத்தைப்
பார்க்கும் விதியின் சதி.

ஷகி.எஸ்.

## உயிர் குடிக்கும் காதல் விஷம்....!

தோற்கடிக்கப்படும்
பந்தய மொன்றுக்குத்தான்
தயார் படுத்தப் படுகிறேன்
என்றறிந்திருந்தால்
ஏற்கனவே விலகியிருக்கலாம்...!

யார் சொன்னார்கள்...!

சிலர் தவம் என்றார்கள்
பலர் சுகம் என்றார்கள்

நான் சொல்கிறேன்
இது சாபம்!
இவை பாவம்!

விஷம் என்பதை
விளங்கிக் கொள்ளாததால்

இளைஞன் சொன்னான்
காதல் பானம்
அருந்து வாயென்று.....
முனிவன் சொன்னான்
காதல் ஞானம்
திருந்து வாயென்று....

இனிமேலாவது
காதல் ஊனம்
வருந்துவாய் என்று
வழி மொழியுங்கள்...!

அற்புதங்களை
விரும்பி இரசிக்கலாம்
ஆபத்தையுமா?
உயிர் குடிக்கும்
மரணத்தை
விருந்துக்கு அழைப்பது
மடமை என்று

ஏடுகளின்
அட்டைகளில்
எழுதுங்கள் இனி....!

முதுமைக்கு முன்னால்
காவு கொடுக்க நேரிடுவது
அதிகமாக
இந்த காதலினால்தான்
என்று
கல்விப் பாடத்திலிருந்து
கட்டாயமாக்குங்கள்!

ஆட்டோ கிரா.:ப் நீட்டும்
அன்பர்களுக்கு
காதல் வேண்டாம் என்று
கைச்சாத்திடுங்கள்....!

அவஸ்தைகளை
கூட்டிக் கூட்டி
மனசை குப்பையாக்கும்

விபரிக்க முடியாதவேதனை
இனியும்
வேண்டாம் என்று
விளக்குங்கள்....!

அடுத்த தலைமுறைக்கோர்
அடிக்குறிப்பு!

நிச்சயிக்கப்படும்
வாழ்வை நோக்கி
கையசையுங்கள்
மிச்சமிருக்கும்
வாழ்வை தேக்கி
மேம்படுத்துங்கள்....

காதல் விஷம்!
வாழ்வு தவம்!
நோயை விலக்குங்கள்
வாழ்வை துலக்குங்கள்!

ரோஷான் ஏ.ஜிப்ரி, கட்டார்.

## மரண வேதனையில்....



புதியவளாய் வந்து
பூவான என் மனதில்
புயலாய் மாறி என்
நினைவுகளில்
நிழலாடுகின்றாய்.....

உன் தீப்பொறியான
பார்வை என்னை
தீண்டாதவரை
இம்சைகளின்றி
இன்பமாய் வாழ்ந்தேன்.....

காதல் எனும்
கடலில் மூழ்காதவரை
நானும்...
அமைதியாய் வாழ்வை
ஆரோக்கியமாய் வாழ்ந்தேன்.....

இன்றோ என்
இதயத்தை உன்னிடம்
இழந்து விட்டு....
மனநோயாளியாய்
மரண வேதனையில்
வாழ்கின்றேன்.....

நிதமும் உன்
நினைவுகள் தீயாய்
சுடுவதால்....
நித்திரையும் இன்றி - என்
நிம்மதியும் இன்றி....
வலையில் சிக்கிய
மீனாய்....
துடிதுடித்துப் போகின்றேன்!

என் இலட்சிய
கனவுகளும் - உன்னால்
கறைபடிந்த ஆணியாய்
உடைத்து....
சிதறடிக்கப்பட்டுள்ளதேனடி?

உன் விழிகள் - எனக்கு
உரமாக மாறியதால்
மரமாய் என்
ஆசைகளும் இதயத்தின்
அடியிலிருந்து வளர்ந்ததே!

விழியால் வளர்ந்தது
வலியால்.....
பட்டுப்போன மரமாய் - என்
ஆசைகள் உன்னால்
அழிக்கப்பட்டதேனடி?

மலைக்கவி கா.சுபாஷ்,
டிக்கோயா.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

### சமயவேல்

"இசை - சிற்பங்களின் மூச்சு; ஓவியங்களின் பேச்சு; இதயத்தின் வெளிவளர்ச்சி; பேச்சு மௌனித்து அவலப் பாதையில் செல்லும்போது இடையில் எழும் செங்குத்துச் சுவர்...இது உணர்வுகளை ஓசை நிலமாக ஆக்குவது" என்று ஒரு ஜேர்மனியக் கவிதை சொல்கிறது.

"நெஞ்சினில் இன்பக் கனலை எழுப்பி நினைவழிக்கும் கீதம்" என்று கல்கி எழுதுகிறார்.

"பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லை" என்றும், "நாதக் கனலிலே நம்முயிரைப் போக்கோமோ!" என்றும் பாரதி தவிக்கிறான். மரணத்தையும் வெல்லும் சாதனமாக இசை ஒன்றே நமக்கு மிஞ்சுகிறது.

இசையால் அடைந்த பாதிப்பை வார்த்தைகளில் அள்ளி யெடுத்துவிட முயல்கிற சமயவேலின் கவிதை இவ்வாரச் சிறப் புக் கவிதையாக......

## வயலின் மனிதன்

வயலின்களும் இசைப்பர்களும்
மறைந்துவிட
இசை என்னைச் சுருட்டி
எறிகிறது
பூமிக்கு வெளியே

குரல்களின் அடுக்குகளுக்குள்
பதுங்கியிருக்கும் வண்டுகள்
பாய்ந்து வெளியேறி
என் தலையை மூடுகின்றன

எந்த வடிவத்திற்குள்ளும்
அடங்கமுடியாத
உயிரின் துக்கம்
ஒரு ஒற்றை வயலினிலிருந்து
கறுப்பு வானமாய் பெருகுகிறது.

இன்னொரு உடுமண்டலத்தில்
நானும் பியானோவும்
தொங்குகிறோம் ஒரு புல்
நுனியில்
தினசரி வாழ்விலிருந்து
மில்லியன்
மைல்களுக்கு அப்பால்
ஓர் அமானுஷ்யப் பரப்பில்
தாளங்களின் காலக்கணக்கு
சிம்பனியின் அடியாழத்தில்
ஒரு தனிமனிதனின் விம்மல்

நடத்துனனின் ஒரு சிறு
தவறில்
முழு ஆர்கெஸ்ட்ராவும்
என் மேல் பாய்கிறது
ஒவ்வொரு உறுப்பாய்
என்னைக்
கழற்றி எறிந்துவிட்டு
ஓய்கிறது இசை

அரங்கை விட்டு
வெளிவருகிறேன்
ஒரு பிரும்மாண்டப்
பியானோவின் இசை
நகர் மேல் பொழிந்து
கொண்டிருக்கிறது

பஸ் – ஸ்டாப், கடக்கும்
வாகனங்கள்
விருட்டென்று வந்து என்னை
ஏற்றிக்கொண்ட
சிட்டி பஸ், வெளியில்
விடைதரும் சிநேகிதி
ஓரத்தில் ஒளிகசியும்
கட்டிடங்கள்
வேப்ப மரங்கள், கறுப்புச்
சாலை, கடைகள்



வேதக் கோயில், தியேட்டர்,
ரிக்ஷா வரிசைகள்
எல்லாவற்றுக்குள்ளும் இருந்து
எட்டிப் பார்க்கிறது ஒரு
வயலின்


எந்த ஸ்டாப்பிலோ
இறங்குகிறேன்
எந்தத் தெருவிலோ நடக்கிறேன்
எந்த வீட்டையோ தட்டுகிறேன்
ஓர் உயிருள்ள வயலினாக நான்
எப்பொழுதோ
மாறிவிட்டிருந்தேன்.

சமயவேல்

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி —




பெயர்: வி. சிவநாதன்
வயது: --
முகவரி:
AL-NISR MACHINERY
P.O.BOX-2224,
DOHA-QATAR.
பொழுது போக்கு:
தினமுரசு வாசித்தல்



பெயர்:
ஏ.எம். முபாறக்
வயது: 29
முகவரி:
83-1A, கே.கே.பி. வீதி,
கல்முனை–03.
பொழுது போக்கு:
வானொலி,
தினமுரசு வாசித்தல்.



பெயர்: எம்.எச். நஸீர்கான்
வயது: 21
முகவரி:
வைத்தியசாலை வீதி,
கனமூலை,
மதுரங்குளி, புத்தளம்.
பொழுது போக்கு:
கிரிக்கெட், வானொலி



பெயர்: வி. ராஜேஸ்கன்னா
வயது: 21
முகவரி:
92, தலவெல்ல வீதி,
பல்கலைக்கழக ஆண்கள்
விடுதி, இரத்மலானை.
பொழுது போக்கு:
கிரிக்கெட், இசை.

# நட்பு

ஆண் - பெண் இடையே ஏற்படும் நட்பு மிகவும் அத்தியாவசியமானது. அவர்கள் சிறுவர்களாகவும் சிறுமிகளாகவும் இருக்கும்போது, போற்றி வளர்க்கப்படும் நட்பு, பள்ளிப் பருவத்தில் கூட பாராட்டப்படத்தான் செய்கிறது. ஆனால் வாலிபப் பருவத்தை அடையும்போது அதில் நெருக்கடி ஏற்படுகிறது.

கல்லூரி மாணவ மாணவிகளிடையே இந்த நட்பு எப்படி இருக்கிறது? அவர்களின் நட்பில் என்ன சிக்கல் எழுகிறது?

கல்லூரி மாணவிகளே! ஆண் பெண்களுடன் உள்ள நட்பைப் பற்றி மனம் திறந்து சொன்ன விஷயங்கள் இவை:



புதிய தலைமுறையே கல்லூரிகளில்தான் உதயமாகிறது. இந்த தலைமுறை தனது சக்தியை ஒருமுகப்படுத்த, ஆண் - பெண் நட்பு அவசியமான ஒன்றாகிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரையில் நட்பு நன்றாகத்தான் இருக்கிறது. வெளியே இந்த சமுதாயம்தான் ஆண்-பெண் நட்பை வேறு மாதிரியாகப் பார்க்கிறது. அப்படிப்பட்ட கண்ணோட்டத்தோடு பெற்றோர்களும் பார்ப்பதால், ஆண்-பெண் நட்பில் சிக்கல் எழுகிறது.

பெண்கள் தங்களை செம்மைப் படுத்திக்கொள்ள ஆண்களோடு நட்பு ரீதியான பழக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும். பெண்ணும் பெண்ணும் நட்புடன் இருக்கும்போது பொதுவான பெண்களுக்குரிய குணமே அவர்களிடம் மேலோங்கி நிற்கும். அவர்களிடம் உள்ள பழக்க வழக்க குறைகளும் அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆண்களோடு நட்புடன் பழகும்போது, நிறை குறைகள் தெரிய வருகின்றன.

பழைய பழக்க வழக்கங்களில் மூழ்கிக்கிடப்பவர்களால், புதிய தலைமுறையின் நட்பைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நாங்கள் வழி தவறிப் போய்விடுவோம் என அவர்கள் நினைக்கிறார்கள். பழைய தலைமுறையினரால், இந்த இளைய தலைமுறையின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

மாணவிகளின் மனவளர்ச்சிக்கு, ஆண்களின் நட்பு அவசியம். சிலர் அதனைத் தவறான முறையில் பயன்படுத்திவிட்டால், எல்லோரும் அதை நினைத்து ஒதுங்கிக்கொள்ளக் கூடாது. ஆண்களுடன் பெண்கள் பழகும்போது இயற்கையாகவே ஏற்படும் தேவையற்ற பயம், அதிகபட்ச நாணம் போன்றவைகள் காலப்போக்கில் மாறிவிடும். அதனால், பெண்களின் தனிப்பட்ட திறமைகள் வளரும். காலப்போக்கில் தொழில் ரீதியாகவும், வாழ்க்கை ரீதியாகவும் ஆண்களை அணுகும்போது, எளிதான நிலைக்கு வந்துவிடலாம்.

இந்தச் சமுதாயம் வதந்திகளைப் பரப்புகிறது.

ஒரு ஆணுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் சிலர், தனது வேலைகளை எல்லாம் மறந்துவிட்டு அதிலே முழுக் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதிலே கவனத்தைச் செலுத்திவிட்டு, அதைக் கிரகிக்க முடியாத நிலையில் தங்கள் கற்பனைக் குதிரையை ஓடவிடுகிறார்கள். அந்த இருவரையும் பற்றித் தவறான வதந்திகளைப் பரப்புகிறார்கள்.

இப்படி ஒரு மோசமான அணுகுமுறை இருப்பதால், நிறையப் பெண்கள் ஆண்களிடம் பேசவே பயப்படுகிறார்கள். திடீரென்று அத்தியாவசியமான நிலையில் ஒரு ஆணைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, பதற்றத்தையே பெண்களால் வெளிக்காட்ட முடிகிறது. கை கால்கள் ஆட வியர்த்து வடிந்துவிடுகிறார்கள்.


பேசுவது, வதந்தியைப் பரப்புவது போன்றவைகளை இந்தச் சமுதாயத்தில் இருந்து தவிர்க்க முடியாது. சில நேரம் நல்ல மாதிரியாகவும், பல நேரம் கெட்ட நிலையிலும் அந்தப் பேச்சுக்கள் அமையும். அதனால் இந்தச் சமுதாயத்தை நினைத்து வருந்திக்கொண்டிருப்பது தேவையற்றது.

கல்லூரிகள் என்றாலே சிலருக்கு அங்கே காதல்தான் நடக்கிறது என்ற நினைப்பு வந்துவிடுகிறது. நல்ல நிலையிலான ஆண் - பெண் நட்புக்கு இப்போது கல்லூரிகள்தான் முன்னுதாரணமாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிய இன்னும் கொஞ்சக் காலம் பிடிக்கும்.

செக்ஸ் தூண்டுதல்தான் ஆண் பெண் நட்புக்கு அடிப்படையாக இருக்கிறது என்பது மூடத்தனமான வாதம். நல்ல நண்பர்களுக்கிடையில் இப்படிப்பட்ட செக்ஸ் எண்ணங்களே தலைதூக்குவதில்லை. செக்ஸ் கண்ணோட்டத்தோடு பழகும் ஆண்களை அறிய வேண்டுமானால் கூட ஆண்களின் நட்பு அவசியமாகத்தானே செய்கிறது. ■

# நீங்கள் எப்படியான கணவர்?

மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமாம்? அதிலும் ஒரு பெண் தாயாகும் பாக்கியத்தைப் பெற்றுவிட்டால் அவளின் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கே எல்லை இல்லை! ஆனால் இன்றைய காலகட்டத்தில் எத்தனையோ பெண்கள் தாயாகும் ஆரம்பத்திலேயே தங்கள் கணவரைப் பிரிந்து வாழும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். திருமணமான ஓர் இரு மாத காலத்தில் கணவர் பொருளாதார ரீதியாக வெளியிடங்களுக்கு சென்றுவிடுவதால் மனைவி தனிமைப்படுத்தப்படுகிறாள். அந்தக் காலப் பகுதியில் மனைவி தாய்மையடைந்திருந்தால் கணவனின் அன்பும் ஆதரவும் முழுமையாகத் தேவைப்படுகிறது.



இவ்வேளையில் கணவனைப் பிரிந்து வாழும் மனைவி உளரீதியாகப் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறாள். இப்படியான சந்தர்ப்பங்களில் கணவன் தன் மனைவியின் நிலைமையை உணர்ந்தவராக அவளுடைய அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விலும் கூடிய அக்கறை கொண்டவராக இருக்க வேண்டும்.

பெரும்பாலும் பிரசவ காலத்தில் கட்டாயம் ஒரு மனைவிக்குக் கணவனின் ஒத்துழைப்பும் அன்பும் ஆறுதலும் தேவைப்படுகிறது. தான் பெற்றெடுக்கும் குழந்தையைத் தன் கணவன் பார்க்க வேண்டும், தூக்க வேண்டும் என்று ஆயிரம் கனவுகளுடன் வாழும் ஒவ்வொரு மனைவியின் ஏக்கத்தை உணர்ந்து செயற்படும் கணவராக இருக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு மனைவியினதும் கனவாகும். உழைத்துக் கொடுப்பதோடு கணவனின் பங்கு முடிந்துவிட்டது என்று எண்ணுவது தவறாகும்.

இரண்டு கைகள் சேர்ந்தால் எப்படி இனிமையான ஓசை வருகிறதோ அதே போல இரண்டு உள்ளங்களின் ஒன்றிப்பில் மலர்வதுதான் இன்பமான இல்லற வாழ்வு. இதில் இரண்டு உள்ளங்களின் இணைபிரியாத செயற்பாடு முக்கிய பங்காக அமைகிறது. கணவனுடைய உணர்வுகளைப் புரிந்த மனைவியாகவும், மனைவியின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட கணவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை இனிமை பெறும். மனைவி மட்டும் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடாதீர்கள். நீங்களும் உங்கள் மனைவியருக்கு என்றும் உறுதுணையாக இருந்து வாழ்வைச் சிறப்பாக்குங்கள்.

ஆர். பிரம்மகவி, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## பிஷ் கபாய்

**தேவைப்படும் பொருட்கள்**

மீன் 1/2 கிலோ
மிளகாய்த்தூள் 1/2 தேக்கரண்டி
கடலை மாவு 125 கிராம்
பூண்டு 1
ஏலக்காய் 5
கறுவாப்பட்டை 2 துண்டுகள்
பெருஞ்சீரகம் 1 தேக்கரண்டி
மிளகு 10
கராம்பு 5
பெரிய வெங்காயம் 2
பச்சை மிளகாய் 4
முட்டை 2
உப்பு தேவைக்கு

**செய்முறை :**

முள் அதிகம் இல்லாத மீனாகப் பார்த்து வாங்குவது நல்லது. பெரிய வெங்காயத்தை வெட்டி நறுக்கவும் முட்டையை அடித்துக் கலக்கவும். மிளகுத் தூளும் உப்பும் கலந்து மீனில் சேர்த்து அதனை அவித்து எடுக்கவும்.

பூண்டு, ஏலக்காய், கறுவாப்பட்டை, பெருஞ்சீரகம், மிளகு, கராம்பு ஆகியவைகளைச் சேர்த்து மிக்சியில் போட்டுப் பொடியாக்கவும்.

அவித்த மீனில் கடலை மாவைச் சேர்த்து அதில் ஒரு கப் தண்ணீரும் ஊற்றி சிறு தீயில் வேக வையுங்கள். நீர் வற்றும்போது இறக்கி வைக்கவும். நறுக்கிய பெரிய வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவைகளை மீனில் கலந்து அத்தோடு முட்டைக் கருவையும் சேர்த்து லட்டு வடிவத்தில் உருட்டி எடுக்கவும். எண்ணெயைச் சூடாக்கி, உருண்டைகளைப் போட்டு, பொன்னிறமாகும் வரை பொரித்து எடுங்கள். இந்த பிஷ் கபாப்பில் சட்னி கலந்து சாப்பிடலாம். ●


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்
வண்ணச் சேலை பரிசுப் போட்டி
எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.
RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 364792
Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 594727
மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



02
பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்: .......................
கையொப்பம்: ..............
உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை
★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.
கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:
02-08-2003
அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.



இந்த வாரம் யாருக்கு சல்வார்?
வாசகிக்கு அதிஷ்டம்!
இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்
எஸ். சபீனா
625ஏ, கொழும்பு வீதி, குருநாகல்.
பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# அங்கம் 06

ஐஸ்கிரீம் சாப்பிட்டதில் எனக்குத் தொண்டை கட்டிக்கொண்டு, கல்யாணம் பத்தாம் தேதி என்றால், ஒன்பதாம் தேதி எனக்கு நல்ல ஜுரம் வந்து, க்ரோஸின், ஆண்ட்டிபயாட்டிக் என்று நிறைய மாத்திரைகளை விழுங்க வேண்டியிருந்தது.

இருந்தும் கல்யாணத்தின் போது, எனக்குக் கொஞ்சம் அசதியும் லேசான மயக்கமும் இருந்தது. பீரியட் வேறு நாளாகிவிட்டதால் ஓவிரால் போட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் அலுப்பு. ஆனால் மிகுந்த மனோபலத்துடன் அந்த தினங்களில் தக்கபடி சிரித்துக் கொண்டிருந்தேன்.

டில்லியில், சென்னையில் போலக் கல்யாண மண்டபங்கள் அதிகம் இல்லை. கித்வாய் நகரில் எங்கள் ப்ளாக்கின் நடுவில் இருந்த பார்க்கிலேயே ஷாமியானா போட்டு, பூந்தொட்டிகள், கையலம்பக் குழாய்த் தொட்டிகள், கண்ணாடி எல்லாம் ஓவர்நைட் மயன் மாளிகை போல அமைத்துவிட்டார்கள்.

உட்கார நாற்காலிகள் லாரியில் வந்து இறங்கின. ஆர்க் விளக்குகளும் வீடியோக்காரர்களும் தக்க சமயத்துக்கு வந்தார்கள். புரோகிதர் கைனெட்டிக் ஹோண்டாவில் வந்தார். காலை முகூர்த்தம். செங்கலை வைத்து அடுக்கின தீ வளர்த்து, அர்ஜுன் கண்ணுக்கு மை இட்டுக்கொண்டு என்னை அடிக்கடி பார்த்துச் சிரித்துக் கொண்டே இருந்தார்.


எனக்கு லட்சுமிபாய் நகர் போய் ஒரு இடத்தில் கையெல்லாம் மெகிந்தியும், ஐ.என்.ஏ.மார்க்கெட்டில் தலையலங்காரமும் பண்ணிவிட்டார்கள். திருமணப் புடவை ஊசி ஊசியாய் சரிகை போட்டுக் குங்குமச் சிவப்பில் இருந்தது.



கசகசவென்று இருந்தது. ஜெயந்தியைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. முதன் முதலாகப் பையன்களுடன் சேர்ந்து விளையாடினாள். எல்லோரும் நாற்காலிகளைத் தாறுமாறாகப் போட்டுக் கொண்டு, 'அந்தாக்ஷரி' பாடி விளையாடினார்கள். ஹிந்தியிலும் தமிழிலும் பேசிக்கொண்டார்கள். அப்பாவின் விருந்தினர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். அந்தமான் கிருஷ்ணன் கூட வந்துவிட்டார். மாமா வந்திருந்தார். அம்மா பக்கம் அதிகம் பேர் வரவில்லை. அர்ஜுன் வீட்டினர் இருபத்தைந்து பேர் வந்திருந்தார்கள். எனக்கு வைத்த சீர் வரிசையெல்லாம் மணமேடைக்குப் பக்கத்திலேயே வைத்து வீடியோ எடுத்தார்கள்.

சாயங்காலம் ஜன்பத்திலிருந்த மெரிடியன் ஓட்டலில் அர்ஜுன் ஏற்பாடு செய்திருந்த ரிஸப்ஷனுக்கு எனக்கு ஷி.'.பான் புடைவையும் கொண்டையும் போட்டுவிட்டார்கள். யார் யாரோ வந்து சிரித்துச் சிரித்து உதட்டோரத்தில் வலிக்க ஆரம்பித்துவிட்டது.

தலைவலி பொறுக்க முடியவில்லை. ஜெயந்தியைக் கூப்பிட்டு எங்கேயாவது போய் அனால்ஜின்




வாங்கிக் கொண்டு வா என்று அனுப்பினால், அவள் பாய்ஸ் உடன் விளையாட்டு சுவாரஸ்யத்தில் மறந்துவிட்டாள்.

பைன்ஆப்பிள் கேக், சிப்ஸ், சமுசா, ஜிலேபி, ஐஸகிறீம் எல்லாம் வைத்து, 'ஹைடீ' என்று பலகாரங்கள் பாதி வேஸ்டாக வைத்திருந்தார்கள். மேலே இருந்து ஸ்பீக்கரில் இசை கேட்டுக்கொண்டிருந்தது. கல்யாணம் என்பதைப் பற்றி வைத்துக்கொண்டிருந்த எதிர்பார்ப்புகள் குழப்பமாக இருந்

**எழுதுவது - சுஜாதா**

தாலும், அந்த தினம் இவ்வளவு தலைவலியில் கஷ்டப்படுவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. எல்லாம் முடிந்து கழுத்து மாலையைக் கழற்றியபோது அழுகை வந்து கண்ணைத் துடைத்துக் கொண்டதை அம்மா தப்பர்த்தம் பண்ணிக்கொண்டு,

"சரியாய்ப் போய்டும், சரியாய்ப் போய்டும். என் கல்யாணம் திருத்துறைப் பூண்டியில்..." என்று ஆரம்பித்தாள்.

அர்ஜுன் அதே ஓட்டலில் ப்ரைடல் ஸ்வீட் ஏற்பாடு பண்ணியிருந்தார். மறுநாள் ஷேத்திராடனம் போல பெங்களூர், ஊட்டி, கொடைக்கானல், கோவளம் என்று ஹனிமூன் ட்ரிப் போட்டு, எல்லா இடங்களிலும் ஓட்டல் ரிசர்வேஷன் அம்பி என்று ஒருத்தர், என்ன உறவென்று சரியாகத் தெரியவில்லை.....ஏற்பாடு செய்திருந்தார்.

மறுநாள் அதிகாலை ஃப்ளைட்டில் பெங்களூர் புறப்படுகிறோம். பதினைந்து தினம் சுற்றியடித்துவிட்டு மீண்டும் டில்லி வந்து ஆஷாட மாதம் கழிந்ததும் குடித்தனம் வைப்பதாக ஏற்பாடு. இனி என் பேச்சும் பழக்கமும் என்னுடையதில்லை. யாரோ தீர்மானிக்கிறார்கள் என்கிற உணர்வு வந்தது.

முதல் இரவு பற்றிய சம்பிரதாய எண்ணங்கள்தான் எனக்கு உண்டு. சினிமாவில் போல பால், பழம், பளிச்சிடும் வெள்ளிச் செம்பு இப்படி இல்லாமல் நான் பாட்டுக்குப் புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். அர்ஜுன் வந்தார். டீ.வி. மௌனமாக ஓடிக்கொண்டிருக்க, அவர் தன் பூட்ஸ், டை இவைகளையெல்லாம் கழற்றி, பைஜாமாவுக்கு மாற்றிக் கொண்டார்.

தலைமயிர் கலைந்து நெற்றியில் அவசரக் குங்குமத் தீற்று. அதை என் நெற்றியில் ஒட்ட வைக்க முயன்றார்.

அர்ஜுன் எனக்கு ஒருவிதமான நம்பிக்கையை ஊட்டப் பலவாறு பேசிக்கொண்டிருந்தார். அதுதான் அதிகம். அவ்வப்போது சீண்டிக் கொண்டோம்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"காலைல இருந்து தலைவலி பிளக்கிறது."

"உனக்கு ரொம்பக் கஷ்டம் கொடுத்துட்டேன்."

"தலைவலி அப்ப தெரியலை."

"கொஞ்ச நேரம் தூங்கு. அப்புறம் எழுப்புகிறேன்."

இருவரும் கொஞ்ச நேரம் கன்னாபின்னா டீவி பார்த்துவிட்டுத் தூங்கிப் போனோம்.

ஒரு நாளைக்கு அதிக சம்பவங்கள். அதிகாலை எழுந்தது, தாலி கட்டினது, மணமேடையில் பலர் கைகுலுக்கியது. பேருக்குப் பேர் புடைவை கட்டிவிட்டது, ஒரே இலையில் சாப்பிட்டது, ஒரு கணம் கூட ரெஸ்ட் இல்லாமல் ஐ.என்.ஏ மார்க்கெட்டுக்கும் லட்சுமிபாய் நகருக்கும் அலைந்தது, வேண்டாத கொண்டை போட்ட தலையலங்காரத்தின்போது, அந்த பஞ்சாபி பெண்ணின் வியர்வை நெடி, சாயங்கால ரிஸப்ஷனில் நிமிஷத்துக்கு மூன்று முறை சிரித்தது, நாள் பூரா ஆதார சுருதி போல இந்தத் தலைவலி, இப்போது விண் விண் என்று என்னை முழுசாக கவனிக்கும் நேரம் வந்தாச்சு என்று வெடிக்கத் துவங்க.....

கொஞ்ச நேரம்தான். தூங்கி எழுந்தபோது பக்கத்துப் படுக்கையில் அர்ஜுனைத் தொட்டுப் பார்த்து எல்லாம் நிஜம்தான் என்று ஊர்ஜிதம் செய்துகொள்ள, தொட்டுப் பார்த்துக்கொண்டேன். படுக்கை காலியாக இருந்தது. பாத்ரூம் போயிருக்கிறாரோ என்று பார்த்தேன். கொஞ்ச நேரத்தில் வெளிக் கதவின் சாவி திறக்கும் சப்தம் கேட்டது.

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)

# இறுதிக் கட்டத்தை நெருங்கும் இடி அமீன்



"எல்லாவற்றிற்கும் ஓர் முடிவு உண்டு என்பதற்கமைய இடி அமீனின் காலம் முடிவுக்கு வருகிறது." என்று ஒரு உகண்டா வாசி கூறுகிறார்.

தலைநகர் கம்பாலாவில் இடி அமீனின் மரணச் செய்திக்காக மக்கள் காத்திருப்பதாக அங்கிருந்து வெளியாகும் செய்தித் தாள் ஒன்று எழுதியுள்ளது.

இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்டதால் இடி அமீனின் உண்மையான சொரூபம் இளைய தலைமுறையினருக்குப் பெரிதாகத் தெரியாது. அதனால் நாங்கள் பட்ட துன்பங்களின் அவஸ்தையை அவர்கள் முழுமையாக அறியாமாட்டார்கள் எனச் சொல்கிறார் ஹபிப் அன்சாரி என்ற விவசாயி.

எவ்வாறெனினும் ஆபிரிக்க செய்தி ஊடகங்கள் இடி அமீனின் உடல் நிலை குறித்த செய்திகளை மிக ஆர்வத்தோடு வெளியிட்டு வருகின்றன. அவர் மரணித்தால் உடலை உகண்டாவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்கு ஆதரவாகவும் எதிராகவும் குரல்கள் எழுந்துள்ளன.

இடி அமீனை உகண்டா மக்கள் மறந்துவிட்டாலும் கூட தினமுரசு வாசகர்கள் அத்தனை சுலபத்தில் மறந்துவிட முடியாது! ரசிகன் தொகுத்துத் தந்த இடி அமீனின் வாழ்க்கை வரலாறு முரசு வாசகர்கள் மத்தியில் அந்தளவு பிரபலமானது.

நீண்ட காலத்தின் பின்னர் இடி அமீன் குறித்த செய்திகள் வெளிவருகின்றன. உகண்டாவில் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் சவுதி அரேபியா இடி அமீனுக்கு அரசியல் தஞ்சம் வழங்கியது.

தனது 80 ஆவது வயது கடந்துவிட்ட இடி அமீன் இப்போது கடுமையாக நோய்வாய்ப்பட்டு ஆபத்தான



நிலையில் இருக்கிறார். கடந்த வெள்ளிக்கிழமை 'கோமா' நிலைக்குச் சென்றுவிட்ட இவருக்கு ரியாத் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சையளிக்கப்படுகிறது. மனிதர் பிழைத்துக்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு ரொம்பவும் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

உகண்டா மக்களுக்கு இடி அமீன் ஒரு மாறாத வடு! அவரது ஆட்சி முடிவுக்கு வந்து இரண்டு தசாப்பதங்கள் மக்களின் இதயங்களில் இடி அமீன் இறக்கிய இடிகளின் ரணங்கள் ஆறவில்லை.

இவர் சவுதியில் மரணமடைந்தால் உடலை உகண்டாவுக்குக் கொண்டுவர அவரது மனைவிகளில் ஒருவரான மிஸ்ரின் ஏற்கனவே உகண்டா அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறார். ஆனால் அந்த நாட்டு ஆட்சியாளர்கள் இடி அமினின் சடலம் கூட உகண்டா வருவதை விரும்பவில்லை போல் தெரிகிறது.

எப்படியிருந்தாலும் தனது அந்திம காலத்தில் இடி அமீன் மிகவும் சாதுவானவராக நடந்துகொண்டார் என அவரைக் கவனித்துக்கொள்ளும் ஒரு மனைவி கூறுகிறார்.

இராணுவத்தில் சாதாரண சிப்பாயாக சேர்ந்து தனது திறமையாலும் சூழ்ச்சிகளாலும் உகண்டாவின் சர்வாதிகார ஆட்சியாளராக உயர்ந்தவர் இடி அமீன். இவரது பதவிக் காலம் அந்த நாட்டின் மிகவும் கொடுமையான அநீதி மிக்க காலப் பகுதியாகக் கருதப்படுகிறது. இன மோதல்கள், அரசுக்கெதிரான கிளர்ச்சிகள், இராணுவத்திற்குள் களையெடுப்புகள் என சுமார் இரண்டு லட்சம் பேர் இடி அமீனின் அதிகாரத்தின் கீழ் கொலை செய்யப்பட்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இடி அமீனுக்குப் பல மனைவிமார், பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள். இவர்களுள் அமெரிக்காவில் ஒருவரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஒரு மகனுமாக சொல்லிக்



இடி அமீனின் மனைவிகளில் ஒருவர் ஆமீனா அமீன்

கொள்ளும்படி நல்ல நிலையில் இருக்கிறார்கள். அமீனுக்கு அருகில் அவரது இரண்டு மனைவிகளும் மூன்று பிள்ளைகளும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

என்னதான் கொடுமையான ஆட்சியாளர் என்றாலும் அவர் குறித்து நல்லது சொல்ல ஒருவர் கூடவா இல்லாமல் போய்விடுவார்கள். அமீனின் அமைதியான மரணத்திற்குப் பிரார்த்திப்பதாகக் கூறுகிறார் சல்மா என்ற மூதாட்டி. இவருக்கு அமீன் ஆட்சியிலிருந்தபோது வீடொன்றைப் பரிசளித்திருக்கிறார். அந்த நன்றி உணர்வின் வெளிப்பாடு.

# இவ்வார சிறு கதைகள்

# துணைவி

அதிகாலை ஐந்து மணி நல்ல நித்திரையிலும் தனது சாரம் நனைவதை உணர்ந்த தர்ஷன் கண்களைத் திறக்காமலே தொட்டுப் பார்த்தபோது நிஜமாகவே ஈரம்தான். மகன் தன் மேல் சூ இருக்கிறான், திடீரென்று எழும்பினால் பயத்தில் இடையில அடக்கி விடுவான் என்று மேலும் மேலும் ஈரமாக அப்படியே இருந்துவிட்டான்.

அப்பாவை எழுப்பிவிட்ட சந்தோசத்தில் அம்மாவை முட்டிக்கொண்டிருந்த தனுகுட்டியை அப்படியே தூக்கி ஒரு 'குட்மோர்னிங்' சொன்னதோடு ஒரு முத்தமும் பரிசாகக் கொடுத்தான் தர்ஷன். அப்படியே குனிந்து தன் மனைவிக்கும் ஒரு முத்தம்.... ஆனாலும் அவள் எழும்புவதாக இல்லை.

"கவி...கவி...எழும்புங்க.... இவன் என்னை நனைச்சிட்டான்....படுக்கை ஈரமாயிட்டுது."

"ம்....இண்டைக்கு லீவுதானே, கரைச்சல் தராம படுங்கோ.... முடிஞ்சால் துணிய மாத்துங்கோ..." என்று சிணுங்கலாகவே சொல்லி முடித்தாள் கவி...

"சரி...டேய் குட்டி! இனிமே அம்மாவின்ர பக்கம்தான் சூ அடிக்



கணும்...." என்று தனுவுக்கு ஜங்கியை மாத்திவிட்டு கவிக்குப் பக்கத்திலேயே படுக்கவிட்டான்.

எழுந்து கலண்டரைக் கிழிக்கச் சென்றவன் சில விநாடிகள் மெய்மறந்து போனான்.

இன்று மார்ச் 29. தர்ஷனுக்கும் கவி என்ற கயல்விழிக்கும் திருமணமான நாள் என்பதைப் பேனையால் குறித்து வைத்திருந்தாள் கவி.... அந்த நாள் இன்றும் பசுமையாக....

2001.03.29 காலைப்பொழுது... கொழும்பின் ஆரவாரம்.... வெள்ளிக்கிழமை என்பதால் பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோயிலுக்கு வழமை போலவே வந்திருந்தான் தர்ஷன்... கோயிலின் மூலையில் அழுது வீங்கிப்போன முகத்துடன் கவி மெய்மறந்து நின்றாள். அவளின் அந்தக் கோலம் ஏதோ பிரச்சினையில் இருப்பதை வெளிப்படுத்தியது தர்ஷனுக்கு... அவள் கொழும்புக்குப் புதுசு என்பதையும் கிரகிக்க அவ்வளவு நேரம் எடுக்கவில்லை.... அருகில் சென்று

"நீங்க... கொழும்புக்கு புதுசா.... ம்...ம்...அவள் பதிலே இல்லாமல் நின்றாள்...

"இஞ்ச பாருங்க. உங்களுக்கு ஏதோ பிரச்சினை போல தெரியுது... நீங்க தப்பா நினைக்கலையின்னா... என்னால உதவ முடியும்னு நினைக்கிறன்...."

அவளது பார்வை உதவி என்றதும் நிதானமாகத் திரும்பியது... நிலத்திலிருந்து பார்வையைத் திருப்பாமலே அவளது உதடுகள் மட்டும் பேசின....

"நானும் அண்ணாவும் நேற்று கொழும்புக்கு வந்தனாங்கள்... வரேக்கயே பேக் தொலைஞ்சிட்டது... பின்ன ஒரு லொட்ஜில தங்கினனாங்கள்.... இரவு அண்ணாவை யாரோ வந்து கூட்டிட்டுப் போனவைகள். பிறகு அண்ணா வரவேயில்ல...."

"என்ன விசயமா கொழும்புக்கு வந்தனீங்கள்...." அவளை இடைமறித்துக் கேட்டான்.

"ஊரில எங்களுக்கெண்டு யாருமில்லை...அண்ணனுடைய பிரண்ட் ஒருவர் என்னைக் கட்டிறதுக்கு இந்தியா வரச் சொன்னவர்... அதான் வந்தனாங்கள்... இனி அது

**தாமரை மகன்**
**கிண்ணியா**

வும் செய்ய முடியாது... யாராவது தெரிஞ்சவயளாவது வருவினம் எண்டுதான் கோயிலுக்கு வந்தனான்..." என்று சொல்லி முடிக்கும் முன்னே கண்ணீர் வழிந்தோடியது....

"சில விநாடிகள் மௌனமாகக் கழிந்தது....கண்ணைக் கசக்கிக் கொண்டு நிமிர்ந்து கேட்டாள், "இந்த நிலைமையில உங்களால உதவ முடியுமா?"

அவள் வார்த்தைகளைப் போலவே கேள்வியும் தெளிவாக அவன் காதில் ஒலித்தது.

இப்படியான சிக்கலில் எப்படி உதவுவது? தர்ஷனுக்குக் குழப்பம்...

"இஞ்ச பாருங்க நீங்க தனியா இதில நிண்டு அழுகிறதில ஒண்டும் நடக்காது. என்னோட வாங்க. எனது சித்தி வீடு பக்கத்தில்தான். முகத்தக் கழுவி சாப்பிட்ட பிறகு பொலிஸில ஒரு கொம்ளைண்ட் செய்வம்...."

என்றபோது சற்று யோசித்தவள் தலையை அசைத்து புறப்பட்டாள்....

இப்படியாக ஆரம்பித்து... பொலிஸில் முறைப்பாடு.... மனித உரிமைகள் அலுவலகம்.... ரெட்குரோஸ் ஒப்பிஸ் என அலைந்து மாதம் ஒன்று போனதே தெரியவில்லை....

சித்தி வீட்டில் 'தனக்கு தெரிந்தவள்' என்று சொன்னதோடு மட்டுமில்லாது தன் சம்பளப் பணத்தில் கவிக்கு உடுப்புகளும் வாங்கிக் கொடுத்தான்...இப்படியான நிலைமையில் கவியும் ஏற்றுக்கொண்டாள். ஆனாலும் இன்று வரை கவியின் அண்ணாவைப் பற்றிய எந்தத் தகவலும் தெரியவில்லை.

சித்தி வீட்டார் முணுமுணுக்க ஆரம்பித்தனர். அயலவர்களும் அவர்கள் பங்கிற்கு ஆரம்பித்தார்கள். இந்த ஒரு மாத இடைவெளியில் தர்ஷனும் கவியும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும்...விட்டுக் கொடுத்து நடந்துகொள்ளவும் பழகிவிட்டார்கள்...காலம், சமூகம் இருவரையும் ஒரு முடிவுக்குள் வர வேண்டிக் கட்டாயப்படுத்தியது.

அதே கோயிலில் இருவரும்......

"கவி.....உங்களுக்கும் உறவுன்னு யாருமில்லையா? எனக்கும் அம்மா அப்பாவினுடைய அழுத்தம் எண்டு ஒண்டுமில்ல....என் மேல அவங்களுக்கு நம்பிக்கை இருக்கு.....நீங்க விரும்பினா... இண்ணைக்கே நாம ரெஜிஸ்ரர் பண்ணிக்கலாம்...என்ன சொல்லி நீங்க...இப்படியே எத்தின நாளைக்கு இருக்கிறது..."

தர்ஷனை நிமிர்ந்து பார்த்த கவி...முதன் முறையாக அவன் கைகளைப் பிடித்துத் தன் மார்போடு பிடித்துக்கொண்டு,

"தர்ஷன்! நீங்க.... என்ன முடிவெடுத்தாலும்..... எனக்கு சம்மதம் தான்" என்று நன்றி யுணர்வோடு பார்த்தாள்....

இப்படி ஒரு அதிர்ஷ்டமாக தர்ஷனுக்குக் கவி கிடைத்து இன்றோடு இரண்டு ஆண்டுகள். அவை சுகமான நாட்கள்....அன்றிலிருந்து கவிக்கு அண்ணாவாக, நண்பனாக, நல்ல கணவனாக நினைக்கையில் சந்தோசம் மேலிட்டது. திரும்பிச் சென்று அவள் பாதங்களைப் பிடித்து அழுத்தமாக ஒரு முத்தமிட்டான்.

# காதல்

பொழுது சாய்ந்து கதிரவன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கினான். நேரத்தைப் பார்த்தாள் சுமதி. நேரம் 6.50 ஐக் காட்டியது. கடிகாரத்தைப்



பார்த்தவாறே அமர்ந்தாள். பழைய நினைவுகளில் சற்று மூழ்கிப்போனாள். தாய் தகப்பனுக்கு முதற் பிள்ளை சுமதி. மற்ற இரண்டு பேரும் அவளுடைய தம்பிமார்கள். பாடசாலையில் உயர்தரம் படிக்கும்போதே சுமதியை நேசிக்கத் தொடங்கினான் அரவிந். அரவிந் அவ்வூர்ப் பண்ணையாரின் ஒரே மகன். ஆணழகனாக இருந்தாலும் சுமதியை விட வேறு பெண்களை நிமிர்ந்தும் பார்க்க மாட்டான். சுமதிக்கு மனதில் விருப்பம் இருந்தாலும் பயத்தில் வெளியில் சொல்லவில்லை அவ்வூரிலேயே கோடீஸ்வரன் மகன் என்பதால் என்ன பிரச்சினை வருமோ என்று பயந்தாள்.

அரவிந் சுமதியைக் காதலிக்கும் விஷயம் பெற்றோருக்குத் தெரியவர சுமதியைப் பாடசாலைக்குச் செல்ல விடாது மறித்தார்கள். அரவிந்தின் பெற்றோர் எவ்வளவோ சொல்லியும் அரவிந் கேட்கவில்லை. திருமணம் செய்வதாக இருந்தால் சுமதியை மட்டும்தான் என்று பிடிவாதம் பிடித்து நின்றான். சுமதியின் பெற்றோர் வேறு இடத்தில் மணமகனைப் பார்த்து சுமதிக்குத் திருமணமும் செய்து வைத்தார்கள்.

மாதங்கள் சில கழிந்தன. சுமதியின் கணவன் ரமேஸுக்கும் அரவிந்தின் காதல் சம்பவங்கள் தெரிய வந்தது. அடிக்கடி அரவிந்தைச் சொல்லிக் குத்திக் காட்டுவான். அரவிந்துக்கு அவ்வூர்ப் பாடசாலையில் ஆசிரியராக வேலை கிடைத்தது. பெற்றோர் தங்கள் ஒரே மகன் பிரமச்சாரியாகவே வாழ்வதை நினைத்து நினைத்து வருத்தப்பட்டார்கள். அரவிந்தைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை. மௌனமாகவே இருப்பான்.

ஒரு நாள் ரமேஸ் சுமதியைத் தன் சினேகிதன் வீட்டுக்குத் தன்னுடன் வரும்படி கேட்டான். சுமதி "தான் வரவில்லை, இன்னுமொருநாள் வருவதாகச் சொல்ல"

"நான் கூப்பிட்டால் வரமாட்டாய் அரவிந் வந்து கூப்பிட்டால் மட்டும் போய்விடுவாயோ" என்று சொல்லித் திட்டிவிட்டுப் போய் விட்டான். சுமதி நினைத்து நினைத்து அழுதாள். நிரந்தரமாகவே அழுவதற்கு செய்தியும் வந்தது. ரமேஸ் வீதியில் லாரியோடு மோதி இறந்துவிட்டதாக அழுதாள். ரமேஸுக்காக மட்டுமல்ல தன் வாழ்க்கையையே நினைத்து அழுதாள்.

ஓர் ஆண்டு கழிந்தது. சுமதி பெற்றோர் வீட்டில் இருக்கும்போது ஒரு நாள் அரவிந் வந்தான். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன் ஆசைக் காதலனைக் கண்ட மகிழ்ச்சி அவளுக்கு. ஆனால் வெளியில் சொல்ல முடியவில்லை. அரவிந் தன்னைத் திருமணம் செய்யும்படி சுமதியிடம் கெஞ்சினான். அவள் மறுத்து விட,

"இங்கே பார் சுமதி, இனியும் நீ என்னைப் பார்க்க மாட்டாய். இது சத்தியம். ஊர் உலகம் என்ன சொல்லும் என்று பயப்படாதே. உன் மனதில் இப்பவும் நீ என் மீது வைத்திருந்த அன்பு இருக்கு. நீ வந்தால் போதும். எனக்கு வேறு எதுவும் யார் சொன்னாலும் அது தேவையில்லை." என்றான்.

அரவிந்தின் பெற்றோரின்

**செல்வி.என்.சுஜாதா,**
**யாழ்ப்பாணம்.**


விருப்பத்தின் பேரிலும் சுமதியின் பெற்றோரின் விருப்பத்தாலும் அரவிந்தைத் திருமணம் செய்தாள் சுமதி. அரவிந் தன் சுமதி காதலுடன் தனக்கு கிடைத்ததை நினைத்துச் சந்தோசப்பட்டான்.

"சுமதி"

"சுமதி! என்னம்மா தனியே இருந்து" என்ற அரவிந்தின் மென்மையான குரல் கேட்டு நினைவுகளில் இருந்து மீண்டாள் சுமதி.

# பொறியில் சிக்கிய 'கர்வம்'

**முதலில் ஒரு பொய். அதனை மூடி மறைக்க மற்றொரு பொய். முடியாத நிலையில் சம்பவங்களை மக்களிடமிருந்து திசைதிருப்ப வேறு வகையான நகர்வுகள். யுத்த காலத்தில் தனது செல்லப் பிள்ளையாகச் செயற்பட்ட பி.பி.சி. போன்ற செய்தி நிறுவனங்களுடன் செயற்கைத்தனமான மோதல்கள் என்று பிரதமர் அலுவலகம் இடியப்பச் சிக்கலில் மாட்டியிருக்கிறது.**




யுத்தம் நடத்துவதை விட யுத்தத்திற்குப் பின்னர் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதுதான் கஷ்டமான காரியம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் டொனிபிளேயரும் உணர்ந்திருப்பார்கள்.

தடாலடியாக ஈராக்கை ஆக்கிரமித்தாலும் இத்தனை சுலபத்தில் ஈராக் இரு தலைவர்களுக்கும் மாபெரும் தலைவலியாக மாறும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

வெவ்வேறு பிரச்சினைகள்.

இறங்கிக்கொண்டிருக்கிறது என்று கருத்துக் கணிப்புக்கள் சொல்லிக்கொண்டிருக்க அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஆட்சிக்கு வருவது கேள்விக்குறியாகி இருக்கிறது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள் வெறுத்துப் போயிருக்கின்றன. எதற்காக இந்த யுத்தம் என்று போதிய தெளிவில்லாமலே களத்தில் இறக்கிவிடப்பட்டவர்களுக்கு விரைவில் வீடு திரும்பலாம் என்றிருந்த ஒரே ஆறுதலும் இல்லாமல் போனது. ஈராக்கில் கெரில்லாப் பாணியிலான தாக்குதல்கள்



ஈராக் மற்றொரு வியட்னாமாக மாறிக்கொண்டிருக்கிறது. தினசரி அதிகரிக்கும் கெரில்லாத் தாக்குதல்கள் அமெரிக்காவில் மோசமான உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளன. புஷ்ஷுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவு கிடுகிடுவென

அதிகரித்துள்ளதால் அமெரிக்கப் படைகள் அங்கே காலவரையறையின்றித் தங்கியிருக்க வேண்டி வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமது எதிர்பார்ப்புகள் சிதைந்து போன நிலையில் படையினர் மனமுடைந்து காணப்படுகிறார்கள். யுத்தத்திற்காகக் கூறப்பட்ட பிரதான காரணமான இரசாயன ஆயுதப் பொய்யை நிரூபிக்க வழியில்லாமல், நாட்டு மக்கள் முன்பாக தனது நாணயத்தை இழந்து நிற்கும் புஷ், ஈராக்கில் கொல்லப்படும் ஒவ்வொரு படைவீரரின் மரணத்தின்போதும் சொந்த நாட்டில் அழுத்தங்களுக்கு உள்ளாகிறார்.

பிரிட்டனில் டொனிபிளேயரின் நிலை இதை விடச் சிக்கலாக இருக்கிறது. அவர் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை வரும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. ஈராக்கைத் தாக்குவதற்கு உளவுத்துறைத் தகவல்களை மிகைப்படுத்தி, போலியான காரணங்களைச் சோடித்து, மக்களைப் பிழையான வழியில் இட்டுச் சென்றார் என்று பிளேயர் மீது கடும் கோபம் திரும்பியிருக்கிறது. போதாக்குறைக்கு பிளேயரின் இந்த வண்டவாளத்தை பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு வெளியிட்ட அந்த நாட்டின் பிரபல ஆயுத நிபுணர் டேவிட்கெலி தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்பட்டு சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார். இது டொனிபிளேயருக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

முதலில் ஒரு பொய். அதனை மூடி மறைக்க மற்றொரு பொய். முடியாத நிலையில் சம்பவங்களை மக்களிடமிருந்து திசைதிருப்ப வேறு வகையான நகர்வுகள். யுத்த காலத்தில் தனது செல்லப் பிள்ளையாகச் செயற்பட்ட பி.பி.சி. போன்ற செய்தி நிறுவனங்களுடன் செயற்கைத்தனமான மோதல்கள் என்று பிரதமர் அலுவலகம் இடியப்பச் சிக்கலில் மாட்டியிருக்கிறது. இப்போது அடுத்த மீட்சியை எவ்வாறு அடைவது என்று யோசிக்க அமெரிக்காவில் ஜனாதிபதி புஷ்ஷைச் சந்தித்துத் திரும்பியிருக்கிறார் பிளேயர். மிக விரைவில் எல்லாவற்றையும் வேறெங்கேனும் திசை திருப்பும் மற்றொரு பெரும் பொய்யை எதிர்பார்க்கலாம்.

---

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)

## 22 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

### தந்தை செல்வாவின் கவலை

தமிழரசுக் கட்சி முன்வைத்த இலங்கைக்கான நகல் அரசியல் வரைவு மத்திய அரசுக்குரிய அதிகாரங்களைக் குறிப்பிட்டுக் காட்டிவிட்டு, ஏனைய விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் யாவும் மாநில அரசுக்கானது என்று வரையறை செய்தது. இவ்வகையில் சர்வதேச விவகாரங்கள், பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, பொலிஸ் விவகாரங்கள், குடியுரிமை, குடிவரவு மற்றும் குடியகல்வு, சுங்கம், அஞ்சல், தொலைத் தொடர்பு, துறைமுகங்கள், கடல் மற்றும் விமான, புகையிரத போக்குவரத்து, நீர்ப்பாசனம், அளவை, கல்வி, சுகாதாரம், கூட்டுறவு போன்ற துறைகளில் தேசியக் கொள்கை வகுத்தல் என்பன மத்திய அரசின் பொறுப்பாக தமிழரசுக் கட்சி அடையாளப்படுத்தியது.

1964ன் சிறிமாவோ– சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர் இந்தியாவுக்குத் திரும்பாத அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்கப்படுவது குறித்து இரண்டாவது அங்கம் விபரித்தது. மூன்றாவது அங்கம் சட்ட ரீதியாக அடிப்படை மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்துவது குறித்துப் பேசியது. அங்கம் நான்கில் நீதிமன்ற மொழி பற்றிக் குறிப்பிடப்பட்டு, வடக்கு – கிழக்கு மாகாணத்திலுள்ள நீதிமன்றங்கள் தத்தம் நடவடிக்கைகளை தமிழ் மொழியிலேயே மேற்கொள்வது பற்றிக் குறிப்பிட்டது. தாய்மொழியிலேயே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்பதை ஐந்தாவது அங்கம் வற்புறுத்தியது. ஆறாவது அங்கத்தில் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்த இலக்குகளும், ஏழாவது அங்கத்தில் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அரசியலமைப்பு வரைபுக்கான வழிகாட்டும் குழுவும் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விவாதிக்கும் குழுக்களும் 1971 ஜனவரி 4ம் திகதி முதல் ஒழுங்காகக் கூடியது. இலங்கையை ஒரு சுதந்திரமான சோசலிச ஜனநாயகக் குடியரசாக மாற்றிக்கொள்வதான முதலாவது தீர்மானம் எந்த வித பிசகுமின்றி நிறைவேறியது. இலங்கையின் பெயர் சிறிலங்கா என்று மாற்றம் பெறுவதையும் தமிழரசுக் கட்சி எதிர்க்கவில்லை.ஆனால் சிறிலங்கா குடியரசு ஒற்றையாட்சித் தன்மை கொண்டதாக இருக்கும் என்னும் அம்சத்தை தமிழரசுக் கட்சி வன்மையாக எதிர்த்தது.

1971 மார்ச் 16ம் திகதியன்று இது தொடர்பாக ஒரு திருத்தத்தை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் "மத சார்பற்ற சமஷ்டிக் குடியரசு" என்று சிறிலங்கா வரையறை செய்யப்பட வேண்டுமெனக் கோரினார். அவர் மேலும் குறிப்பிடுகையில், சமஷ்டிக் குடியரசாக அரசியலமைப்பை மாற்றுவதற்கான மக்களின் ஆணை பெறப்படவில்லை எனக் கருதினால், நிர்வாகத்தில் அதிகாரப் பரவலாக்கம் குறித்துத் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அவசிய



மென வாதிட்டார். அத்துடன் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சமஷ்டிக் கொள்கையை 1929ம் ஆண்டிலேயே வெளியிட்டவர் எனவும் குறிப்பிட்டார். தமிழரசுக் கட்சியின் திருத்தங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாமலேயே மார்ச் 1971ல் அரசியலமைப்பின் நகல் வரைவு குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழரசுக் கட்சியின் சார்பாக முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமை காரணமாக இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஒரு வித அதிருப்தியும், பலத்த மனக்குறையும் காணப்பட்டது.


இந்த நிலையில் 1971 ஏப்ரல் 5ல் நாடளாவிய ரீதியில் அரசுக்கு எதிரான ஆயுத ரீதியிலான எதிர்ப்பொன்று வெடித்தது. நாடெங்கும் இருந்த பல்வேறு பொலிஸ் நிலையங்கள் ஏறத்தாழ ஒரே நேரத்தில் தாக்கப்பட்டன. பொலிஸ் சேவைகள் சீர்குலைக்கப்பட்டு பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. பல பொலிஸ் நிலையங்கள் கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. திடீரென ஏற்பட்ட இக் கிளர்ச்சியை மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பியினரே மேற்கொண்டனர். பொலிஸ் நிர்வாகத்தைச் சீர்குலைத்து அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைச் சிறைப்பிடித்து ஆட்சியைக் கைப்பற்றுவதே இவர்களது நோக்கமாக இருந்தது. இக் கிளர்ச்சியை முறியடிக்கும் முகமாக அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தது. முப்படையினரையும் சேவைக்கு அழைத்தது. இந்திய அரசின் உதவியையும் நாடியது. கிளர்ச்சிக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு பல நூற்றுக்கணக்கானவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். தென்னிலங்கையெங்கும் இக் கிளர்ச்சியின் வீச்சுக்கள் பரவியிருந்த போதும் தமிழர் பிரதேசங்களான வடக்கு–கிழக்கு மாகாணத்தில் மக்கள் விடுதலை முன்னணியினரால் பலத்த தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. கியூபாவின் புரட்சித் தலைவர் சேகுவேராவை முன்மாதிரியாகக் கொண்டிருந்தார்கள் என்பதால் சேகுவேரா இயக்கம் எனவும் இது அழைக்கப்பட்டது. இக் கிளர்ச்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர் ரோகண விஜயவீர. இவர் ரஷ்யாவின் லுமும்பா பல்கலைக்கழக பட்டதாரி மாணவராக இருந்தவர். இக் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டு இதன் முக்கிய தலைவர்களில் பலரும் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

இந்தச் சூழலில் அரசியலமைப்பு சபையின் செயற்பாடுகளில் பங்குபெறுவது தொடர்பாக மதிப்பீடுகளை மேற்கொள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழு 1971 ஜூன் 15ல் யாழ்ப்பாணத்தில் கூடியது. அரசியலமைப்புச் சபையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அங்கம் வகிப்பது தேவையானதா என்பது குறித்து விவாதங்கள் இடம்பெற்றது. இளைஞர்களாக இருந்த பலரும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்வதைப் பற்றிப் பேசினர். ஆனால் சா.ஜே.வே. செல்வநாயகம் அதனை விரும்பவில்லை. பொதுக் குழு தீர்மானம் எதையும் மேற்கொள்வதை ஜூன் 21ம் திகதி வரை ஒத்திவைத்தது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

(தொடர்ந்து வரும்....)

# நெஞ்சினில் என்ன காயமோ...?



உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன் வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

## அச்ச நோய்கள் (PHOBIC ANXIETY DISORDERS)

அச்சம் என்கின்ற உணர்வினைப் பதற்றத்தின் அடுத்த நிலையாகக் கருத முடியும். அச்ச உணர்வு மனித வாழ்வின் ஒரு பாதுகாப்பு அம்சமாகும். இந்த உணர்வு தீங்கு விளைவிக்கும் உயிரினங்களிலிருந்தும், ஆபத்தான சந்தர்ப்பங்களிலிருந்தும் மனிதனைப் பாதுகாப்பதுடன் அவ் வகையான சந்தர்ப்பங்களிலும், மற்றும் ஆபத்தான பொருட்களைக் கையாளும் போதும் கவனமாக இருக்க உதவி செய்கின்றது. விஷப் பாம்பைக் கண்ட இருவர் ஓட முனைவதும், தீவிபத்து ஒன்றிலிருந்து தப்ப முனைவதும், பலத்த மழையின்போது இடி, மின்னலில் இருந்து முற்காத்துக்கொள்ள எண்ணுவதும் அச்சத்தின் வெளிப்பாடுகளே. இப்படியான சந்தர்ப்பங்களில் இந்த அச்சமும் நன்மை பயக்கக் கூடியது. இயற்கையானது. மற்றவர்களால் புரிந்துகொள்ளக் கூடியது.

### அச்சம் எப்போது நோயாக மாறுகின்றது?

ஒரு பொருளையோ அல்லது ஒரு சந்தர்ப்பத்தையோ பற்றிய அச்சமானது அந்தப் பொருளினதோ அல்லது சந்தர்ப்பத்தினதோ தீங்கு விளைவிக்கும் தன்மைக்குப் பொருந்தாதவிடத்தில் அல்லது மிகையாக ஏற்படின் அச்ச நோய் ஏற்பட்டுள்ளது எனலாம்.

### அச்ச நோயின் அறிகுறிகள் யாவை?

அச்ச நோயின்போதும் பதற்ற நோய்களில் ஏற்படும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரம், அதாவது குறித்த ஒரு பொருளையோ, உயிரினத்தையோ காணும்போது அல்லது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பமொன்றை எதிர்கொள்ளும்போது ஏற்படுகின்றது. இந்த அதிகரித்த அச்ச உணர்வு காரணமாக நோயாளிகள் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களைத் தவிர்க்கின்றார்கள். இவ்வாறு தவிர்க்கத் தவிர்க்க அச்ச உணர்வு மேலும் தீவிரமடைகின்றது.

காலப்போக்கில் மற்றவர்கள் இப்படியான பொருட்களைப் பற்றியோ சந்தர்ப்பங்களைப் பற்றியோ உரையாடும் போது அதிக அச்சத்துக்கு உள்ளாகின்றார்கள்.

### அச்ச நோயின் வகைகள் யாவை?

அச்ச நோய்கள் பிரதானமாக மூன்று வகைகளுக்குள் அடக்கலாம்.

(அ) சமூக அச்ச நோய் (SOCIAL PHOBIA)

(ஆ) வெளியிட அச்ச நோய் (AGORAPHOBIA)

(இ) தன் அச்ச நோய். (SIMPLE PHOBIA)

## உள மருத்துவம்

### சமூக அச்ச நோய் (SOCIAL PHOBIA)

பாமினி 22 வயதுடைய தனியார் நிறுவனமொன்றில் தட்டெழுத்தாளராக வேலை பார்க்கின்ற ஒருவர். அண்மையில் இவரது தகைமை காரணமாக நிறுவனத்தின் பணிப்பாளரின் பிரத்தியேக செயலாளராக இவருக்குப் பதவி உயர்வு கிடைத்தது. இது குறித்து மகிழ்ச்சியடைந்தபோதிலும் புதிய பொறுப்புகள் காரணமாக அவரின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. சிறு வயது முதலே சமூக நிகழ்வுகளுக்கு முகங்கொடுப்பதில் சிரமப்பட்டிருந்தமை அவருடன் நடந்த உரையாடலில் இருந்து தெளிவுபடுத்தப்பட்டது. புதிய ஒருவரைச் சந்திக்கும்போது பாமினி தனது இருதயம் பலமாகத் துடிப்பதாக உணர்ந்தார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவருக்கு வியர்த்துக் கொட்டும். ஒரு வகையான பதற்ற நிலைமை அவரை ஆட்கொள்ளும். மேலும் தான் இப்படியான சமூக நிகழ்வுகளின்போது முட்டாள்தனமாக எதையாவது உளறிவிடுவாரோ எனவும், பாரிய சமூகத் தவறை இழைத்துவிடுவாரோ என்றும் பயப்படுவது அவரின் நாளாந்த வாழ்க்கையின் ஒரு அங்கமாகியது. பாமினி இயலுமான வரை சமூக நிகழ்வுகளை, ஒன்றுகூடல்களை, கூட்டங்களுக்குச் செல்லுவதை தவிர்த்து வந்தார். ஆனால் இவ்வாறு தொடர்ந்து தவிர்க்க முடியாது அவரது புதிய பொறுப்புக்கள் தடுத்தன. அடிக்கடி சமூகமளிக்க வேண்டிய, மற்றையவர்களுடன் உரையாட வேண்டிய, கூட்ட நிகழ்வுகளைச் சுருக்கெழுத்தில் குறித்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவரது பதற்ற நிலை காரணமாக எல்லாவற்றையும் சுருக்கெழுத்தில் குறித்திட இயலாது போனது. அது அவரது அச்சத்தை அதிகரித்தது மாத்திரமல்ல தன்னம்பிக்கையையும் குறைத்தது. வேலைக்குச் செல்வது ஒரு பழுவாகத் தோன்றியது. இந்தப் பதற்ற நிலை மேலும் மேலும் அதிகரித்ததாலும், அது அவரின் செயற்றிறனைப் பாதித்ததாலும் நண்பி ஒருவரின் ஆலோசனைப்படி உளமருத்துவத் துறையின் உதவியை நாடினார்.

இது சமூக அச்ச நோயால் பாதிக்கப்பட்ட ஒரு இளம் யுவதியின் சரிதமாகும்.

### சமூக அச்சமும் வெட்கமும் (SHYNESS) எவ்விதங்களில் வேறுபடுகின்றது?

பொதுவாக ஒருவர் சமூகத்துக்கு முகங்கொடுக்கத் தயக்கத்தைக் காட்டும்போது அவர் வெட்க உணர்வு மிக்கவராக மற்றவர்களால் கணிக்கப்படுகின்றார். இந்த வெட்க உணர்வு பெண்களின் இயற்கை இயல்பாக எம் கலாசாரத்தில் கருதப்படுகின்றது. இந்த வெட்க உணர்வை சமூக அச்ச நோயாகக் கருதுவது தவறானது.

சமூக அச்ச நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர் தன்னைப் பற்றி, தனது நடை, உடை, பாவனை பற்றி மற்றவர்களின் விமர்சனத்துக்கு ஆளாகின்றோம் என்ற அச்சத்தைக் கொண்டிருப்பார்கள். இந்த அச்சம் காரணமாக இப்படியான சந்தர்ப்பங்களைத் தவிர்க்க முயலுவார்கள். இல்லையேல் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் முகங்கொடுத்துவிட்டு அந்த நிகழ்விலிருந்து விரைவில் வெளியேறிவிடுவார்கள். இந்தச் சமூக நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்கும்போது இவர்கள் தங்கள் முகம், கன்னம் சிவந்து போவதையும், உடலில் நடுக்கம் ஏற்படுவதையும், கதைப்பதில் தடுமாற்றம் ஏற்படுவதையும் உணர்வார்கள். இந்த அறிகுறிகள் மற்றவர்களால் அவதானிக்கப்படக் கூடியவை. ஆதலால் அவர்களின் அச்சம் மேலும் மேலும் அதிகரிக்கின்றது.

### சமூக அச்ச நோய் உள்ளவர்கள் எப்படியான சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள்?

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒன்றோ பலவோ இவர்கட்குப் பிரச்சினைக்குரியதாக, அச்சத்தை ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகின்றன.

1. மற்றையவர்களின் முன் எழுந்து நின்று பேசுதல்.
2. கூட்டமொன்றில் கேள்விகளைக் கேட்டல்.
3. மற்றையவர்களின் முன் உணவு அருந்துதல்.
4. மற்றையவர்களின் முன் எழுதுதல்-சிலருக்குக் கையொப்பமிடுவதே பிரச்சினையாகிவிடுகின்றது.
5. சமூக நிகழ்வுகளில் -திருமணம், களியாட்ட விழாக்கள், விருந்து, ஒன்றுகூடல்கள்-கலந்து கொள்வது.

### சமூக அச்ச நோய் எந்தளவுக்குப் பொதுவானது?

உலக சனத்தொகையின் ஏறத்தாழ 3-4 வீதமான மக்கள் சமூக அச்ச நோய்க்கு உட்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மற்றைய பதற்ற நோய்களைப் போலன்றி ஆண்களும், பெண்களும் சம அளவில் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

### சமூக அச்ச நோய்க்கான சிகிச்சை முறைகள் யாவை?

1. நடத்தை மாற்றுச் சிகிச்சை முறை :

நோயாளி தான் அச்சப்படுகின்றன பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க சிறிது சிறிதாகப் பயிற்றுவிக்கப்படுகின்றார்.

2. மருந்துகள் :

மிதமிஞ்சிய பதற்ற நிலையினைத் தணிக்க உதவும்

3. சாந்த வழிமுறைகள்

4. குழுச் சிகிச்சை முறை (GROUP THERAST)

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.26க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

த.நாகையா, 107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு-01, கல்முனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. கே.எம்.எம்.கலீல், புதிய நகரம், ஹொறம்பாவ.
2. செல்வி. மலர்விழி ஜேசுதாசன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.
3. ஸ்ரீமதி எம்.சிறிகந்ததாஸ், கொழும்பு - 13
4. ஆர்.நிஷானி, மாணிக்கவத்த, ஹட்டன்.
5. திரு.வி.ஜனார்த்தனன், டிக்மன்ஸ் வீதி, கொழும்பு - 05.
6. சு.சபேசன், நியூ றோட், மட்டக்களப்பு.
7. இ.எ.சௌமியா, திருமலை வீதி, மட்டக்களப்பு.
8. செல்வி.சு.உமா, நர்சிங்ஹோம் றோட், ஹட்டன்.
9. திருமதி.தா.ராணி, பார்க்ரோவ்கொலனி, சாமிமலை.
10. ஜோதிலஷ்மி கனகசபை, மொல்லிகொட லேன், கம்பளை.

## குறுக்கெழுத்துப் போட்டி 28

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | ■ | 7 |
| 8 | 9 | ■ | 10 | 11 |
| 12 | ■ | 13 | 14 | ■ |
| 15 | 16 | 17 | 18 | ■ |
| 19 | ■ | 20 | 21 | 22 |

**இடமிருந்து வலம்**

1. ஒரு மூலிகை. பெண்கள் இதன் இலையை அரைத்து கைகளையும் கால்களையும் அலங்காரம் செய்கிறார்கள்.
8. மறி என்பதன் எதிர்ப்பால் சொல்.
10. மேல் வீடு (திரும்பியுள்ளது)
13. உயிர் (திரும்பியுள்ளது)
15. இறுதியாக இந்திய - பாகிஸ்தான் போர் மூண்ட இடம்.
20. யானை (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஆபிரிக்க கண்டத்தின் அருகிலுள்ள பெரிய தீவு.
3. இது பெண்களுக்கு வேலி என்று கூறப்படுகிறது.
7. ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு இதைக் கண்டாலே அரசியல்வாதிகள் பயந்தார்கள். (தலைகீழாக உள்ளது)
10. ஆடி மாதத்தில் கொழும்பு நகரத்தில் சிறப்பாக நிகழ்த்தப்படும் முருகன் திருவிழா. (குழம்பியுள்ளது)
13. மூதாட்டி (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 26 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 த | 2 ற் | 3 கொ | 4 லை | ■ |
| 5 லை | ■ | 6 மூ | 7 லி | 8 தூ |
| 9 ம | 10 தை | 11 ந் | ■ | 12 ன் |
| 13 ன் | ■ | 14 து | 15 ம் | 16 பி |
| 17 னா | 18 மை | ■ | ■ | 19 ய |
| 20 ர் | ■ | 21 பு | 22 ய | 23 ல் |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 30.07.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;


**குறுக்கெழுத்துப் போட்டி இல-28**

**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

# நீங்களும் படிக்கலாம்! மாற்றுக் குரல்கள்



தருவது - ஆச்சர்சா

# கனடாவில் தமிழ் வானொலியில் அன்று கேட்டது!

கடந்த வாரம் கனடா தமிழ் வானொலியில் நடைபெற்ற "சமாதான காலத்தில் தாயகத்திற்குத் திரும்புதல்" என்ற நிகழ்ச்சியில் பங்கு பற்றிய நேயர்களின் கருத்துக் களைக் கண்டோம்! நமக்கு ஆச் சரியம் தந்த செய்தி. இந் நிகழ்ச்சி யில் பங்கு பற்றிய யாரும் "தாயகத் துக்குத் திரும்பிப் போக விரும்பு கிறோம்" என்று சொல்லவில்லை என்பதுதான், இந்த ஆச்சரியத்திற் குக் காரணம்.

ஆனால் 2001 ஆம் ஆண்டு இதே வானொலியில் "சமாதானம் வந்தால் ஊருக்குப் போவீர்களோ" என்ற கேள்விகளுக்கு முண்டி யடித்து வந்த பதில்கள் ஏன் இந்த 2003ம் ஆண்டில் காணோம்?

Flash Back என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு நினைவூட்டுகை என் கிற பதமே சாலப் பொருந்தும். இனி வரும் பகுதி மறந்துவிட்ட, மறக்க விரும்புகின்ற, மறந்தது போல் பாசாங்கு செய்கின்றவர்களுக்கு நினைவூட்டல்....

காலம் - மதியம் 1.30

திகதி - 18 ஆனி 2001

இடம் - அதே மார்க்காப் பட்ட ணம், அதே வானொலி

"வானலையில் யாரோ"

"உது நான் வேலாயுதம்"

"ம் சொல்லுங்கய்யா! உங்கள் கருத்தை மற்ற நேயர்களும் கேட் கட்டும்."

"என்னதான் சொகுசான வாழ்க் கையெண்டாலும் எங்கட யாழ்ப்



பாணம் மாதிரி வராதல்லோ. சமா தானமே இல்லாட்டியும் ஒரு தற் காலிக அமைதி கிடைச்சிட்டு தெண்டு கேள்விப்பட்ட உடனேயே ஊருக்குப் போற முதல் ஆள் நானாகத்தான் இருக்கும். என்ன தான் விதம் விதமாய் வாங்கி குடிச் சாலும் பிளாவில கள்ளுக் குடிச்ச மாதிரி வருமே கேக்கிறன். அப்பு... அதின்ர உருசையே தனி. இந்தக் கட்டை என்ர மண்ணில தான் வேக வேணும்."

"நன்றிகள் ஐயா! நன்றிகள். அடுத்த நேயரை நாம் சந்திக்கப் போகிறோம். எமது கலந்துரையாட லின் தலைப்பு "மண்ணின் நினைவு கள்". என்னதான் நாம் கனடாவில் சொகுசாகவும் பகட்டாகவும் மாட மாளிகையிலும் கூட கோபுரத்திலும் வாழ்ந்தாலும் எமது மண்ணின் மணம் எமது மூக்கை அரித்துக் கொண்டே இருக்கிறது. அந்தச் செம்பாட்டு மண், அந்தப் பூவரச மரம், அந்தக் கிழுவை மர வேலி, அந்தப் பனைமரம் ம்ம்....எங்கே? இந்தக் கனேடிய மண்ணில் இவை நமக்குக் கிடைக்கவே இல்லை. மீண்டும் நாம் இவைகளைப் பார்க்க இவற்றை நேசிக்க எமது யாழ் மண்ணை மிதிக்கும் காலம் வருமா? நாம் விட்டு வந்த வாழ்வை மீளவும் தொடர்வோமா? வானலைக்கு வாருங்கள். வானலையில் யாரோ?"

"நான் ஸ்காபுரவிலிருந்து. வர தன் சத்தியசீலன்"

"ம்... எங்கடா ஆளைக் காணோம் என நினைத்தேன். சொல்லுங்கள் வரதன். உங்களுக்கு மீண்டும் வேண்டுமா அந்தப் பூவரசு? அந்தச் செம்பாட்டு மண், அந்தப் பனை மரம்? சொல்லுங்கள் வரதன்."

"எங்கட ஊர் மாதிரி ஒரு ஊரை இந்த உலகத்தில எங்குமே பார்க்க முடியாது! ஊர்ல சம்பலும் சோறும் இருந்தாலே போதும்...இந்த ஹம் பேக்கர், பிட்சா எல்லாம் ஒரு சாப் பாடே! ஊரில சாறத்தைக் கட்டிக் கொண்டு கோயிலடியில போய் நிக் கேக்க வந்த சந்தோசம் இருக்கே. அப்பூ...உந்த வெள்ளையற்ற கல்ச் சர் எல்லாம் ஒரு கல்ச்சறே. எல் லோரும் ஊருக்குப் போகத்தான் விருப்பம். என்ர ரெண்டு பிள்ளை யளும் இங்கதான் பிறந்தவ. நான் சாரத்தை கட்டிக்கொண்டு சந்திக் கடைக்குப் போகாம சாகமாட்டன்."

"நன்றிகள் வரதன் நன்றிகள். யாருக்குத்தான் அந்த ஆசை இல் லாமல் இருக்கும். குளிரே இங்கு தாங்க முடியல்ல. அடுத்து வான லையில் யாரோ?"

"கலோ"

"ம் செல்வமணி அம்மா!"

"கண்டுபிடிச்சிட்டியள்"

நீங்களும் இல்லாமல் ஒரு கலந் துரையாடல்லே? சொல்லுங்கள்..... நாம் இன்னும் எவ்வளவு காலம் தான் அடுத்தவன் மண்ணில காலம் தள்ளுவது? கூழோ கஞ்சியோ உங் கள் நினைவுகளைச் சொல்லுங் கள்....."

"இஞ்சையுந்தான் கோயில் கோயிலாக் கட்டுறாங்கள். எங்கட ஊரில இருக்கிற மாதிரி ஒரு கோயில இங்க பார்க்கலாமே....நீர் வேணுமெண்டாப் பாரும் வைத்தீஸ் வரன் கோயிலிலேதான் என்ர கட்ட வீடும். நான் தனியாளாக வெண்டா லும் ஊருக்குப் போகத்தான் போறன்."

"நன்றிகள் அம்மா. நன்றிகள். அடுத்த நேயரைச் சந்திப்போம்"

"நான் மொன்றியல்ல இருந்து திருமதி நித்தியா ஜெயரூபன்"

"ம் வணக்கம். வானலைக்குப் புதிய நேயர். அப்படித்தானே?"

"ஓம் ஓம். முதல் ஒருக்கா ரெண்டு வருஷத் திற்கு முந்தி வந்தனான்....."

"ம் சொல்லுங்கோ"

"உங்கட தலைப்பு ஒரு அருமையான தலைப்பு. பெற்ற தாயையும் மறக்கலாம். பிறந்த ஊரை மறக்கலாமோ? தாயைப் பழிச்சாலும் தாய் மண் ணைப் பழிக்கலாமோ? ஏனெண்டா தாய் எங்கள ஒன்பது மாதம்தான் சுமக்கிறாள். ஆனா எங்கட தாய் மண் சாகும் வரைக்கும் சுமக்குது...."

"நிகழ்ச்சி எப்படி இருந்தது.

அந்த நிகழ்ச்சியைக் கேட்டு எனக்கும் எனது மண்ணின் நினைவுகள் வந்து தொலைத்தது. நானும் ஒருக்கா தொடர்புகொண்டு பேசலாம் என எண்ணினேன். அதற்கிடையில நிகழ்ச்சி முடிந்து போய்விட்டது. ஆனால் பாருங்கோ இப்போது யாரும் தாயகத்திற்கு நிரந்தரமாய் திரும்பிப் போவதற்கு வாயே திறக்கிறார்களில்லை... ஒரு வேளை எல்லோருக்கும் சமாதானம் வந்திடும் என்பதில் நம்பிக்கை வரவில்லையோ....."

**உபயம் - எக்ஸில் சக்கரவர்த்தி**

# நீலா என்ற ஓவியர்



**தா**ன் வரைந்த ஓவியங்களைத் தனது அந்தரங்க சிநேகிதிகளாகவே கருதி வருவதாகக் கூறுகிறார் இந்தியாவின் மிகப் பெரும் ஓவியக் கலைஞரான நீலா. ஓவியங்களைத் தீட்டும்போது மடியிலேயே கிடத்தி வைத்து தீட்டி வருவராம் இவர். ஒரு குழந்தையை எப்படி மடியில் தூக்கி வைத்து ஒரு தாய் வளர்ப்பாளோ அதே போல்தான் ஓவியங்களும் இவரது மடியில் தவழ்ந்து உயிர் பெறுமாம்.

ஒரு தாமரைப் பூவை வரையும்போதும் கூட எதற்காக அத் தாமரைப் பூவை வரைகிறேன், அந்த வண்ணத்தை எதற்காகச் சேர்க்கிறேன் என ஓவியர்களுடன் பேசிப் பேசி வரைவது இவரது இயல்பாகிவிட்டதாம். அந்த ஓவியங்களை விட்டுப் பிரியும் நேரம் வந்துவிட்டால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது அழுது கொண்டிருப்பாராம் நீலா. "ஓவியங்களை விற்பது மகளைத் திருமணம் செய்து அனுப்புவதைக் காட்டிலும் மிகவும் துக்ககரமானது" என்கிறார் நீலா. நீலாவின் ஓவியங்கள் இதனால்தான் உயிர் பெற்று கலை அழகுடன் எழுந்து நிற்கிறது என்கின்றார்கள் ஓவியர்கள்.

# எழுத்தாளர்களின் வாழ்க்கை

## மூன்று விவரணத் திரைப்படங்கள்....



**த**மிழ் சினிமா பெருமளவு அலுப்புத்தட்டத் தொடங்கிவிட்டது என்கிற குற்றச்சாட்டுகள் பரவலாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது. அரைத்த மாவைத் தொடர்ந்தும் அரைக்கிற மாதிரியே சில சில மாற்றங்களுடன் மீண்டும் மீண்டும் தமிழ்ச் சினிமா ஒரே பாதையில்.....

இந் நிலையில் இப்போது மூன்று முக்கிய தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய விவரணத் திரைப்படம் வெளிவந்திருக்கிறது. ஜெயகாந்தன், அசோகமித்திரன். இந்திரா பார்த்தசாரதி. இவர்களுடைய எழுத்தை வாசித்த நமக்கு இப்போது இவர்களுடைய வாழ்வின் ஒரு சில பகுதிகளைத் திரைக் காட்சிகளாகக் காணச் சந்தர்ப்பம் கிட்டி உள்ளது.

'முத்தக் காட்சிகள்', 'கட்டிப் புரண்டு டுயட் பாடும்' கனவுக் காட்சிகள் நூற்றுக் கணக்கான வில்லன்களைத் தனது சுட்டு விரலால் சமாளிக்கும் கதாநாயகத்தனம், கதாநாயகிகளின் கண்ணீர்க் கதைகள் எதுவுமே இல்லாமல் தமிழில் சினிமா சாத்தியமா? என்று யாராவது கேட்டால் "அது சாத்தியமில்லைதான்" என்று பதில் சொல்லக்கூடும்.

இந்த மூன்று எழுத்தாளர்களைப் பற்றிய விவரணத் திரைப் படங்கள் ஓரளவு இவர்களின் வாழ்க்கையை நாம் தரிசிக்க உதவுகிறது. ஆனாலும் ஜெயகாந்தனின் எழுத்தில் உள்ள உபதேசங்கள் போல்.....இவ் விவரணத் திரைப் படத்திலும் ஜெயகாந்தன் உபதேசிக்கத் தொடங்கி இருப்பது சற்று அலுப்பூட்டுகிறது. மற்றப்படி ஆர்வ முள்ளோர் தேடிப் பார்க்க வேண்டிய வண்ணத் திரைப் படங்கள் இவை.

# என்றும் இனியவை

## பி.ஸ்ரீனிவாஸின் பாடல்கள்

**கா**லத்தால் வெல்ல முடியாதவை ஒரு சிலதுதான். காலத்தால் சிதைபவை ஆயிரம். இன்றும் இனிமையாக இருப்பவை பி.ஸ்ரீனிவாஸின் திரையிசைப் பாடல்கள். இந்த விஞ்ஞான தொழில் நுட்ப, மேற்கு இசை உலகில் கூட பி.ஸ்ரீனிவாஸின் பாடல்கள் காலத்தால் அழியாததாக எழுந்து நிற்கின்றன.

1959 இல் தமிழ்த் திரை இசை உலகுக்கு வந்த பி.ஸ்ரீனிவாஸ் 1970 வரை திரை இசை உலகில் கொடிகட்டிப் பறந்தார்.



'சுமைதாங்கி' திரைப் படத்தில் "மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா?" என ஸ்ரீனிவாஸ் பாடும்போதும் 'செந்தூர் முருகன்' என சாந்தி திரைப் படத்தில் கடவுளை நோக்கி உருகும்போதும் கலங்கிய அவரது குரலின் இனிமையில் கரையாதவர் யார் உளர்?

1984இல் 'ஊமை விழிகள்' திரைப் படத்தில் "தோல்வி நிலையென நினைத்தால் வாழ்வை நினைக்கலாமா?" எனத் தனது கடைசிப் பாடலைப் பாடினார். பி.ஸ்ரீனிவாஸுக்கு என்றுமே தோல்வி இல்லைதான் தமிழ்த் திரை இசை உலகில்....

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்!

விருப்பம், மகிழ்ச்சி, பயம் இவற்றின் தலையீடு ஏதுமின்றி உண்மையிலேயே நீங்கள் என்னவாக இருக்கின்றீர்கள் என்பதை தப்பித்தல் இன்றி வெறுமனே கவனிக்க வேண்டும். நீங்கள் பார்ப்பதற்குப் பெயரிடாதீர்கள். வெறுமனே பாருங்கள். அப்போதுதான் கவனிப்பதற்குரிய ஆர்வமும் சக்தியும் உங்களிடம் இருக்கும். அந்தக் கவனிப்பிலேதான் பெரியதொரு மாற்றம் நிகழ்கிறது.

அன்பு என்பது என்ன? நாம் அதைப் பற்றி நிறையவே பேசுகிறோம். கடவுளின் மீது அன்பு, மனித குலத்தின் மீது அன்பு, நாட்டின் மீது அன்பு, குடும்பத்தின் மீது அன்பு எனப் பலவாறு எனினும், வியக்கத் தக்க வகையில் அந்த அன்போடு கூடச் சேர்ந்து வெறுப்பும் இருக்கிறது.

நீங்கள் உங்களது கடவுளை நேசிக்கிறீர்கள், பிறரது கடவுளை வெறுக்கிறீர்கள். உங்களது நாட்டை, குடும்பத்தை நேசிக்கிறீர்கள். ஆனால் பிறரது குடும்பத்திற்கு, நாட்டிற்கு எதிராக இருக்கிறீர்கள். மேலும் அதிகமதிகமாக அன்பு என்பது பாலுணர்வோடு சம்பந்தப்பட்டு வருகிறது.

நாம் இங்கே வெறுத்தொதுக்கவில்லை. கணிக்கவில்லை. அளவெடுக்கவில்லை. உண்மையிலேயே என்ன நிகழ்கிறதோ அதை வெறுமனே கவனிக்கிறோம். இவ்வாறு எப்படிக் கவனிப்பது என்பதை நீங்கள் அறிந்தால் அது உங்களுக்கு அதிகமான ஒரு சக்தியைக் கொடுக்கும்.

அன்பு என்பது என்ன? இரக்கம் என்பது என்ன? இரக்கம் என்ற சொல்லுக்கு எல்லார் மீதும், எல்லாவற்றின் மீதும் கொண்டுள்ள அக்கறை என்று பொருள்... நீங்கள் உண்பதற்காகக் கொல்லும் மிருகங்கள் மீது கூட.

ஜே.கிருஸ்ணமூர்த்தியின் வன்முறைக்கு அப்பால் நூலிலிருந்து.

# சிந்தியா

பதில்கள்

☞ இப்போது நடக்கும் கொலைகளும் தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் உள்ள முட்களை அகற்றிச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையின் பகுதிதான் என்றுதானே பெரும்பான்மையான தமிழ் மக்கள் நினைக்கிறார்கள்?

-இரா.கோபாலன், வவுனியா.

அதெனக்குத் தெரியாது. ஆனால் தமிழ் மக்களின் குரல் இதுதான் என்று எழுதி வரும் பத்திரிகைகளைப் பார்க்கையில், 'தேவர் மகன்' படத்தின் கிளைமாக்ஸில் கமல்ஹாசன் வடிவேலுவுக்குச் சொல்வது போன்ற ஒரு உச்சக் கட்டச் சலிப்பிலேயே சொல்ல நேர்கிறது. போய்ப் படியுங்கடா....குறைந்த பட்சம் புலம் பெயர்ந்திருக்கும் நம்மவர்களின் வெட்ளங்களையாவது!

✉✍✉

☞ சமீபத்திய துக்கம்?

-மல்லிகை.வீ.ஸ்ரீதரன், மூதூர்.

பத்மநாதன், பஞ்சாபிகேசன் கான மூர்த்தி பஞ்சமூர்த்தி, தட்சணாமூர்த்தி, சின்னராசா, கணேசன், பழனி.... கோயில் திருவிழாக்களோடு இணைந்திருந்த என்றும் பலரின் பாலகப் பருவத்தை நிறைத்திருந்து இந்த இசைதான். அதனால்தான் இதயத்தின் ஓர் அந்தரங்க இழை அறுந்து போன்ற வலி!

✉✍✉

☞ உங்களுக்கு இந்த உலகைச் சுற்றிப் பார்க்கும் ஆசை உண்டா?

-ஏ.எம்.ஏ.அஸீஸ், காத்தான்குடி - 05.

நமக்கெதற்குக் கஷ்டம் என்றுதான் இந்த உலகமே நம்மையும் சுமந்தபடி சுற்றிக் கொண்டிருக்கிறதே! (ஹிஹி..... புளிப்புத் திராட்சை!)

✉✍✉

☞ சிந்தியா, உங்களுக்கும் கொலை மிரட்டல் வந்துவிட்டால், எங்கள் கேள்விகளுக்குத் தொடர்ந்து பதிலளிப்பது யார்?

-பே.ஹர்சனா, கந்தளாய்-02.

அடடா, என்னமாய் ஒரு மானுட நேயம் உங்களுக்கு!

✉✍✉

☞ கிளென் மக்ராத்தின் முகவரியைத் தருவீர்களா?

-அபிமானி, கொழும்பு.

அவரது அணியின் தலைவர் பொண்டிங்கே சலித்துப் போய்த் திட்டுகிறார். அவஸ்திரேலியாவின் மானத்தை ஏதோ அவர் மட்டும்தான் கப்பலேற்றுவதாக அங்குள்ள பத்திரிகைகளும் வறுத்தெடுக்கின்றன. பாவம், விட்டுவிடுங்கள்!

✉✍✉

☞ 'தலைக்கு மேல் பாரம்' என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் தர முடியுமா?

-க.அமுதா, பொத்துவில்.

கிரீடம்.

✉✍✉

☞ சிந்தியா, இனப்பற்று என்பது என்ன?

-என்.பிரியா, வெலிமடை.

லைசென்ஸ் இல்லாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டிய ஒருவர் பிடிபடுகிறார். அவருக்காக மக்கள் தாங்களாகவே திரண்டு வந்து வீதி மறித்துப் போராட்டம் நடத்துகிறார்கள். கூடியிருப்போர் மத்தியில் பொறுப்பாளர் பேசுகிறார். "தலைவரின் ஒரு வார்த்தைக்காகப் பொறுமை காத்திருக்கிறோம். இல்லையெனில் இந்தத் தீய சக்திகளை ஒரு நொடியில் அழித்து விடுவோம்!" பத்திரிகையாளர்கள் புளகாங்கிதத்தோடு தரும் இந்தச் செய்தியை வாசித்துப் புல்லரித்துப் போவதுதான் இனப்பற்று என்று தோன்றுகிறது!

✉✍✉

☞ தலை நிமிர்ந்து வாழ என்ன வேண்டும்?

-எம்.ஷீலா, மன்றாசி.

கழுத்தில் கூகைக்கட்டு வர வேண்டும்.

✉✍✉

☞ பணத்தால் எதையும் வாங்கிவிட முடியுமா?

ஆர்.அழகராஜ், சிறிய பம்பக்கொல்ல தோட்டம்.

கிரேக்கப் பழமொழி "பணத்தால் நாயை வாங்கலாம், அதன் வாலாட்டு தலை வாங்க முடியாது."

✉✍✉

☞ சிந்தியா! காதல் வைரஸ் தொற்றியவர்களை இனங்கண்டுகொள்வது எப்படி?

-பி.பெனில்டஸ்,தோட்டவெளி.

வைரமுத்துவின் 'காதலித்துப் பார்' கஸற்றைக் கேட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்.

✉✍✉

☞ புலி என்ற காட்டு விலங்கின் உங்களுக்குத் தெரிந்த சிறப்புக் குணம் ஒன்றைச் சொல்வீர்களா?

-க.பிரதாப், கிராண்ட்பாஸ்.

போரின்றி நெடுநாள் வாழாது.

✉✍✉

☞ என்ன படம் பார்த்தீர்கள்?

-ஏ.மர்ஜியா றமீஷா, நிந்தவூர் - 18.

'விசில்', தமிழ்ப் படங்களின் மசாலாத் தனத்தைக் கிண்டலடித்தும், உலகத்தரப் படங்கள் பற்றி விவர ஞானத்தோடும் எழுதும் சுஜாதா, இந்தப் படத்தைத் தயாரித்து (மீடியா ட்ரீம்ஸ்) வசனமும் எழுதியிருக்கிறார்! திரையில் உழைத்தல் வேறு, தெள்ளியராதல் வேறு.

✉✍✉

☞ சினிமாவுக்கும் ஏனைய கேளிக்கைகளுக்கும் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கும் நம்மவர்கள், எத்தனையோ கஷ்டங்கள், செலவுகளுடன் சிரமப்பட்டு தங்கள் புத்தகங்களை வெளிக்கொண்டு வரும் நம் எழுத்தாளர்களுக்கு ஆதரவளிக்க, அவர்களது புத்தகங்களை வாங்குவதற்கு சிறிய தொகை செலவழிக்கவும் முன்வருகிறார்களில்லையே?

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

அப்படியெல்லாம் ஆதரவளித்து, அநாவசியமாய் அவர்கள் திரும்பத் திரும்பக் கஷ்டங்களையும் சிரமங்களையும் பட ஊக்குவிக்க வேண்டாமே என்று நினைக்கிறார்களோ என்னவோ!

✉✍✉

# இலக்கியநயம்

"எதற்கு அவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டனுப்பினீர்கள்?" சீறலுடன் வந்த சம்பாவின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் அஜிதன்.

இடையில் கைகளிரண்டையும் ஊன்றியவாறு அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

"உன் கண்கள் வாரி வீசும் ஆயிரமாயிரம் காந்தக் கணைகளின் சக்தியால்தானடி இந்த இரும்பு இதயமும் வந்து விழத் துடிக்குது" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்ட அஜிதன் "வா சம்பா, இப்படி உட்கார்" என்று மென்மையாகச் சொன்னான்.

"நான் போக வேண்டும். விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று அவள் மூச்சிரைத்தபடி சொன்னதைச் சிரித்தவாறே பார்த்திருந்தான். அசைந்த எழிலிடங்களில் நிலைத்த அவன் பார்வை, சித்தத்தைக் கலங்க வைக்கும் செய்திகளை மூளைக்கு அனுப்பியது.

தன்னைச் சமனப்படுத்திக்கொள்வதாகக் கைகளிரண்டையும் பின்னால் ஊன்றிச் சாய்ந்தமர்ந்துகொண்ட அஜிதன், முகத்திலும் இளநகையைப் பொருத்திக்கொண்டான்.

சம்பாவின் சிறிய இடையைக் கொஞ்சங்கூட அனுதாபமில்லாமல் இறுக்கிப் பிடித்திருந்து பட்டாடை. கீழே இறங்கிய சேலை அழகிய அவளது தாமரைப் பாதங்களை மறைக்க இஷ்டமின்றி சற்று மேலேயே வட்டமாகத் தொங்கி நின்றது.

இடையிலிருந்து மேற்புறம் ஏறிச் சென்ற சேலையிப்பகுதி, அதன் இலகு ஏற்றத்தைத் தடுக்க முனைந்த இரு அழகு மேடுகளைத் தாண்டித் தாவிச் சென்று அவள் இடது தோள் வழியாகப் பின்புறம் பாய்ந்ததை சம்பா தன் இடது கையால் வளைத்து முன்புறம் இழுத்துப் பிடித்திருந்தாள். அவள் கழுத்தும் மார்பின் ஆரம்பமும் மயக்கமூட்டின. கரங்கள் தோளிலிருந்து திறந்தே கிடந்தன. அது தோள்களின் வாளிப்பை எடுத்துக் காட்டியதோடல்லாமல், கரங்களை மிக நீண்டவையாகவும் தோன்றவைத்து மயக்கமூட்டியது.

அவள் அணிந்திருந்த ஆபரணங்களும் சரி ஆடைகளும் சரி அவள் ஒவ்வோர் அழகையும் பூரணமாக எடுத்துக் காட்டியதுடன், மிகைப்படுத்தவும் செய்து, அவளுடைய சிறிய அசைவுகளுக்கும் அசைந்து அசைந்து பார்ப்போர் மனத்தைப் பைத்தியமாக்கின.

"என்னை அவசரமாய் வரச் சொன்னது இந்தத் திமிருக்குத்தானா?" மௌனத்தை உடைத்து வெடித்தாள் சம்பா.

ஆராய்ச்சிப் பார்வையை நிறுத்திவிடாமலே, "திமிரா?" என்று சாவதானமாகக் கேட்டான் அஜிதன்.

"வேறென்ன இது? என்னமோ ஏதோ என்று ஓடி வந்தால், இப்படி அலட்சியமாக கழுகுப் பார்வை பார்த்துக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?"

அஜிதன் சிரித்தபடியே "கோபத்திலும் எவ்வளவு அழகாயிருக்கிறாய்... வா, வந்து இப்படி உட்கார்" என்றான்.

"எவ்வளவு அலட்சியம் பார்! ஆண்களின் திமிர் இது" என்று சொல்லியபடியே அவனருகில் அமர்ந்தாள் சம்பா.

"ஆசையோடு கூப்பிட்டால், அதைப் போய்த் திமிர் அது இது என்றா சொல்வாய்?" என்று மென்மையாகக் கேட்ட வண்ணம் வலதுகையால் அவள் இடையைப் பற்றி அருகே இழுக்க முற்பட்டான்.

"கை சும்மா இருக்கட்டும்" என்றாள் சீறலுடன்.

"இருக்காது" என்றான் அஜிதன்.

அவன் கையை இடையிலிருந்து அப்புறப்படுத்த முயற்சித்தபடியே "ஏன்?" என்றாள்.

"சித்திரமும் கைப்பழக்கம்" என்று சிரித்தான்.

"அதென்ன பழக்கம்?"

"ஒரு பெண் சித்திரத்திடம் கை பழகுகிறது"

"ம்..ம்..நன்றாயிருக்கிறது கைப்பழக்கம்"

"ஆமாம் நன்றாய்த்தானிருக்கிறது" என்று அவள் கழுத்தருகே முகத்தைச் சாய்த்தான்.

"ஆண்களின் திமிரான சிந்தனைக்கு ஏது எல்லை?"

"வந்ததிலிருந்தே ஏன் திமிர் திமிர் என்று சீறிக்கொண்டிருக்கிறாய்?"

சம்பா உடலைத் திருப்பி இரு கைகளாலும் அவன் நெஞ்சைப் பிடித்துத் தள்ளினாள். "பெண் என்றால் உங்களுக்கிருக்கும் இளக்காரமான எண்ணமே திமிரின் அடிப்படைதானே?"

"வடித்தால் வதைப்பது போதாதென்று வார்த்தைகளாலுமா எங்களை வதைக்க வேண்டும்?" அப்பாவி போலக் கேட்டான் அஜிதன்.

"சாதாரணமாகப் பார்த்துச் சிரித்துவிட்டாலே போதும் தங்கள் வலையில் விழுந்துவிட்டதாக நினைத்துக்கொள்வார்கள் உடல் சற்றுப் பட்டுவிட்டால் இவள் உடற்சுகத்துக்கு அலைகிறாள் உடனே வாரியணைத்துவிடலாம் என்ற நினைப்பு, அன்பாக ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டால் அடிமையாகிவிட்டாளென்ற எண்ணம்....ஆண்களின் இந்த முட்டாள்தனத்தில் நீங்கள் சேரமாட்டீர்கள் என்று நினைத்தேன். ஆனால் நீங்களும் அதற்கு விலக்கில்லை என்றுதான் தெரிகிறது...."

கோபத்தில் உதடுகளை மடித்துக்கொண்டதால் குழிந்த கன்னங்கள் அவள் அழகை மேலும் அதிகப்படுத்தியதை இரசித்தவாறிருந்தான் அஜிதன்.

"இன்பம் அதிகமான நிலையிலும் பெண்கள் வெடுக் வெடுக்கென்றுதான் பேசுவார்கள்" என்று சொல்லவும் செய்தான்.

## சேர்ந்திருக்கும் பொழுதெல்லாம் தீஞ்சுவைப் பொழுதுகள்தான்... கூடிவிட்டால்...



"ஆஹா உடனேயே காட்டிவிட்டீர்களே...எத்தனை பெண்களைத் தெரியும் உங்களுக்கு?" என்றவாறே உதறி எழுந்தாள்.

"மடியிலிருந்து குதித்தால் கால் முறியும் என்று தெரிய குதித்துப் பார்த்திருக்க வேண்டுமா?" என்று நக்கலாகவும் மேலும் ஏதோ சொல்லப் போனவனைக் காதில் வாங்கிக்கொள்ளாது விடுவிடென்று நடையைக்கட்டினாள் சம்பா.

வழியில் அம்மங்கா எதிர்ப்பட்டாள்.

"என்னடி கோபமாக வருகிறாய். அஜிதனோடு ஏதும் தகராறா?"

"ஆமாம்"

"என்னடி இது? அவனை ஒரு நாளாவது பார்க்காவிட்டால் பிதற்றி நச்சரித்துக் கொண்டிருப்பாய். ஏன் அவனை விட்டு ஓடி வருகிறாய்?" ஆச்சரியத்தோடு அம்மங்கா கேட்டாள்.

சம்பா சிரித்தாள். "எல்லாம் காரணமாகத்தான்."

"காரணமாகவா?"

"ம்...அவரொடு சேர்ந்திருக்கும் பொழுதுகளை தீஞ்சுவைப் பொழுதுகளாக்கிவிடும் இனியவர்தான் அவர். ஆனாலும் தொடர்ந்தும் கூடி மகிழ்ந்து சலித்துவிடாதா? அதுதான் ஊடல் கொண்டவள் போல நடித்து வந்துவிட்டேன். திரும்பவும் இந்தப் பிரிவினால் உண்டான வருத்தமெல்லாவற்றையும் எங்கள் தழுவுதலால் விரட்டும்போது கிடைக்கும் மகிழ்ச்சிக்கும் இன்பத்துக்கும் அளவே இல்லையடி"

**நனிபெரிது இனியன்**
**ஆயினும் துனிபடர்ந்து**
**ஊடல் உறுவேன் தோழி**
**நீடு புலம்புசேண் அகல**
**நீந்திப் புலவி உணர்த்தல்**
**வண்மை யானே.**

(நற்றிணை : 217 : 6-9)

தருவது முழடில்யன்



ஷெரின்-விக்கிரமாதித்தியா-காயத்ரி ரகுராம் (படம்: விசில்)

☞ கடன் கேட்பது சிரமமா? கொடுப்பது சிரமமா?

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

எல்லாவற்றையும் விடச் சிரமம், நீங்கள் இப்படி வாரத்திற்கு ஏழெட்டுக் கேள்விகளை அனுப்பிக்கொண்டிருப்பது!

(குவிந்து கிடக்கும் தபாலட்டைகளைப் பார்த்தால் குற்றவுணர்வாக இருக்கிறது)

✉✍✉

☞ மேல் கொத்மலை திட்டத்தால் அங்குள்ள மக்களுக்கு ஆபத்தா?

-ஆ.ஜீவகுமார், அக்கரப்பத்தனை.

பொறுங்கள். ஐ.தே.க.வுக்கே ஆபத்து வந்துவிடும் போல் தெரிகிறது.

✉✍✉


☞ தினமுரசின் பழைய வாசகனாகிய நான் எத்தனையோ கேள்விகளை அனுப்பியும் ஒன்றாவது பிரசுரமாகவில்லை. ஏன் என்று நான் அறிந்துகொள்ளலாமா? குப்பைத் தொட்டியில் போடுவதற்கும் ஏதாவது காரணம் இருக்க வேண்டுமல்லவா?

-எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா, வத்தளை.

பதிலளிக்கப்பட்ட கேள்வி அட்டைகள்தான் குப்பைத் தொட்டிக்குப் போகின்றன. ஏனையவை எல்லாம் இப்படி மேசை முன்னால் கிடந்து பயமுறுத்திக்கொண்டிருக்கின்றன.

✉✍✉

# திருடனாக மாறிய டைட்டானிக் நாயகன்



'டைட்டானிக்' கப்பலில் நாயகி கீர் வின்செட்டுடன் தென்றலையும், அலைகளையும் கிழித்துக்கொண்டு பாடிய அந்த நாயகன் லியனாடோடாடி கெப்ரியலை மறந்திருக்க மாட்டீர்கள்!

இந்தக் காதல் நாயகன் இப்போது ஹொலிவூட் திரைகளில் (நம்நாட்டுத் திரையரங்குகளிலும் கூட) திருட்டு ஆசாமியாக வலம் வருகிறார்.

இவரது லேட்டர்ஸ்ட் திரைப் படம் Catch me if you can (உன்னால் முடிந்தால் என்னைப் பிடித்துக்கொள்.) உண்மைதான். அத்தனை சுலபத்தில் பிடிக்க முடியாத ஊழல் பேர்வழியாகக் கலக்கியிருக்கிறார் டியனாடோ.

உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இத் திரைப் படத்தில் லியனாடோ ஒரு கல்லூரிப் பேராசிரியர். அப்படி என்று ஒரே வார்த்தையில் கூறிவிட முடியாது. ஏனெனில் அவருக்கு அப்படி ஒற்றை வேடம் கிடையாது.

டாக்டர், பேராசிரியர், ∴. பைலட், சட்டத்தரணி என்று ஏகப்பட்ட நபர்களாகத் தன்னை இனம் காட்டி, போலி 'செக்'களைக் கொடுத்துப் பண மோசடி செய்வதுதான் தொழில். இடையில் தினம் ஒரு காதலியுடன் 'ஜால்றா' போடுகிறார்.


நன்றாகச் சிரிக்க முடிகிறது!

# ஜாலி விருந்து

## V.I.P சந்திப்பு



நாய் என்றாலும் மரியாதையான இடத்திற்குப் போகும்போது மரியாதையாகத் தானே போக வேண்டும். நோர்வேயின் ஹெரால்ட் மன்னரையும் அவரது மகா ராணியையும் சந்திக்கச் சென்ற இங்லிஷ் புல் டோக் இன நாய் தனது வழமையான உடையிலிருந்து மாறி இப்படி ஆடை அணிந்திருக்கிறது.




'தி லோர்ட் ஒ∴ப் தி ரிங்ஸ்' என்ற ஹொலிவூட் திரைப்படம் வருமானத்தில் சாதனை படைத்த அன்மைக் கால தயாரிப்புகளில் ஒன்று. இந்தப் படத்தைப் போல நமது அரசியல்வாதிகளை வைத்து ஒரு திரைப்படம் தயாரித்தால் என்ன பெயர் வைக்கலாம். எப்படி போஸ்டர் வடிவமைக்கலாம் என்று சிந்தித்ததில் ஒரு இன்டர்நெட் சிந்தனையாளருக்குத் தோன்றிய ஐடியா இது.

## பாட்டுப் பாடினால் விடுதலை




இலங்கையர்கள் ஐரோப்பிய நாடுகளில் சட்ட விரோதமாக வாழும்போது அதிக அளவில் பொலிஸில் சிக்கக் காரணம் உருவ அமைப்புதான்.

வெள்ளைக்காரப் பொலிஸ்காரனுக்கு நம்மவர்களை ஒரே பார்வையில் எடை போட்டுவிட முடியும்.

ஜப்பான், சீன நாடுகளில் வாழும் மொங்கோலிய இன மக்களின் உருவ அமைப்பு பெரும்பாலும் ஒத்தது. தூர கிழக்காசிய நாடுகளில் வாழும் இந்த இன மக்கள் ஒரே நாட்டவர்கள் போல்தான் காட்சி அளிப்பார்கள்.

சீனர்கள் அயல் நாடான தைவானில் சட்டவிரோத மாக வந்து குடியேறுவது இப்போது தாய்வான் அரசுக் குப் புதிய தலைவலி. இப்படி அனுமதியின்றி தமது நாட்டில் தங்கியிருக்கும் சீனர்களின் உருவத்தை மதித்து அவர்களைக் கைது செய்வது தைவான் பொலிஸாருக் குப் பிரச்சினை. இதனால் சந்தேகத்துக்குரிய எவரை யேனும் விசாரிக்கும்போது அவர் தைவான் நாட்டவரா அல்லது சீன நாட்டவரா என்பதை அறிய, பிரபல மான தைவான் வாசகம் ஒன்றையும், தைவான் பாடல் ஒன்றையும் பாடுமாறு கேட்கிறார்கள் பொலி ஸார். சரியாகப் பாடினால் விடுதலை. அன்றேல் கம்பி எண்ண வேண்டியதுதான்.



மனதில் இருப்பது ஒருவர்
பாப்பது வேறொருவரை
புன்னகை மற்றொருவருக்கு
பேச்சு இன்னொருவருடன்
காதலைச் சொல்வது
வேறொருவரிடம்
காதல் கடிதம் கொடுப்பது
மற்றொருவருக்கு
சொக்லெட் இன்னொருவரிடமிருந்து
ஊர் சுற்றுவது வேறொருவருடன்
திருமணம் முடிப்பது
இன்னொருவரை
திருமணம் முடித்தும்....வாழ்வது
வேறொருவருடன்.

## இது யாருக்குப் பொருந்தும்....?




'வேர்ல்ட் கப்' போட்டிகள் நடக்கும் போது 'சுப்பர் சிக்ஸ்' பற்றிய ஆய்வுகள் பெருமளவில் நடந்தேறும்.

யார் வருவார்கள். யார் வெளியே போவார்கள் என்றெல்லாம் விவாதங்கள் சூடு பறக்கும். ஆனால் அன்றாட வாழ்வில் ஆட்டிப்படைக்கும் 'சுப்பர் சிக்ஸ்' விடயங் கள் என்னவென்று கேட்டால், இங்கே இருக்கிறது பதில்.

இந்த 'சுப்பர் சிக்ஸ்' ரேட்டில் எது கூடினாலும் 'பட்ஜெட்' உதைக்கும். அந் தளவு ரொம்பவுமே முக்கியமான அம் சங்கள்.

இந்த 'சுப்பர் சிக்ஸில்' இன்னொன்றை யும் சேர்த்து தேவையென்றால் 'சுப்பர் செவன்' ஆக்கிக்கொள்ளலாம். அது டாக்டர்களுக்குக் கொடுக்கும் சௌலிங் கட்டணம்.

# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

## 22

பலஸ்தீன மக்களுக்குரிய பிரதேசத்தில் இருந்து அம் மக்கள் தந்திரமாகவும், நயவஞ்சகமாகவும் யூதர்களால் விரட்டி அடிக்கப்பட்டு, அப்பிரதேசத்தில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அரபு நாடுகளினதும், உலக இஸ்லாமிய மக்களினதும் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரித்தானியர் இஸ்ரேலை உருவாக்கினார்கள். இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது யூத சமுதாயத்துக்கு பிரித்தானியாவும், அமெரிக்காவும் கொடுத்த வாக்கு நிறைவேற்றப்பட்டது.

தங்களுடைய தாயகத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட பலஸ்தீன மக்கள் அகதிகளாக்கப்பட்டு உலகின் பல நாடுகளிலும் அகதிகளாக அனாதைகளாக அலைந்து திரியலாயினர். இக் காலகட்டத்தில் PLO என்று அழைக்கப்படும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை சர்வதேச மட்டத்தில் அமைத்தார்கள். இந்த இயக்கத்தைத் தலைமை தாங்கி வழிநடத்துவதற்கு யசீர் அரபாத் முன்வந்தார். தங்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல, பல வகையான மார்க்கங்களையும் யசீர் அரபாத் கையாண்டார். இவ்வகையான மார்க்கத்தில் வன்முறைப் போராட்டங்



களும் தலையெடுத்தன. இத்தகைய வன்முறைப் போராட்டங்கள் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் மட்டும் நின்றுவிடவில்லை.

தங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்துவதற்கு

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்

> ‘சுருட்டப்பட்ட பெரும் கம்பளம் மீண்டும் விரிக்கப்படமாட்டாது. இருப்பினும், வரலாற்றின் பாதிக்காலம் கைவிட்டுப்போன பெரும் பகுதியை மீட்பதற்காகவே செலவிடப்படும்

விமானக் கடத்தல், குண்டுகளை வெடிக்க வைத்தல் போன்ற வன்முறைச் செயல்களையும் பரவலாக நடத்தினர்.

இதன் பயனாக பலஸ்தீன விடுதலை இயக்கம் ஒரு சர்வதேச பயங்கரவாத இயக்கம் என்ற பெயரைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து அவ்வியக்கத்தின் தலைவரான யசீர் அரபாத் சர்வதேச பயங்கரவாதி என அழைக்கப்பட்டார்.

## பிரமிக்க வைப்பது ராஜகுமாரன்

அவரை அழித்தொழிக்க உலக நாடுகள் பலவற்றிலும் முயற்சிகள் இடம்பெற்றன. அரபாத்தை அழிப்பதற்காக விரிக்கப்பட்ட வலைகளில் சிக்கிக்கொள்ளாமல் அவர் தப்பிப் பிழைத்த கதைகள் ஏராளம். ஆனால் இன்று யசீர் அரபாத் அனைத்துப் பயங்கரவாத செயற்பாடுகளிலிருந்தும் விடுபட்டு, பேச்சுவார்த்தைகளின் மூலம் பலஸ்தீன மக்களுக்கான ஒரு நாட்டை கருவாக்கி உருவாக்க முன் வந்து உழைத்து வருகிறார். இருப்பினும் வன்முறையற்ற அமைதிப் பேச்சுகளின் மூலம் நாட்டை மீட்டெடுப்பதற்கு பலஸ்தீன மக்களிடத்தில் தோன்றியுள்ள ஹமாஸ் இயக்கம் போன்ற தீவிரவாத அமைப்புகள் சார்பாக நடந்து கொள்ள முற்படவில்லை. இதனால் இன்று நடைபெற்று வரும் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத் தலைவர்களுக்குமான அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்குத் தடங்கல்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் யசீர் அரபாத் பற்றி தீர்க்கதரிசியான நொஸ்ரடாமஸ் தெரிவித்துள்ள கருத்துக்கள் அவருடைய ஆறாவது தொகுப்பின் 61வது நான்கு வரிப் பாடல்களில் காணப்படுகின்றன. இப் பாடல்களில் பலஸ்தீனத்தை ஒரு கம்பளம் என்று நொஸ்ரடாமஸ் குறிப்பிடுகின்றார்.

“சுருட்டப்பட்ட பெரும் கம்பளம் மீண்டும் விரிக்கப்பட மாட்டாது. இருப்பினும், வரலாற்றின் பாதிக் காலம் கைவிட்டுப்போன பெரும் பகுதியை மீட்பதற்காகவே செலவிடப்படும் இராச்சியத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் ஓரளவு



வெற்றி காண்பார்கள். இருப்பினும் போராட்டங்கள் தொடந்த வண்ணமே இருக்கும்” என்று நொஸ்ரடாமஸ் தனது தொகுப்பில் முடிவினைக் கூறாமல் விட்டுவிட்டார். இதற்கான முடிவு எவ்வாறு இருக்கும் என்பதனை வேறு ஏதாவது ஒரு தொகுப்பில் அவர் தெரிவித்திருக்கக் கூடும். ஆனால் தொடருக்காக நாம் எடுத்துக்கொண்ட கணிப்புகளில் அம் முடிவு பற்றிய கருத்துக்கள் காணப்படவில்லை.

மேற்படி நொஸ்ரடாமஸின் நான்கு வரிப் பாடல்களை விளக்கி விமர்சிப்பவர்கள், “யசீர் அரபாத்தும் பலஸ்தீன மக்களும் தங்கள் நியாயங்களை உலகுக்கு உணர்த்தத் தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்பார்கள்” என்று கூறியுள்ளார்கள்.

(பிரமிப்புகள் தொடரும்)

---

# காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

என்ன, போன கிழமை நான் சொல்லித் தந்த ‘அவியல்’ வித்தையை நல்லாப் பிரக்டிஸ் பண்ணியிருக்கிறியளெண்டு தெரியுது. எண்டாலும், முதலிடம் எங்கட கூட்டணித் திருகோணமலைக் கிளைக்குத்தான். சங்கரியாருக்கு முன்னால நேராய் சபையில வாதம் தொடுக்க ஏலாமல் கம்முண்டு இருந்தவை இப்ப கிளைகளுக்கு வைன் குடுத்து அறிக்கை விடத் தூண்டி விட்டு அவியலைத் துடங்கிட்டினம். பாத்தியளோ! இதுதான் மெதேட்! அவங்கள் அரசியல்வாதிகள், கப்பெண்டு பிடிச்சிட்டாங்கள் விஷயத்தை.

அது போகட்டும். கிட்டடியில பேப்பரொண்டில ஒரு கட்டுரை படிச்சன். ஆரோ ‘வனஜா-கிருஜா’ படத்தின் பெயர் மாதிரி ஏதோ பத்திரிகையாளர் வரிசையில கேள்விப்படாத பெயர். துணிஞ்சு எழுதியிருந்தா, துரோகிகள் கொல்லப்பட வேண்டியவைதானாம்! அட,கொல்லப்பட வேணுமெண்டு பேப்பரில ஒப்பினா எழுதிற அளவுக்கு எங்கட சனநாயகம் வளந்திட்டுதோ எண்டு திகைச்சுப் போனன். கொல்லுறதே ஜனநாயகமாகிப்போய் இருக்கேக்க கொல்லப்பட வேணுமெண்டு எழுதிறது ஜனநாயகமாகிறதில என்ன தப்பெண்டு யோசிச்சுப் பாக்கேக்கதான், இதில திகைக்க ஒண்டுமில்லையெண்டு தெளிஞ்சன்.

சரி, பிள்ளை சொல்லுமாப்போல, துரோகிகளக் கொல்லுறது தப்பில்லையெண்டேக்க, யாரடாப்பா துரோகியெண்ட கேள்வி பிடரியில தட்டிச்சுது. பின்னாலதான் உன்னிப்பாய் கட்டுரையைப் படிச்சுப்பாத்தால், பிள்ளை அதையும் சொல்லித்தான் இருக்கு. எதிரியோட கைகோத்து நிக்கிறவைதான் துரோகியாம்.

சரி, சரி, அதுவும் கிளியரெண்டுட்டு இருக்கப் போனால், அட, எதிரியோட கைகோக்கிறதாயிருந்தால் யார் அந்த எதிரி எண்டு திரும்பவும் இன்னொரு கேள்வி பிடரியில தட்டுது.

இதென்னடாப்பா வெங்காயம், உரிக்க உரிக்க உரிஞ்சுகொண்டே போகுதெண்டிட்டு எதிரியத் தேடினால், எதிரி நேரத்துக்கு நேரம் மாறிறதாக் கிடக்குதேயொழிய யாரெண்டு கிளியராத் தெரியேல்லை.

ஒருக்கால் இந்தியா நண்பன் இலங்கை அரசாங்கம் எதிரி. இன்னொருக்கால் இந்தியா எதிரி, இலங்கை அரசாங்கம் நண்பன். பிறகு, இந்தியாவும் எதிரி, இலங்கை அரசாங்கமும் எதிரி. பிறகு, திரும்பவும் இலங்கை அரசாங்கம் நண்பன். பிறகு திரும்பவும் எதிரி. பிறகு திரும்பவும் நண்பன். பிறகு சர்வதேச சமூகமெண்டு ஒரு புது நண்பன். இப்ப அந்தச் சர்வதேச சமூகமும் எதிரியாகிடுமோ எண்ட கணக்குக்கு வந்திட்டுது. அப்பிடியும் ஆயிட்டால் எக்கணம் சர்வதேச சமூகத்தின்ர காலடியில அடைக்கலமடைஞ்சிருக்கிற எங்கட புலம்பெயர்ந்த சனமெல்லாம் துரோகியாகிடுவினமோ தெரியேல்லை.

எனக்கெண்டால் தலை சுத்துது. உந்த எதிரியையும் நண்பனையும் அடையாளம் காணுறது பெரும்பாடாக் கிடக்குது. நேற்றைய எதிரி இண்டைக்கு நண்பன், இன்றைய நண்பன் நாளைய எதிரி எண்ட கதையாக் கிடக்குது.

கூட யோசிச்சால் எனக்கு நானே எதிரியெண்டு நிறுவலாம் போல கிடக்குது.

ஆனால் துரோகியக் கண்டுபிடிக்கிறதுக்கு உப்பிடி மண்டைய உடைக்கத் தேவையில்லை. துரோகி கொல்லப்படலாமெண்டால், கொல்லப்படுறவன் எல்லாம் துரோகி எண்டுதானே அர்த்தம். இதுக்கேன் மண்டையப் போட்டு உடைச்சு யார் எதிரி, அவனோட யார் கைகோத்திருக்கிறானெண்டு தேடியலைவான். பேசாமல் ஒரு பேனாவையும் பேப்பரையும் தூக்கிக்கொண்டு குத்தியிருக்கிறது. யாரேனும் ஒருவர் கொல்லப்பட்டால் அவரைத் துரோகியெண்டு எழுதிப்போட்டுப் போறது. ஈஸியான வேலை!

என்னயிருந்தாலும் இப்பிடியொரு கட்டுரையை எழுதின பத்திரிகையாளரும் அதைப் பிரசுரிச்ச பத்திரிகையும் சனநாயகத்துக்குச் செய்திருக்கிற சேவையைப் பாராட்டாமல் விட்டால் நான் காதில பூ வைச்சிருந்து அர்த்தமில்லை. நாளைக்கு ஒரு வரலாறு எழுதப்பட்டால் எங்கட நாட்டில இப்பிடியெல்லாம் எழுத்தாளர்கள் இருந்து ஜனநாயகத்தைப் பாதுகாத்தவை, இன்ன இன்ன பத்திரிகைகளெல்லாம் இதுக்கு அளப்பெரும் சேவை செய்தவையெண்டு கட்டாயம் எடுத்துச் சொல்லும்.

ஆனாலும் ஒரு சின்னக் கேள்வி. இந்தச் சின்ன மூளைக்குள்ள வண்டு புகுந்து உறுத்தி வாயத் திறக்க வைச்சு வம்பை விலைக்கு வாங்கிறனெண்டுதான் நிக்குது. பறவாயில்லை. அது வந்து, இப்ப உவை இப்பிடி எழுதினமெல்லே. நாளைக்கேதும் நிலைமை மாறி, துரோகிகளத் தியாகிகளெண்டும், தியாகிகளத் துரோகிகளெண்டும் சொல்ல வேண்டி வந்திட்டால் இவையின்ர கதி என்னாகப்போகுது...?

அடடடட, நானொரு மாங்காய் மடையன். அந்த நேரம் எல்லாருக்கும் முன்னால நிண்டு அப்பிடி வரலாறு எழுதிறவையே இவையாத்தான் இருப்பினம். நொட்டு வொறி! பத்திரிகையாளராம் கொக்காம்! ■

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்தவாரம் உங்கள் பலன்

27.07.2003 தொடங்கி 02.08.2003 வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

**மிதுனம்**- சூரியன், புதன், வியாழன், **விருட்சிகம்**- கேது,
**கும்பம்** - செவ்வாய், **இடபம்** - இராகு, **மிதுனம்** - சனி, வெள்ளி
சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) காரியங்களில் தடங்கல் ஏற்படும். குடும்பத்தவரின் ஆதரவு கிட்டும், சினம் கொள்ளாமல் விவேகத்துடன் நடந்தால் நன்மையும் உயர்வும் உண்டாகும், மாணவர்களுக்கு நலமான காலம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)வார ஆரம்பத்தில் மகிழ்ச்சியாக இருக்கும், வர்த்தகத்தில் தடைகள் ஏற்படலாம், முன்னேற்றத்தில் தடை ஏற்படும், நண்பர்களின் உதவியால் நலம் ஏற்படும்.
அதிர்ஷ்ட நாள் :- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) எடுத்த காரியங்கள் வெற்றியளிக்கும், பணவரவு சீரடையும், குடும்பத்தில் கஷ்டங்கள் தலைகாட்டலாம், விவசாயிகளுக்கு சோதனையான காலம்.
அதிர்ஷ்ட நாள்:- சனி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) உடல் நலம் குறைவு, குடும்பத்தில் பெருமைப்படும் காரியங்கள் நடைபெறும், பணவரவு தாமதமாகலாம், மாணவர்களுக்கு தோல்விகள் ஏற்படலாம், அமைதி தேவை.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) எதிரிகளின் போக்கு அச்சம் தரலாம், நண்பர்கள் உதவுவார்கள், கோபமடையாமல் ஓய்வெடுத்தால் நன்மை ஏற்படும்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) பொருள் வரவு, செயலில் தடங்கல் ஏற்படலாம், உறவினர்களின் ஆதரவு கிட்டும், விவசாயிகளுக்கு நன்மை கிட்டும்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) செய்தொழில் நஷ்டம், செலவு அதிகரிக்கும், குடும்ப உறவில் சிக்கல், விவசாயிகளுக்கு நட்டம்.
அதிர்ஷ்ட நாள்:- சனி
அதிர்ஷ்ட இலக்கம்:- 08

**விருட்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம்,கேட்டை) தொழில் போட்டி அதிகரிக்கும், அமைதியைக் கடைப்பிடித்தால் நல்ல நிலை உருவாகும், குடும்பத்தில் அமைதி நிலவும்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) செய்தொழிலில் முயற்சி தேவை, ஆலய தரிசனம், குடும்பத்தில் மகிழ்ச்சி, கலைஞர்கள் புகழ் பெறுவார்கள், விவசாயிகளுக்கு உழைப்பு அதிகம் தேவை.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலில் சிக்கல் தோன்றலாம், இருப்பினும் ஆதாயம் அதிகரிக்கும், கடும் உழைப்பால் நலம் கிட்டும்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 09

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) மகிழ்ச்சியான வாரம், உறவினர் வரவு, செலவு அதிகரிக்கும், மாணவர்களுக்கு கடும் முயற்சி தேவை.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) செய்தொழிலில் பகை ஏற்படும், நண்பர்கள் ஆதரவு கிட்டும், வெளியிடத்தில் இருந்து நற்செய்தி கிட்டும், மாணவர்களுக்கு வெற்றி.
அதிர்ஷ்ட நாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு







அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# வளரும் மலை...


Dzhambulat Khotokahov என்ற ரஷ்யாவைச் சேர்ந்த இந்தச் சிறுவன் மனித மலை போல் காட்சி அளித்தாலும் வயது நான்குதான். 56 கிலோ எடையுடைய இவனின் உயரம் 118 சென்ரி மீட்டர்கள். தன்னைப் போல குட்டி மலைகளோடு மோத தன்னைத் தயாராக்குகிறான். சின்னச் சின்னப் பந்தயங்களில் பொழுதுபோக்காகக் கலந்துகொண்டாலும் ரொம்ப பிடித்தது என்னவோ ஐஸ் கிறீமும், சாக்லேட்டும் என்பதிலேயே பெரு மகிழ்ச்சிகொள்கிறான்.

# புலிக் கவசம்

பெண்களுக்கான நவநாகரிக ஆடைகளைத் தயாரிக்கும் சர்வதேச கம்பனி அறிமுகப்படுத்திய Tomomi kudo Hanshin Tigers bra எனப்படும் புதிய வகை மார்புக் கச்சையை அணிந்து இந்த அழகி காணப்படுகிறார். இது மேற்கு ஜப்பானிய base ball அணியைக் கௌரவிக்குமுகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது அறிமுகப்படுத்தப்பட்ட 'பெஷன் ஷோ' 16.07.2003ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்றது. இதில் அனைவரையும் கவரும் வகையில் புலிச் சின்ன வடிவில் தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும். அறிமுகமான அதே நாளில் மட்டும் 500 சோடிகள் விற்பனையாகியுள்ளது. இது 85 டொலர்கள் பெறுமதியானதும் கூட.



# கொலைகார மீன்



கடலில் வாழும் உயிரினங்கள் பற்றி ஓரளவுக்கு நமக்குத் தெரியும். சொறி எனும் மீனினம் பற்றி நமக்குத் தெரிந்ததை விடவும் அதிகமான வகைகளைக் கடலோடிகள் கண்டுபிடித்துள்ளனர். படத்தில் காணப்படும் இந்த சொறி மீனினமானது அதிக விஷத்தினைக் கொண்டுள்ளது. இது ஒரு தடவை மனிதன் மீது பட்டால் அதனுடைய விஷம் சாதாரண ஒரு மனிதனைக் கொல்லக்கூடிய சக்தியை விட 63 மடங்கு விஷத்தை பாய்ச்சக் கூடியது. மனிதனுக்கு ஆபத்தான பல வகை கடல் வாழ் உயிரினங்கள் இருந்தபோதும் இந்த சொறி வகை மீனினத்துக்கு மட்டுமே கடலோடிகள் பயந்து நடுங்குகின்றனர். இது நிலத்தில் இல்லாத வரைக்கும் நாம் அதிர்ஷ்டசாலிகளே!

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



### சாரோன் 18.07.2003

Sons are heritage from the Lord children a reward from him.

[illegible]

## 4வது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் வசீகரன் சங்கீத் | 02.08.2003



புலிமச்சிநாதகுளம், எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகக் கொண்ட வசீகரன்–நவசக்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சங்கீத் தனது நாலாவது பிறந்த நாளை 02.08.2003 அன்று தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா (லண்டன்)– அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பூட்டம்மாமார், பெரியப்பா குடும்பத்தினர், தேவி அத்தை, பெரிய மாமா குடும்பத்தினர், ஆசைமாமா குடும்பத்தினர், மனோ மாமா குடும்பம் (ஜேர்மனி), தேவா மாமா தம்பதியினர், ஆனந்தம் மாமா குடும்பத்தினர் (ஜேர்மனி), பெரியம்மா குடும்பத்தினர், ஆசையம்மா குடும்பத்தினர், சின்னம்மா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சங்கீத்தை இறைவன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : ம.வசீகரன் (லண்டன்).




[illegible] ஜூலை 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.